# கேன

# உபநிஷதம்



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | கேன உபநிஷதம் |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2020 |
| **அளவு** | : | A4 |
| **பக்கங்கள்** | : | 78 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

# கேன உபநிஷதம்

(எல்லாம் யாரால்?)

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# கேன உபநிஷதம்

எல்லாம் யாரால்?

உலகம் இயங்குகின்றது, உயிரினங்கள் இயங்குகின்றன, நாம் இயங்குகிறோம் – நமது உடல் இயங்குகிறது, மனம் இயங்குகிறது, பிராணன் இயங்குகிறது. இந்த இயக்கங்கள் யாரால் நிகழ்கின்றன? இந்த இயக்கங்களுக்கான ஆற்றலை அளிப்பது யார்? என்ற கேள்வியுடன் உபநிஷதம் ஆரம்பிக்கின்றது.

'**கேன**' என்றால் **'யாரால்'** என்று பொருள்.
कौन है? By Whom?

கேன உபநிஷதம், இந்த பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கான மூல சக்தியை '**யார்**' என்று தேடி விடை காண முயல்கிறது. கேன என்ற சொல்லோடு துவங்குவதாலும் இந்த உபநிஷதம் இப்பெயர் பெற்றது என்று கூறலாம். இதில் மொத்தம் 30 மந்திரங்களைக் கொண்ட மூன்று அத்தியாயங்கள் உள்ளன. முதல் அத்தியாயத்தில் 9 மந்திரங்கள், இரண்டாவது அத்தியாயத்தில் 12 மந்திரங்கள் மற்றும் மூன்றாவது அத்தியாயத்தில் 9 மந்திரங்கள் என 30 மந்திரங்கள் ஆகும்.

எல்லா உபநிஷதங்களும் ஒரு சாந்தி மந்திரத்தோடு ஆரம்பிக்கும். பொதுவாக, இந்த சாந்தி மந்திரங்கள், அமைதியை வேண்டி சொல்லப்படுபவை. இந்த சாந்தி மந்திரங்களின் முடிவில் '**ஓம் சாந்தி**' என்று மும்முறை சொல்லப்படும். இதற்கு "வாக்கு, மனம் மற்றும் உடலளவில் அமைதி" யை வேண்டுவதாகவே நாம் கருத வேண்டும்.

உபநிஷதங்களை நமக்கு அளித்த முனிவர்கள் தங்களை முன்னிலைப்படுத்தி எதையும் கூறாமல், '**எங்களுக்கு அதை விளக்கிய மகான்கள் இவ்வாறு கூறினார்கள்**' என்றே குறிப்பிடுகிறார்கள். அதாவது, இந்த உண்மைகள் ஏதோ தங்களது திறமையால் பெறப்பட்டவைகள் அல்ல. மகான்களின் அருளினால் கிடைத்தவைகள் என்று கூறுவது போல இது உள்ளது.

பொதுவாக, நாம் மனத்தூய்மை பெற்று இறைவனை நோக்கி முன்னேற, முன்னேற மட்டுமே இவற்றின் உட்பொருள் மென்மேலும் ஆழமாகப் புரியும். மீண்டும், மீண்டும் படித்து, மந்திரங்களின் பொருளை ஆழமாக சிந்தித்து, அதற்கான ஆத்மஞான சாதனைகளிலும் ஈடுபட்டால்தான் உபநிஷதங்களை உண்மையாகப் புரிந்து கொள்ள முடியும். அவற்றின் அற்புதத்தில் ஆழ்ந்து மனம் மகிழ முடியும்.

**உபநிஷதங்கள், பிரம்ம சூத்ரம், பகவத் கீதை** போன்றவையெல்லாம் ஆழ்ந்த சூட்சமக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டவைகள். இவைகள் இந்த உலகின் அழியாத தத்துவப் பெட்டகங்கள் எனலாம்.

சாந்தி மந்திரம்:

ஓம் ஸஹ நாவவது ।
ஸஹ நௌ புனத்து ।
ஸஹ வீர்யம் கரவாவஹை ।
தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை: ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

ஆச்சாரியர், சீடர் ஆகிய நம் இருவரையும் இறைவன் காப்பாராக! அறிவின் ஆற்றலை நாம் இருவரும் அனுபவிக்குமாறு ஊக்குவிப்பாராக! நாம் இருவரும் ஈடுபாடு மிக்க ஆற்றலுடன் உழைப்போமாக! கற்றது நமக்குப் பயனுள்ளதாக விளங்கட்டும். எதற்காகவும் நாம் ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக. அதாவது, குறைகளும், தடைகளும் இல்லாமல் உபநிஷதக் கல்வி நிறைவேற இந்த மந்திரம் பிரார்த்திக்கிறது.

சாந்தி மந்திரம்

ॐ आप्यायन्तु ममाङ्गानि वाक्प्राणश्चक्षुः
श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि ।
सर्वं ब्रह्मौपनिषदं
माऽहं ब्रह्म निराकुर्यां मा मा ब्रह्म
निराकरोदनिराकरणमस्त्वनिराकरणं मेऽस्तु ।
तदात्मनि निरते य
उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु ते मयि सन्तु ।
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் ஆப்யாயந்து மமாங்கானி வாக்ப்ராண: சக்ஷு:
ச்ரோத்ரமதோ பலம் இந்த்ரியாணி ச ஸர்வாணி ।
ஸர்வம் ப்ரஹ்ம உபநிஷதம்
மாஹம் ப்ரஹ்ம நிராகுர்யாம் மா மா ப்ரஹ்ம
நிராகரோத்(அ)னிராகரணமஸ்து அனிராகரணம் மே அஸ்து ।
ததாத்மனி நிரதே ய
உபநிஷத்ஸு தர்மா: தே மயி ஸந்து தே மயி ஸந்து ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

பொருள்:

எனது அவயங்களான வாக்கு, பிராணன், கண்கள், காதுகள், மற்றும் எல்லாப் புலன்களும் மிகுந்த ஆற்றலுடன் விளங்கட்டும். உபநிஷதங்கள் கூறுகின்ற இறைவனே எல்லாம். அந்த இறைவனை நான் மறுக்காதிருப்பேனாக.

இறைவனிடமிருந்தும் மறுப்பு இல்லாதிருக்கட்டும். உபநிஷதங்களில் கூறப்பட்டுள்ள தர்மங்கள், ஆத்மாவை நாடுகின்ற என்னில் குடிகொள்ளட்டும். எதையும் சாதிப்பதற்கு உறுதியான உடலும் திடமான மனமும் வேண்டும். இரண்டையும் பிரார்த்திக்கிறது இந்த மந்திரம்.

மிருத்யுஞ்ஜய மந்திரம் (மரணத்தை வெல்லும் மந்திரம்)

இதன் உண்மையான பொருள் மரணமற்ற நிலையை அடைவது. மரணத்தை வெல்வது.

எப்படி?

இந்த உடலால் மரணத்தை வெல்வதா? உடலை அழியாமல் வைத்துக் கொள்வதா?

இல்லை!

மனம் அடைந்த பக்குவத்தால் மரணத்தை வெல்வது.

இந்த **மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்** (Maha Mrityunjaya Mantra) ரிக்வேதம் மண்டலம் 7.59.12 இல் வருகின்றது. இது வசிஷ்ட மைத்ராவருணிக்குக் கூறப்பட்ட மந்திரம் ஆகும். நோய் தாக்கியவர்கள் மற்றும் உடல் நலன் குறைபாடுகளில் உள்ளவர்கள் இந்த மந்திரத்தை தொடர்ந்து தினமும் சொல்லி வந்தால், அவர்கள் விரைவில் நோய்களில் இருந்து குணமாக முடியும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

ரிக் வேதத்திலும், யஜூர் வேதத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள இந்த மகா மிருத்யுஞ்ஜய மந்திரத்தை தினமும் ஜெபிப்பதன் மூலம் மரண பயம் நீங்கும், ஆயுள் அதிகரிக்கும், இறை வழிபாட்டில் நாட்டம் ஏற்படும், தீராத நோய் தீரும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனான்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்

த்ரயம்பகம் = முக்கண்ணனை
யஜாமஹே = பூஜித்து வழிபடுகிறோம்.
ஸுகந்திம் = இயற்கையான நறுமணம் உடையவரும்
புஷ்டிவர்த்தனம் = கருணையால் அடியார்களை ஊட்டி வளர்ப்பவரும் ஆகிய
உர்வாருகம் இவ = வெள்ளரிப் பழம் காம்பிலிருந்து விடுபடுவது போல
பந்தனாத் = பிடியிலிரு
ம்ருத்யோ: = சாவினுடைய
முக்ஷீய = உமது அருளால் விடு படுவோமாக!
மா அம்ருதாத் = முக்தி வழியில் இருந்து விலகாமல் இருப்போமாக!

இயக்கையாகவே நறுமணம் கொண்டவரும், உயிர்களிடம் கருணையை ஊட்டி வளர்ப்பவருமாகிய முக்கண்களைக் கொண்டவனே. உங்களை வழிபடுகிறோம். அதாவது, கொடியின் காம்பில் இருந்து வெள்ளரிப்பழம் எப்படி விடுபடுகிறதோ? அதுப்போல, என்னை பிடித்துக் கொண்டுள்ள பிறப்பு – இறப்பு எனும் சம்சார பந்தத்தை விடுவித்து, சன்மார்க்க ஞான நெறியிலிருந்து பிறழாமல் வாழ்ந்திட அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

பொதுவாக ஒவ்வொருவர் வீட்டிலும் 80, 90 வயதுப் பாட்டி, பாட்டனார் இறந்தால் அதைக் '**கல்யாணச் சாவு**' என்று சொல்லுவார்கள். அவர்களது மறைவினால் யாருக்கும் பெரிய வருத்தம் இருக்காது.

ஏனெனில், பிறந்தவர் எல்லாம் இறப்பதை எல்லோரும் அறிவோம்.

அதுவே, இயற்கையின் நியதி.

அவர்கள் இறப்பில் ஏன் நமக்கு வருத்தம் வரவில்லை?

அவர்கள் நிறைந்த வாழ்வு வாழ்ந்து பேரன், பேத்தி, கொள்ளுப் பேரன்களைப் பார்த்தாகிவிட்டது. அதாவது நன்கு பழுத்த முழு வெள்ளரிப்பழம் போல ஆகிவிட்டனர். இனியும் அது அப்படியே கொடியில் இருந்தால் பழமே தன்னால் பிளவுபட்டு வெடித்துவிடும். அதற்காக இயற்கையின் நியதிப்படி அந்த கொடியின் காம்பே பழத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும்.

அந்த வெள்ளரிக் கொடியின் காம்பு எப்படி வெள்ளரிப் பழத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு விலகியதோ? அதுப்போல, இந்த பெரியவர்களும் இவர்களது உறவுகளால் விடுவிக்கப்பட்டு, மரணத்தை அடைகின்றார்கள்.

அவருடைய பிறிவால் அவர்களுடைய உறவினர்களுக்கும் வருத்தம் இல்லை.

அதாவது பந்தங்களை அதிரடிப் போகில் தூக்கி எறியாமல், நம்மைப் பிடித்த பந்தங்கள்–கட்டுகள்–தளைகள் – விலங்குகள் – தானாக, 'ஸ்மூத்'தாக, விலகுவதையே வெள்ளரிப்பழ உவமை காட்டுகிறது.

பொதுவாக, எல்லா பழங்களுமே பழுத்தவுடன் மரத்திலிருந்து, தானாகவே தன்னை விடுவித்துக் கொண்டு கீழே விழும். இந்த நிலையில், அந்தப் பழன் விழுந்த வேகத்தில் இரண்டாகப் பிளந்து, வீணாகப் போவதையும் நாம் நடைமுறையில் பார்க்கின்றோம்.

ஆனால், வெள்ளரிப்பழம் அவ்வாறு தானாகவே தன்னை விடுவித்துக் கொள்வதில்லை. அது, அதன் கொடியினால்தான் விடுவித்துக் கொள்ளப்படுகின்றது.

ஆகையாலதான் இந்த உவமை.

வெள்ளரிப் பழம் காம்பில் இருந்து விடுபடுவதுபோல சாவில் இருந்து விடுபடுவோமாக.

அது உறவுகளால் உதாசீனப்படுத்தப்பட்டு, நம் முதுமையின் காரணமாக நாமே மனம் வெதும்பி மரணத்தை அடைவதற்கு பதிலாக, பக்குவமாக நம் உறவுகளே நம்மை விடுவிக்கும்போது, அது அவர்களுக்கு வருத்தம் அளிப்பதில்லை. ஆனால், நமக்கு வருத்தம் வராமல் இருக்க வேண்டுமானால், அதற்கு **ஆத்ம ஞானம்** அவசியம்.

ஆத்ம ஞானத்தின் வாயிலாக, வெள்ளரிப்பழம் போல மனமும், உடலும் பழுத்த நிலையில் மரணமடையும்போது, நம்முடைய சுற்றங்கள், பந்தங்கள் நம்மை பிரிவதில் கஷ்டமின்றி இருப்பார்கள். நாமும் அவர்களைப் பிரிவதில் கஷ்டமின்றி பிரிவோம்.

அவ்வாறு, பிரிந்த பின்பு, மீண்டும் பிறப்பின்றி **மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வோம்** என்பதே இந்த மந்திரத்தின் பொருள் என்பது ஆன்றோர் வாக்கு.


ஆக, பிறப்பு – இறப்பு எனும் சம்ஸார சாகரத்தில் நம்மை முழ்கடித்து விடாமல், கரை சேர்க்கும் உபாயம் ஒன்று உள்ளது. அதுவே உபநிஷதங்கள் வாயிலாக நமக்கு ஊட்டப்படுகின்றது.

அந்தவகையிலே, இப்போது இந்த **கேன உபநிஷதம்** என்பதையும் பார்க்க இருக்கின்றோம். இந்த கேன உபநிஷதம் நம்மை ஆழ்ந்த சிந்தனையின் முகமாக இந்தப் பிரபஞ்சம், இயற்கை மற்றும் பல்வேறு உயிரினங்கள் என அனைத்துக்கும் ஆதாரமாக விளங்குவது யாரால்? என்பதை சிந்திக்கத் தூண்டுகிறது.

விஞ்ஞானிகளாலும், பகுத்தறிவு வாதிகளாலும் கூட விடைகள் கூறவே முடியாத மிக உயரிய, ஆனால் மிக நுட்பமான விஷயம் இது.

ஒரு மின்சாதனம் இயங்குகிறது என்றால் மின்சாரத்தால் இயங்குகிறது. அப்படியானால் மனித உடலை இயக்குவது யார்? மனித உயிரை இயக்குவது யார்? இந்த உலகத்தின் சுழற்சி முறையை வகுத்தது யார்? இந்த பிரபஞ்சத்திலிருக்கும், அண்டசராசரங்களை இயக்குவது யார்? அவைகள் யாரால் படைக்கப்பட்டன. அவைகள் அனைத்தும் ஒரு ஒழுங்கு முறையில் நியதி மாறாமல் எவ்வாறு இயங்க முடிகின்றது? இதெல்லாம் யாரால்? இதுபோன்ற சிந்தனைகள் நம்முள் எழுவதற்கு எளிய பதில்களை நமக்கு கொடுப்பதே இந்த கேன உபநிஷதம் என்றால் அது மிகையாகாது.

உபநிஷதங்கள் எல்லாமே நம்மை **இறைவழி ஞானம்** பெற்றுக் கொள்ளவதற் காகத்தான் வழி நடத்துகின்றன. அனாலும் கூட அவற்றுக்கென்று ஒவ்வொரு தனித்தனி சிறப்பியல்புகள் இருக்கின்றன. அதற்குக் காரணம், அந்தந்த காலகட்டங்களில் வாழ்ந்த மக்களின் மன நிலைக்கு ஏற்றவாறு ரிஷிகளின் வெளிப்பாடுகளாகப் பார்க்கப்படுகின்றன.



# அத்தியாயம் 1

எல்லாம் யாரால் இயங்குகின்றன?:

எல்லாம் யாரால்? இவை எல்லாம் யாரால்? உடல், மனம், பிராணன் போன்றவை செயல்படுவது யாரால் என்ற கேள்வியுடன் உபநிஷதம் ஆரம்பிக்கிறது.

ओं केनेषितं पतति प्रेषितं मनः
केन प्राणः प्रथमः प्रैति युक्तः ।
केनेषितां वाचमिमां वदन्ति चक्षुः
श्रोत्रं क उ देवो युनक्ति ॥ १ ॥

ஓம் கேனேஷிதம் பததி ப்ரேஷிதம் மன:
கேன பிராண: ப்ரதம: ப்ரைதி யுகத: I
கேனேஷிதாம் வாசாமிமாம் வதந்தி சக்ஷு:
ச்ரோத்ரம் க உ தேவோ யுனக்தி II 1 II

பொருள்:

ஏவப்பட்ட மனம் யாருடைய விருப்பத்தால் செல்கிறது? முக்கியப் பிராணனை செலுத்துவது யார்? யாருடைய சங்கல்பத்தால் வாக்கு பேசப்படுகிறது? கண்களையும் காதுகளையும் எந்த தேவன் செயல்படுத்துகிறான்?

மனம் என்ற ஒன்று இருப்பதை நாமறிவோம். நாமறிந்தவற்றுள் விரைவானது மனம். இதற்கு இந்த வேகத்தைக் கொடுத்தது யார்?

பிராணன், எங்கும் நிறைந்து உலகை இயக்குகிற ஆற்றலே பிராணன். அந்தப் பிராணனின் ஓர் அம்சம் நம்மிலும் செயல்படுகிறது. நமது உடல், அதன் இயக்கங்கள், மனம், அதன் செயல்பாடுகள் அனைத்தும் பிராணன் என்கிற ஆற்றலினாலேயே செயல்படுகின்றன.

இந்தப் பிராணனை இயக்குவது யார்?

வாக்கு எதனால் ஏவப்பட்டு இயங்குகிறது?

கண், காது என்ற இரண்டு பெயர்களின் மூலம் அனைத்து புலன்களும் சுட்டிக்காட்டப் படுகின்றன. புலன்கள் யாரால் செயல்படுகின்றன?

உடம்பும், மனமும், புலன்களும், பிராணனும் எல்லாம் இயங்குவது யாரால்? என்பது கேள்வி.

(இதை ஒரு பெரும் மனோதத்துவ ஆராய்ச்சியின் அடிப்படையாகக் கூடக் கொள்ளலாம்! இயங்குவது நம்முடைய மனம்! ஆனால், அது என்றேனும் நமது கட்டுப்பட்டுக்குள் இயங்குகிறதா?

ஒரு சிறிய கதை சொல்வார்கள்! செம்பைத் தங்கமாக்கும் வித்தை தெரிந்த ஞானி ஒருவர். மிகக் கஷ்டப்படும் ஏழைகளுக்கு மட்டும் உதவி செய்வார். ஆடம்பரமாக இருக்க மாட்டார். அவர் சிஷ்யன் நேர் மாறானவன். ஞானி இறக்கும் தருணத்தில் சிஷ்யன் அவரிடம் அதைக் கற்றுத் தரச் சொல்லி தொந்திரவு செய்தான். அவன் நோக்கம் ஞானிக்கு தெரியும்! அவர் எதோ சும்மா சில மூலிகைகளை அரைத்து அதில் செம்பை ஊற வைத்து அதன் பின் ஒரு மந்திரம் சொல்லி அதை ஒரு நாள் முழுக்க விடாமல் சொல்ல வேண்டும்! ஆனால் ஒரே ஒரு விஷயம்! மந்திரம் சொல்லும் போது குரங்கை மட்டும் நினைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லி விட்டு உயிர் நீத்தார்!

இது நடக்கிற காரியமா? குரங்கை நினைக்கக் கூடாதென்று சொன்னால் இந்த மனக்குரங்கு சரியாக அதைத்தானே நினைத்துக் கொள்ளும்? இன்னும் நம் மனதுக்கு மட்டுமே ஒரே வினாடி நேரத்தில், நினைத்த மாத்திரம் மிகவும் வேகத்தில் உலகத்தின் எந்தக் கோடிக்கும் செல்லும் ஆற்றல் உள்ளது?

அப்படி நம் மனதின் நினைவுகள் சம்பந்தமில்லாமல் படுவேகமாக செல்ல வைப்பது எது? இந்த மனதை ஒரு நிலையில் கொண்டு நிறுத்துவது சாத்தியமா? இதைத்தானே இன்றைக்கு யோகம் என்ற பெயரில் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதுவும் ஓரிரு வினாடிகள் மனதை அசையாமல் பழக? இந்த மனம் மிகுந்த சிக்கலான தன்மையுள்ளது.

மனம் என்ற உறுப்பு உடலில் கிடையாது. பின் அது எப்படி இயங்குகிறது? இதையெல்லாம் இன்றைய விஞ்ஞானிகள் ஆராய்ந்தபடி இருக்கிறார்கள். இது குறித்துதான் இந்த உபநிஷதமும் ஆராய்கிறது!)

மனத்தின் மனமாக:

श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यद्
वाचो ह वाचं स उ प्राणस्य प्राणः ।
चक्षुषश्चक्षुरतिमुच्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥ २॥

ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம் மனஸோ மனோ யத்
வாசோ ஹ வாசம் ஸ உ பிராணஸ்ய பிராண: l
சக்ஷுஷச் சக்ஷுரதி முச்ய தீரா:
ப்ரேத்யாஸ்மால் லோகாதம்ருதா பவந்தி ll 2 ll

பொருள்:

காதின் காதாக, மனத்தின் மனமாக, வாக்கின் வாக்காக, பிராணனின் பிராணனாக, கண்ணின் கண்ணாக இருப்பது ஆத்மா. உணர்வு விழிக்கப்பெற்றவன் இந்த உண்மையை உணர்ந்து, புலன் உலகிலிருந்து விலகி, மரணமற்ற நிலையை அடைகிறான். இதற்கு முந்தைய மந்திரத்தில் '**உடம்பும் மனமும் எல்லாம் யாரால் இயங்குகின்றன?**' என்ற கேள்வி எழுப்பப்பட்டது. ஆத்மா என்று இந்த மந்திரம் பதில் சொல்கிறது.

உடம்பு, மனம், ஆத்மா என்று பலவற்றின் தொகுதியால் ஆனவன் மனிதன். உடம்பின் செயல்பாடுகளோ, அது இயங்கும் முறையோ பொதுவாக நமக்குத் தெரியாது என்றாலும் உடம்பு என்ற ஒன்று இருப்பதை நாம் அறிவோம்.

உடம்பிற்குப் பின்னால் மனம் ஒன்று இருப்பதையும் அறிந்துகொள்ள முடியும். உடம்பு வெறும் கருவி மட்டுமே. அதனை இயக்கிக் கொண்டிருப்பது மனம். இந்த மனம் எங்கே இருக்கிறது, எதனால் ஆனது, எப்படி இயங்குகிறது? என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. அது உடம்பை இயக்கிக் கொண்டிருப்பது தெரிகிறது. காது, கண் போன்ற புலன்கள் அதன் வாசல்கள் ஆகும். இந்த வாசல்களின் வழியாக மனம் புற உலகுடன் தொடர்பு கொள்கிறது. அனுபவங்களைப் பெறுகிறது.

மனம் சுதந்திரமானதா, அல்லது, மனத்திற்குப் பின்னால் அதனை இயக்கியபடி வேறு ஏதேனும் உள்ளதா என்பதே முதல் மந்திரத்தில் எழுப்பப்பட்ட கேள்வி. மனத்திற்குப் பின்னால் ஆத்மா என்ற ஒன்று இருக்கிறது. அதுவே மனத்தையும் உடம்பையும் இயக்குகிறது என்று இந்த மந்திரம் பதில் சொல்கிறது.

'புற உலகங்களைக் கண் பார்க்கிறது. கண்ணை மனம் பார்க்கிறது. மனத்தில் எழுகின்ற எண்ண அலைகளை அறிவு ஆராய்கின்றது. எனவே மனத்தையோ, அதன் செயல்பாடுகளையோ நாடிப் பயனில்லை என்பதை விழிப்புணர்வு பெற்றவன் அறிந்து கொள்கிறான். அவன் அந்த தூய அறிவாகிய ஆத்மாவை நாடுகிறான்.

ஆத்மாவை நாடுவதன் பலன் என்ன? மரணமற்ற நிலை.

உண்மைப் பொருள்:

'உடலுக்கும் மனதிற்கும் உள்ளே அழியாத உண்மைப் பொருள் இருக்கிறது. இந்தப் பொருளுக்குப் பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை. தானாக நிற்கும் இது எங்கும் நிறைந்தது.

ஏனெனில், 'இதற்கு உருவம் இல்லை' என்று கூறுகிறார் விவேகானந்தர். நமது வாழ்க்கையை இயக்கியபடி நமது உடல் மனச் சேர்க்கைக்குப் பின்னால் இருப்பது ஆத்மா. அந்த ஆத்மா எத்தகையது என்பதை வரும் மந்திரங்கள் கூறுகின்றன.

(ஆத்மாவுக்கு உருவமில்லை என்றால் எங்கும் நிறைந்தது என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்று நமக்குத் தோன்றலாம். இதற்கு காற்றை உதாரணமாகக் கொள்ளலாம். காற்று வெளியில் பரவி நிற்கிறது. அதே நேரம் நீங்கள் ஒரு டியூபுக்குள் காற்றை செலுத்தினால் அது அங்கும் இருக்கிறது. டியூபில் உள்ள காற்றுக்கும் உருவமில்லை. வெளியில் உள்ள காற்றுக்கும் உருவமில்லை. அதே போல்தான் ஆத்மா. இது உருவமற்று இருப்பதால் பிரபஞ்சமெங்கும் பரமாத்மாவின் ஆன்ம சக்தியாக உள்ளது. அதே நேரம் அது மனிதனின் உருவத்துக்குள்ளும் அருவமாக அடங்கி நிற்கிறது!)

न तत्र चक्षुर्गच्छति न वाग्गच्छति नो मनः ।
न विद्मो न विजानीमो यथैतदनुशिष्यात् ॥ ३॥

ந தத்ர சக்ஷுர் கச்சதி ந வாக் கச்சதி நோ மன: ।
ந வித்மோ ந விஜானீமோ யதைத தனுசிஷ்யாத் ॥ 3 ॥

பொருள்:

கண் செல்லவில்லை, பேச்சு வரவில்லை, மனம் இல்லை. இந்த நிலையில் ஒரு சீடனால் எதை, எப்படிச் செய்ய முடியும்? என்பது எங்களுக்குத் தெரியவில்லை அல்லது புரியவில்லை.

அதாவது, ஆத்மாவுக்கு புலன்கள் இல்லை என்ற அடிப்படையில் இந்த மந்திரம் கூறவருகின்ற விசயம் உள்ளது. அதாவது, ஆத்மா மனதின் மூலமாக மட்டுமே மனித உடலைக் கொண்டு, புலன்களின் வழியாக ஒவ்வொன்றையும் அறிய முடியுமே தவிர, அது நேரடியாக எல்லாவற்றியும் அப்படியே அறியாது. அதற்கு அவ்வாறு அறிய வேண்டிய அவசியமும் இல்லை. அதன் அபரிமிதமான வைபவத்தைக் கொண்டு, அது உண்டாக்கிய பல்வேறு உடல்கள் மூலம் பயணித்து, அவைகளை தன் தேவைகளுக்கு கையாளும் கருவிகளாகக் கொண்டுள்ளது. அதனால்தான் இந்த உடல்களை எல்லாம் ஆத்மாவின் உபயோகத்திற்கான உபகரணம் (கருவி) என்று கூறுகின்றோம்.

சரி! மனிதர்களாகிய நாம் நம்மிடமுள்ள புலன்களில் ஒன்றாகிய இந்த கண்களைக் கொண்டு எல்லாவற்றையும் கண்டுவிட முடியுமா? என்றால் அது முடியாது.

எப்படி?

நுண்கிருமிகளை இந்தக் கண்கள் கண்டுவிடுமா? அல்லது தொலைவில் உள்ள ஒரு மலையின் மீது இருக்கின்ற மரத்தை அது என்ன மரம்? என்று இதே கண்கள் கண்டு மனதிற்கு அறிவுக்குமா? அதுவும் முடியாது.

ஆக, எப்படி இவைகளையெல்லாம் நாம் அறிவது?

அதற்கு நம்மிடம் உள்ள பிரத்யேக அறிவாகிய ஆறாம் அறிவைக் கொண்டு நம்முடைய கண்டுபிடிப்புகளாகிய தொலைநோக்கியால் தூரத்தில் உள்ள பொருட்களைப் பார்க்க முடியும். அதே சமயம் அந்த தொலை நோக்கியைக் கொண்டே நம் அருகிலுள்ள ஒன்றைப் பார்க்க முடியாது. பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை.

அவ்வாறே, நம்முடைய மற்றொரு கண்டுபிடிப்புக் கருவியாகிய நுண்ணோக்கியைப் பயன்படுத்தி நம் அருகிலேயே இருக்கின்ற நம்முடைய கண்களுக்குப் புலனாகாத நுண்ணிய கிருமிகளை நம்மால் பார்க்க முடியும்.

இதிலிருந்து என்ன நமக்குப் புரிகின்றது?

நம்முடைய புலன்களுக்கு அப்பாற்பட்ட அனேக விசயங்களை நாம் அதற்கான பிரத்யேக கருவிகளைக் கொண்டு கண்டு கொள்வதைப் போல, அந்த ஆத்மாவாகிய அறியும் தன்னால் படைக்கப்பட்ட உயிரினங்களின் மூலமே அனைத்தையும் அறிய முயற்சிக்கின்றது என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

காரணம், ஆத்மாவாகிய தூய அறிவின் திறன் எல்லையற்றது. அது எப்படி வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் படைக்கும், அவ்வாறு படைக்கப்பட்ட உயிரினங்களில் பிரத்யேக பகுத்தறிவுப் பரிமாணத்தில் புத்தி சக்தியில் மேம்பட்ட மனிதனைக் கொண்டே இன்னும் பலவற்றைப் படைக்கும்.

இதனால்தான் எல்லாவற்றையும் இயக்கும் இயக்கதாரியாக அந்த ஆத்மாவே இருக்கின்றது என்கிறோம். ஆனால், அது நேரடியாக எதையும் இயக்காது, அதற்கான கருவிகளைக் கொண்டு மட்டுமே இயக்கும். அதனால்தான் ஆத்மா இயங்காதது என்கிறோம்.

அந்த அவ்வாறு படைப்பட்ட மனிதனைக் கொண்டு, இன்னும் பலவற்றைப் படைக்கும், காக்கும், அழிக்கும். அத்தகைய படைப்பில் பல மாற்றங்கள் செய்யும், அத்தகைய மாற்றங்களை இன்னும் மேம்படுத்தும். இவ்வாறுதான் அது எல்லாவற்றையும் செய்கின்றது.

ஆனால், உண்மையில் மனிதர்களாகிய நம்மூலமாகத்தான் இதையெல்லாம் செய்கின்றது என்று அறிவதே ஞானம். இதை அறியாதவன் மனிதனாக வந்திருந்தும், அதை அறிந்துக் கொள்ளக்கூடிய அறிவை அவன் அடையவில்லைன் என்றுதான் கூற வேண்டும்.

இதைத்தான் நாம் எடுத்து புரிய வைக்கும்போது, உங்களுக்கு என்ன சொல்கின்றோம். பூசைகள், ஜப, தபங்கள் மற்றும் மூச்சு பயிற்சி, யோகா மேலும், வாசி என எதை எதையோ செய்துக் கொண்டிருக்கின்ற மனிதர்கள் எல்லாம் பள்ளிக்கூடங்களில் எப்படி பல்வேறு வகுப்பறைகள் உள்ளனவோ, அதற்கேற்ற பல்வேறு மாணவர்கள் ஒன்றாம் வகுப்பிலிருந்து பனிரெண்டாம் வகுப்புவரை படிக்கின்றார்களோ? அதுப்போலத்தான் இங்கும் ஆன்மீகத்தில் உள்ள **ஆன்மவியல் அறிவு** என்று கூறுகின்றோம்.

ஆகவே, படைக்கப்பட்டவைகளில் கூட பகுத்தறிவு நிலைக்கு உயர்ந்து வந்திருந்தாலும் ஒருவரின் பக்குவத்தில் மற்றொருவர் கிடையாது, அதுப்போலவே, பரமனால் படைக்கப்பட்ட பலவற்றிலும் ஒன்றின் பணியை மற்றொன்று செய்ய இயலாது.

ஆகவே, மனிதனிடம் காணப்படும் புலன்களும் அவ்வாறே. அதன் அடிப்படையில் மனிதனிடம் உள்ள இந்த புலன்கள் உலகை பலவாறாக அனுபவிப்பதற்காகத்தான் உள்ளது என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அதேசமயம் அந்த புலன்களைக் கொண்டு மட்டுமே, அவைகளுக்கு ஆதாரமான ஆத்மாவை (அறிவை) அறிய முடியாது. ஆகவே, ஆத்மாவை அறிவதற்கான ஒரே ஒரு கருவி நம்மிடம் உள்ள மனம் மட்டும்தான். அந்த மனமும் பகுத்தறிவுப் பரிமாணத்தில் உயர்ந்து மனிதனாக வந்துவிட்டாலும், அந்த மனம் படிக்க வேண்டிய பாடங்களைப் படிக்காமல்,

பயனற்ற பாடங்களைப் படிப்பதினால்தான், மனிதன் புனிதனாக மாற முடியவில்லை என்பதை நாம் அனுபவத்தில் காண்கின்றோம்.

புலன்களால் அறிந்து, அனுபவிக்க இயலாத ஒன்றை எப்படிப் புலன்களால் விளக்க இயலும்?

அந்த வகையிலே, நம்மால் புலன்களால் அறிய முடியாத ஆத்மாவை, இதே புலன்களைக் கொண்டு எப்படிப் படித்துப் புரிந்துக் கொள்ள முடியும் என்று கேட்டால், இந்த ஆன்மவியல் பாடங்களைப் பொருத்தவரை, மனதிற்கு எந்த ஒரு புதிய அறிவையும் நாம் புகட்டுவது கிடையாது.

அதேசமயம், இந்த ஆன்மவியல் பாடங்கள் மூலமாக, ஏற்கனவே, மனம் ஏற்றி வைத்துக் கொண்டுள்ள ஏகப்பட்ட தவறான புரிதல்களை, அந்த மனதிற்கு சுட்டிக்காட்டி, அதன்வாயிலாக, அந்த மனதின் அறியாமைகள் அகற்றப்பட்டு, அதே மனம் தன்னுடைய உயர் பரிமாண நிலையாகிய தூய அறிவு நிலைக்கு வந்தவுடன், அது தன் சுயத்தில், தூய அறிவாய் பிரகாசிக்க முடியும்.

இந்த நிலைக்கு உயர்ந்து வந்த மனம் "**இருப்பதெல்லாம் இறைவன்**" என்று பார்க்கும். அதுவே, இந்த மனப் பக்குவத்திற்கு உயர முடியாத மனம், மற்ற விசய, சுகங்களில் நாட்டம் கொண்டு, "**கண்டதே காட்சி! கொண்டதே கோலம்!**" என்பதாக மனம் போன போக்கில் போய்க் கொண்டிருக்கும்.

இதுப் புரியாமல், அவரவகள் மதம் சார்ந்து அல்லது சமயங்கள் சார்ந்து, அவர்களாகவே உண்டாக்கிக் கொண்ட கடவுள் அந்த குறிப்பிட்ட உருவத்தில்தான் வரவேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்ற மனிதர்கள் இன்னும் பகுத்தறிவுப் பரிமாணத்தில் உயரவே இல்லை என்பதை நாஸ்திகர்கள் கூற வேண்டியதில்லை. அனைத்தையும் அறிந்த ஆஸ்திகர்கள் கூறுகின்றார்கள் என்பதையும் இங்கு ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

எனவேதான், தாம் ஆன்ம அனுபூதி பெற்றவராக இருந்தும், தம்மால் அதனை விளக்க இயலவில்லை என்று பணிவுடன் கூறுகிறார் இந்த உபநிஷத முனிவர்.

**ஆத்மா அறிய இயலாதது:**

अन्यदेव तद्विदितादथो अविदितादधि ।
इति शुश्रुम पूर्वेषां ये नस्तद्व्याचचक्षिरे ॥ ४॥

அன்யதேவ தத்விதி தாததோ அவிதி தாததி ।
இதி சுச்ரும பூர்வேஷாம் யே நஸ்யத் வ்யாசசக்ஷிரே ॥ 4 ॥

பொருள்:

அந்த ஆத்மா அனைத்தையும் அறிந்துக் கொண்டுள்ளது. அதே ஆத்மா எதையும் அறிந்துக் கொள்ளாமலும் இருக்கின்றது. அதாவது, அறிந்தவற்றிலிருந்து வேறுபட்டது. அறியாதவற்றை விட மேலானது. எங்களுக்கு அதைப்பற்றி நம் முன்னோர்கள் இப்படித்தான் கூறியிருக்கின்றார்கள் என்கிறார் இந்த உபநிஷத ரிஷி.

உலகில் நாம் அறியாதவைகள் எவ்வளவோ உள்ளன. உயிரினங்களிலும் நாம் அறிந்தது மிகமிகச் சொற்பமே. ஆயினும், இந்த உலகமும், இதில் வாழுகின்ற உயிர்களும் நாம் அறிந்தவைகள்.

அதாவது, அவைகள் இருப்பது நமக்குத் தெரியும்.

ஆனால், அவைகள் ஆத்மா அல்ல.

அதுப்போலவே, இன்னும் நாம் அறியாத உலகங்கள் எவ்வளவோ உள்ளன. இப்படி நாம் அறியாதவற்றை ஆத்மா என்று கூறலாமா? என்றால் அதுவும் முடியாது. ஏனெனில், அறியாதவற்றை ஒரு நாள் அறிந்து விட முடியும்.

எனவே, அவையும் ஆத்மா அல்ல.

அறிந்தவையும் ஆத்மா அல்ல, அறியாதவையும் ஆத்மா அல்ல.

இதன் பொருள் என்ன?

ஆத்மா அறியப்பட முடியாதது. உலகப்பொருட்களைப் போல ஆத்மாவை அறிய முடியாது.

(இதைப்பற்றி, இன்னும் கொஞ்சம் ஆழமாகப் போகலாம். அறிந்தவற்றிலும் அது இல்லை, அறியாதவற்றிலும் அது இல்லை. ஏனென்றால், அது அறிய முடியாதது.

அட என்னங்க, போங்க, இவ்வாறு அறிய முடியாத ஒரு விஷயத்துக்கா இப்படி நாம் மெனக்கிட வேண்டும்? என்று நமக்கும் தோன்றும்.

ஆத்மா இருக்கு என்றால், அது ஏன் அறிந்துக் கொள்ள முடியாததாக இருக்கிறது?

இவ்வாறு கூறினால், ஆன்ம அனுபூதி பெற விரும்பும் சாதகனுக்கு மனச்சோர்வை அல்லவா இது அளிக்கும்?

ஆனால், உண்மை அப்படியல்ல.

**"அறியவே முடியாதது ஆத்மா! என்று ஏன் கூறப்படுகின்றது?"** என்றால், அதை தனக்கு வேறாக அறிய முடியாது. அறிய விரும்பும் அந்த ஆத்மாவாகவே நாம் இருக்கின்றோம்.

எப்படி?

இப்போது ஒரு மீன் தண்ணீரில் இருக்கின்றது. அதுதான் அதற்கு உலகம். அந்த நிலையில் அந்த மீனிடம் பழகி வந்த ஒரு ஆமை உனக்கு நெருப்பை பற்றி தெரியுமா? என்று கேட்டால், அதற்கு அந்த மீன் இல்லை, இதுவரை நான் நெருப்பைப் பார்த்ததே இல்லை என்று கூறலாமே தவிர, அதே மீனிடம் உனக்கு தண்ணீரைப் பற்றி தெரியுமா? என்று கேட்டால், அது என்ன சொல்லும்?

அது உண்மையில் நான் தண்ணீரையும் பார்த்ததில்லை என்றுதான் சொல்லும்.

ஏன் அப்படி அது சொல்கின்றது என்று கேட்டால், அது அந்த தண்ணீரில் இருந்து வெளியே வந்துப் பார்த்தால்தான் அதற்கு தண்ணீரில்தான் வாழ்கிறோம் என்பது புரியும்.

அதுப்போலத்தான், நாமும், அந்த ஆத்மாகவே இருந்துக் கொண்டு, அந்த ஆத்மாவைக் காண முயற்சிக்கின்றோம் என்று இங்கு கூறவரும் விசயம் உள்ளது.

ஆனால், சாஸ்திரம் நமக்கு எப்படிக் கூறுகின்றது? எந்த விதமான கருவிக் கரணங்களின் துணையுமின்றி எது தன்னைத் தானே உணர்கிறதோ? அது ஆத்மா.

ஆனால், அந்த நிலையில் இருக்கும் ஆத்மாவிற்கு தன்னைத் தெரிந்து கொள்வதற்கு தனக்கு வேறாக ஏதாவது தேவையா என்றால்? உண்மையில் எதுவும் தேவையில்லைதான்.

ஆனால், அது உண்டாக்கி வைத்திருக்கும் உயிர்களெல்லாம் தன் உண்மை நிலையை உணர்ந்துக் கொள்ள பல்வேறு உடல்களில் பரிணமித்தாலும், அந்த உடல்களின் வாயிலாக ஒரு அறிவு தாவரத்தில் தொடங்கி ஆறாம் அறிவு பெற்ற மனித உடலுக்கு படிப்படியாக உயர்ந்து வந்தாலும், உடனடியாக ஒரு குழந்தையின் நிலையில் ஒருவனால் எதையுமே தெரிந்துக் கொள்ள முடியாது.

ஏனென்றால், அந்த குழந்தை தன்னகத்தே கொண்டுள்ள ஐந்து புலன்களாகிய, அந்த ஐந்து அறிவின் மூலமாகத் தெளிவை அடையவில்லை. எனவே, அதற்கு நன்மை, தீமைகள் தெரியாது. அந்த குழந்தை வளர வளரத்தான் '**இது, இது இன்னது**' என்று தன் அறிவை வளர்த்துக் கொள்கிறது.

ஆகவே, நம் அனுபவத்தால் தெளிவு பெற்ற அறிவுதான் ஆறாம் அறிவு.

அதேசமயம், அந்த பகுத்தறியும் அறிவும் தானாக வந்துவிடவில்லை. அதற்குப் பின்னால், நம்முடைய உண்மை இயல்பாகிய அனைத்தையும் அறியும் அறிவாகிய **சுய அறிவு** ஒளிந்துக் கொண்டுள்ளது.

அந்த வகையிலே, உண்மையில் அந்த ஆத்மா இவ்வாறு படைக்கப்பட்டவைகளைக் கொண்டு தன்னை மீண்டும் அறியவே, அனைத்தையும் அறிந்ததாகவும் இருக்கின்றது, அறியாததாகவும் இருக்கின்றது என்று இந்த மந்திரம் எடுத்துக் கூற வருகின்றது.

நாம் ஏற்கனவே கடந்த வகுப்பிலே பாத்ததுப்போல, மனிதன் கண்டுபிடித்த நுண்ணோக்கி மற்றும் தொலை நோக்கி கருவிகள் மூலமாக, அந்த கருவிகளே நேரடியாக கண்களுக்கு தெரியாத நுண்கிருமிகளையும், தூரத்தில் உள்ள ஒரு மரத்தையும் கண்டு கொள்ளுமா? என்றால், அதுவும் முடியாது. ஜடமான அந்த கருவிகளுக்குப் பின்னால், உயிருள்ள மனிதனின் கண் பார்க்க வேண்டும். அப்போது மட்டும்தான் அந்த கருவிகளுக்கு உண்மையான உபயோகம்.

அதுப்போல, இங்கு படைக்கப்பட்டவைகள் எல்லாம் தானாகவே எதையும் செய்ய இயலாது. மேலும், தானாகவே அவைகள் எதையும் அறிய இயலாது. இவைகளுக்குப் பின்னால் அந்த அறிவு (ஆத்மா) இருக்கின்றது என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதே இங்கு கூறப்படுகின்ற விசயம் ஆகும்.

இதைப் புரிந்துக் கொண்டால், நாம் நமக்கு வேறாக ஆத்மாவை தரிசிக்க வேண்டியதில்லை. அவ்வாறு தேடும் பொருளாக நானே இருக்கின்றேன் என்ற தெளிவுதான் ஞானம்.)

ஆத்மா அனைத்து செயல்களுக்கும் ஆதாரம்:

यद्वाचाऽनभ्युदितं येन वागभ्युद्यते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ५॥

யத் வாசானப் யுதிதம் யேன வாகப் யுத்யதே ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதித முபாஸதே ॥ 5 ॥

பொருள்:

எது வாக்கினால் விளக்கப்பட முடியாதோ, எதனால் வாக்கு விளக்கம் பெறுகிறதோ? அதுவே ஆத்மா. இங்கே உபாசிக்கப்படுகின்ற அதாவது, வழிபடப்படுகின்ற பொருள் ப்ரஹ்மம் (ஆத்மா) அல்ல! என்பதை அறிந்து கொள்.

பொதுவாக, **ஆத்மா** என்பது தொடுதல், பார்த்தல், சுவைத்தல், கேட்டல், நுகர்தல் என்ற பஞ்ச தன்மாதிரியங்களுக்கு அப்பாற்பட்டது. அதாவது, "**ஆத்மா**" என்பது கருப்பொருள் அல்ல. அது அனைத்தையும் அறியும் ஆற்றல் ஆகும்.

ஒருவர் பிறவியிலேயே காதுகள் கேட்காதவர் என்று வைத்துக் கொள்வோம். அவரிடம் சென்று நாம் என்ன விசயங்களைப் பற்றி பேசினாலும் அதனால் பயன் ஒன்றுமில்லை அல்லவா?

அதாவது, அவர் ஒருவருக்கு மட்டும் கேட்கும் சக்தி இல்லை என்பதினால், இந்த உலகத்தில் ஓசையே (ஒலி) இல்லை என்று அவர் கூறினால், எப்படி நம்மால் அவருக்கு அதைப்பற்றிப் புரிய வைக்க முடியாதோ? அதைப்போலத்தான் ஆற்றலாகிய ஆத்மாவையும் வாய் வார்த்தைகளினால் விளங்க வைக்க முடியாது.

அதாவது, அறிவியல் ஆய்வுகளின்படி மனிதனிடம் உள்ள புலன்களைக் கொண்டு எதையுமே ஆராயும் முறைகள் "**காரண – காரியத் தொடர்பு**" (Cause and Effect Relationship) அல்லது "**காரிய – காரணத் தொடர்பு**" (Effect and Cause Relationship) ஆகிய இவைகள் இரண்டில் ஏதாவதொன்றை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன.

ஆத்மா பற்றிய ஆய்விற்கு, **"காரிய – காரணத் தொடர்பு"** – என்ற பின்னோக்கு அணுகுமுறை மிகவும் பொருத்தமாக அமையும்.

எந்தவொரு "காரணத்தையும்" (Cause–ஐயும்) தொடர்ந்து ஒரு "காரியம்" (Effect), நிகழ்ந்தே தீரும்.

எனவே எந்தவொரு "காரியத்தையும்" ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு அதன்மூலம் அதற்கான மூல காரணத்தை ("Cause – ஐ) யூகித்து அறிவது என்பது அறிவியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறைதான்.

அந்த வகையிலே, தோன்றி மறையும் பலகோடி உடல்களைக் **"காரியமாக"** எடுத்துக் கொண்டு அதற்கான **"காரணத்தை"** ஆராய்ந்தால் புலப்படும் உண்மைதான் **"ஆத்மா"** என்று அறியப்படுகிறது.

அறிவியலில் பல்வேறு ஆய்வுகளுக்குப் பிறகு நிரூபணமாகித் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இரண்டு உண்மைகள் என்னவெனில்,

எந்த ஒரு நிகழ்வையும் தொடர்ந்து அதற்குச் சமமான வேறு ஒரு நிகழ்வும் நடக்கும். ("For every action, there is an equal and opposite reaction") அதுப்போலவே, எந்தவொரு சக்தியையும் உருவாக்கவும் முடியாது. அதை அழிக்கவும் முடியாது. ஆனால், அதை வேறு ஒரு மாற்று சக்தியாகவோ, மாற்று உருவத்திற்கோ மாற்றமுடியும். ["Energy can neither be created nor destroyed; but it can be transformed into other forms (of energy)"]

இவ்வாறு மேற்குறிப்பிட்ட அறிவியல் நியதிகளையும், "காரிய – காரணத் தொடர்பு" (Effect and Cause Relationship) கோட்பாட்டையும் கருத்தில்கொண்டு ஆராய்ந்தால், **"ஆத்மா"** பற்றிய கீழ்க்கண்ட விளக்கங்கள் தெளிவாகும்:

1. படைக்கப்பட்ட பல்வேறு உடல்களாகிய "காரியப் பொருட்கள்" (Effect), எந்த காரணமும் இன்றி உருவாகி இருக்க முடியாது. அப்படி அவைகள் உருவானதற்கு முந்திய காரணமாக எதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியுமோ? அதுவே, **"ஆத்மா"** என்று அறியவேண்டும்.

2. மனிதப் படைப்பிற்கு அடிப்படையாக விளங்கும் **"ஆத்மா"** எனும் சக்தி ஒரு அறிவு வடிவுதான். எனவே, அறிவியல் அடிப்படையில் பார்த்தாலும், அத்தகைய அறிவு வடிவான "ஆத்மாவைத்" தோற்றுவிக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது.

ஆனால், அது வெவ்வேறு தோற்றங்கள் எடுத்துக் கொள்ள முடியும். ஆனால், அத்தகைய "ஆத்மாவையும்", மற்ற பொருட்களைப் பார்ப்பதுபோல் நாம் பார்க்கவேண்டும் என்று நாம் எதிர்பார்த்தால், அது நடக்காது. ஏனென்றால், "ஆத்மா" ஒரு பேரறிவு ஆற்றல், அது நாம் நினைத்துக் கொண்டிருப்பதுப் போன்று கருப்பொருள் அன்று. எனவேதான், இன்றளவுக்கும், **"ஆத்மா"**வைப் பற்றித் தத்துவம் கண்டறிந்த அறிவை, அறிவியலால் கற்றியவோ, எட்டிப் பிடிக்கவோ முடியவில்லை!

यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ६॥

யன்மனஸா ந மனுதே யேனாஹூர்மனோ மதம் ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ॥ 6 ॥

பொருள்:

எது மனத்தால் அறியப்பட முடியாதோ, எதனால் மனம் அறியப்படுகிறதோ? அதுவே ஆத்மா என்று சான்றோர்கள் கூறுகிறார்கள். இங்கே வழிபடப்படுகின்ற பொருள் ப்ரஹ்மம் (ஆத்மா) அல்ல! என்பதை அறிந்து கொள்.

यच्चक्षुषा न पश्यति येन चक्षूँषि पश्यति ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ७॥

யம்சக்ஷுஷா ந பச்யதி யேன சக்ஷும்ஷி பச்யதி ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ॥ 7 ॥

பொருள்:

எது கண்களால் பார்க்கப்படுவதில்லையோ, எதனால் கண்கள் பார்க்கின்றனவோ? அதுவே ஆத்மா. இங்கே வழிபடப்படுகின்ற பொருள் ஆத்மா அல்ல! என்பதை அறிந்து கொள்.

यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदं श्रुतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ८॥

யச்ச்ரோத்ரேண ந ச்ருணோதி யேன ச்ரோத்ரமிதம் ச்ருதம் ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ॥ 8 ॥

பொருள்:

எது காதுகளால் கேட்கப்படுவதில்லையோ, எதனால் காதுகள் கேட்கின்றனவோ அதுவே ஆத்மா. இங்கே வழிபடப்படுகின்ற பொருள் ஆத்மா அல்ல! என்பதை அறிந்து கொள்.

यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ९॥

யத்பிராணேன ந ப்ராணிதி யேன ப்ராண: ப்ரணியதே ‖
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ‖ 9 ‖

பொருள்:

எது மூச்சினால் முகரப்படுவதில்லையோ, எதனால் மூச்சு முகர்கிறதோ? அதுவே ஆத்மா. இங்கே வழிபடப்படுகின்ற பொருள் ஆத்மா அல்ல! என்பதை அறிந்து கொள்.

வழிபடுவது ஆத்மா அல்ல:

ஆத்மா என்பது உயிர் ஆற்றல்.

தானியங்களை (உயிர்களை) முளைக்கட்டினால், அவைகள் இயற்கையாகவே முளைக்கும், இல்லையா? அதுவே, நீங்கள் சில கூழாங்கற்களை (உயிரற்றவை) முளைக்கட்டினால், அவைகள் இயற்கையாக வளருமா?

இல்லை!

ஏன் அப்படி?

ஒரு கூழாங்கல்லில் ஆத்மா பிரகாசிக்க முடியவில்லை என்பதே இதற்குக் காரணம். ஆக, ஆத்மா என்பது தன்னைப் பிரகாசிக்கத் தொடங்கியதின் முதல் உயிரினம் தாவரங்கள் என்பதும் புரிகின்றது. அவ்வாறே, கண்களுக்குத் தெரியாத நுண்ணுயிரிகள் முதல் கண்களுக்குத் தெரிகின்ற அனைத்து உயிரினங்களிடமும் ஆத்மா உள்ளதை நம்மால் அறிய முடிகின்றது.

அதுவே, ஜடப் பொருட்களுக்குள் ஆத்மா பிரகாசிக்க முடிவதில்லை.

எனவே, ஆத்மா என்பது உயிர் ஆற்றல் (அது ஒரு சேதனம்).

ஆத்மா இல்லாத உடலுக்கு (இறந்துபோனால்) உயிர் இல்லை என்பதைக் குறிக்கிறது, எனவே, அந்நிலையில் அவைகளால் அது மகிழ்ச்சியையோ துன்பத்தையோ உணர முடியாது.

எனவே, உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகள் எங்கெல்லாம் இருக்கிறதோ? அங்கே சுகம் மற்றும் துக்கம் பற்றிய அறிவு இருக்கிறது. எங்கே ஒரு உணர்வு அல்லது வளர்ச்சி இருக்கிறதோ, அந்த உடலில் ஆத்மா அல்லது உயிர் ஆற்றல் இருப்பதைக் குறிக்கிறது.

எங்கெல்லாம் எந்த உணர்வு இருக்கிறதோ? அங்கே எல்லாம் ஆத்மா இருக்கிறது. அத்துடன் அங்கு நிச்சயமாக அங்கே உயிர் இருக்கிறது. எனவே, உணர்வுகள் எங்கே இருக்கிறதோ, அங்கே உயிர் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

ஆக, உணர்ச்சிகளைக் காட்டமுடியவில்லை என்றால், அதற்கு உயிர் இல்லை என்று அர்த்தம்.

அதேப்போல ஆத்மா என்ற ஒன்று இருப்பதால்தான் அனைத்தும் இருக்கின்றன. ஆனால், அவ்வாறு இருக்கின்ற புலன்களைக் கொண்டோ? அல்லது செயல்களை செய்கின்ற கருவிகளைக் கொண்டோ? இந்த ஆத்மாவை அறிய இயலாது.

மேற்கண்ட, இந்த 5 மந்திரங்களிலும் "**ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே**" (வழிபடப்படுகின்ற பொருள் ப்ரஹ்மம் (ஆத்மா) அல்ல!) என்பதை அறிந்து கொள். என்ற இந்த ஒரே வரி மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. அதன் மூலம் அந்தக் கருத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது.

ஆக, நாம் இங்கே வழிபடுகின்ற பொருள் ஆத்மா அல்ல! என்பதே அந்தக் கருத்து.

ஆத்மா என்பது எது? இறைவனே ஆத்மா. அதாவது, எங்கும் நிறைந்த இறைவனே நம்மில் ஆத்மாவாக விளங்குகிறார். இறைவன், கடவுள், தெய்வம் என்றதும் நமக்கு நினைவுக்கு வருவது கோயிலும், அந்த கோவில்களில் உள்ள தெய்வ விக்ரங்களுமே.

சாதாரண மனிதனின் ஆன்மிகம் கோயிலையும், தெய்வ வழிபாட்டையும் சார்ந்தே உள்ளது. அவைகள் ஆத்மா அல்ல!, அதாவது இறைவன் அல்ல! என்பது இங்கே கூறப்படுகிறது. கோயிலிலுள்ள விக்கிரகங்கள் கல்லினாலும், செம்பினாலும் ஆனவை. வீட்டிலுள்ள பூஜையறையில் நாம் வழிபடுகிற தெய்வங்கள் காகிதத்தாலும், பெயிண்ட்

என்னும் மையினாலும் ஆனவை. **கல்லும், செம்பும், காகிதமும், மையும் கடவுள் அல்ல!** என்பது நம் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

அப்படியானால் ஏன் வழிபடுகிறோம்?

இந்தக் கல்லும் செம்பும் நம்மில் இருக்கின்ற ஆத்மாவைக் காண்பதற்கான ஒரு படி நிலை மட்டுமே. உதாரணமாக, வானில் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தைக் காண்பதற்கு படிப்படியான வழியைக் கையாள்கிறோம். முதலில் ஒரு மரம், மரத்தின் கிளை, கிளை வழியே தெரிகின்ற பிரகாசமான நட்சத்திரம், அதன் அருகில் நாம் பார்க்க வேண்டிய நட்சத்திரம் என்று படிப்படியாகக் காணும்போது விரைவில் அந்தக் குறிப்பிட்ட நட்சத்திரத்தைக் காண முடிகிறது.

அதுப்போலவே, எங்கும் நிறைந்த இறைவனைச் சட்டென்று அகத்தில் காண வேண்டும் என்றால் அது அவ்வளவு சுலபம் அல்ல. எனவே புறத்தில் ஒரு விக்கிரகத்தில், ஒரு படத்தில் அவரைக் காண முயற்சிக்கிறோம். ஆத்மாவாக நம்மில் நிலவுகின்ற இறைவனை அறிவதற்கான ஒரு படி நிலையே நாம் புறத்தில் செய்கின்ற பூசைகள், வழிபாடுகள் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். அதைத்தான் நாம் ஏற்கனவே பார்த்ததுப் போல, புறத்தில் தேடிக் காண முடியாத இறைவனை அகத்தில் தேடிக் கண்டுகொண்டதாக கூறுகிறார் அப்பர் பெருமான்.

தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணா தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்.

ஆகவே, நாம் வழிபடுகின்ற விக்கிரகங்களும், பூசைக்கான பாடல்களும், மந்திரங்களும் உண்மை இறையனுபவத்திற்கான ஒரு படி நிலைகள் மட்டுமே. அவைகள் மட்டுமே முடிந்த முடிவான அறுதி நிலை அல்ல! என்பதை இந்த உபநிடத மந்திரங்கள் அந்தக் கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன.

அப்படியானால், கடவுள் எப்படி நம்முள்ளே இருந்து வெளிப்படுகின்றார்? இதற்கான ஒரு கதையைக் காணலாம்.

ஒரு ஊரில் மிகுந்த கடவுள் நம்பிக்கை உள்ள ஒருவர் இருந்தார். அவர் ஊரில் பெரும் வெள்ளம் வந்து வீட்டுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டது. வெள்ளம் கூடிக்கொண்டே போனது. அரசாங்கம் அங்கிருந்த அனைவரையும் வீட்டை உடனடியாக காலி செய்துக் கொண்டு ஒரு பாதுகாப்பான இடத்துக்கு சென்று விடுங்கள் என்று அறிவிப்பு செய்தது.

ஆனால், அவர் கடவுள் மீதிருந்த அபரிமிதமான நம்பிக்கையின் அடிப்படையில் என்னை கடவுள் காப்பாற்றுவார் என்று வீட்டிலேயே இருந்து கொண்டார்.

வெள்ளம் அதிகமாகி அவர் வீட்டு முகட்டைத் தொட்டுவிட்டது. அப்போது ஒருவர் சிறு ஓடத்தில் வந்து குரல் கொடுத்தார். இனி நீங்கள் இங்கிருந்தால் ஆபத்து. என் ஓடத்தில் ஏறிக்கொள்ளுங்கள் என்றார்.

ஆனால், அவர் அதைக் கேட்கவில்லை. இல்லை! இல்லை! என்னைக் கடவுள் காப்பாற்றுவார் என்று அவருடன் போக மறுத்துவிட்டார்.

வெள்ளம் அதிகமானதால் அவர் வீட்டு மாடிமேல் ஏறி நின்றுகொண்டு, கடவுளே என்னைக் காப்பாற்றும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்.

அப்போது, அங்கே ஒரு பெரிய படகு வந்தது. அந்த படகோட்டி அந்த பக்தரைப் பார்த்து ஐயா, தாங்கள் உடனடியாக இந்த படகில் ஏறி உயிர் பிழைத்துக் கொள்ளுங்கள், இனுஇயும் தாமதம் செய்யாதீர்கள் என்று வலியுறுத்தினார். அப்போதும், அவர் அந்த படகில் ஏற மறுத்துவிட்டார். அந்த படகும் அங்கிருந்து போய்விட்டது.

சற்று நேரத்தில் நேரத்தில் தண்ணீர் வரத்து அதிகமாகி அவர் நின்றிருந்த மொட்டை மாடி மூழ்கி, அவரது கழுத்துவரை தண்ணீர் வந்துவிட்டது. அப்போது அங்கே ஒரு ஹெலிகாப்டர் வந்தது. அந்த ஹெலிகாப்டரில் இருந்தவர் ஐயா உடனடியாக நாம் வீசியிருக்கும் இந்த கயிற்றைப் பிடித்துக் கொண்டு, மேலே ஹெலிகாப்டருக்கு ஏறி வாருங்கள் என்று குரல் கொடுத்தார். அப்போதும் அதை அவர் கேட்கவில்லை. இல்லை! இல்லை! என்னை அற்ப மனிதர்கள் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை!. என்னுடைய பக்திக்கு பலனாக அந்த கடவுள் என்னை காப்பாற்றுவார் என்று சொல்லி அதிலும் ஏற மறுத்து விட்டார்.

சற்று நேரத்தில், அவரது உடல் முழுவதும் நீரில் மூழ்கியதினால், அவர் மூச்சுவிட முடியாமல் இறந்து போனார். இறந்தவர் கடவுளைக் கண்டார். கடவுளே நான் உம்மை எவ்வளவு நம்பினேன். என்னைக் கைவிட்டு விட்டீரே என்று புலம்பினார்.

**கடவுள் சொன்னார்:** பக்தனே! நான் எங்கே உன்னைக் கைவிட்டேன்? நீ பக்தியுடன் கேட்டதும் முதலில் ஒரு ஓடத்தை அனுப்பினேன். அதற்கு அப்புறம் ஒரு பெரிய படகை அனுப்பினேன். அப்போதும் நீ அவைகளில் ஏற மறுத்தாய் என்று ஒரு ஹெலிகாப்டரைக்கூட அனுப்பினேன். ஆனால், நீதான் எதிலுமே ஏற மறுத்துவிட்டாய் என்றார்.

இந்த கதையின் ஆழமான உண்மை என்னவெனில், நாம் நினைத்துக் கொண்டிருப்பதுப் போன்று கடவுள் கல்லில், செம்பு விக்கிரங்களில் மட்டும் இல்லை. அவன் எல்லாவற்றிலும் இருக்கின்றான். எப்படி வேண்டுமானாலும் வெளிப்படுவான் என்பதை ஏற்கும்போது, நம்முடைய பக்தி கல்லையும், விக்கிரங்களையும் கடந்து, அனைத்தையும் நேசிக்கும் '**அன்பு**' எனும் தூய அனன்ய பக்தியாக மாறும்.

॥ इति केनोपनिषदि प्रथमः खण्डः ॥

இதி கேனோபநிஷதி ப்ரதம: கண்ட: ll

இத்துடன் **கேன உபநிஷதம்** முதலாம் அத்தியாயம் நிறைவு பெற்றது.

# அத்தியாயம் 2

ஆத்மாவைத் தேடு:

நாம் வழிபடுகின்ற பொருள் ஆத்மா அல்ல! என்ற கருத்து இங்கே தொடர்கிறது. ஒரு விக்கிரகத்தை வழிபடுவதுடன் நமது முயற்சி நின்று விடக் கூடாது, அவரை மேலும் அறிய வேண்டும், தேட வேண்டும் என்ற கருத்து இந்த அத்தியாயத்தில் வலியுறுத்தப்படுகிறது.

அறிந்தது கொஞ்சமே:

यदि मन्यसे सुवेदेति दभ्रमेवापि
नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपम् ।
यदस्य त्वं यदस्य देवेष्वथ नु
मीमाँस्यमेव ते मन्ये विदितम् ॥ १॥

யதி மன்யஸே சுவேதேதி தப்ரமேவாபி
நூனம் த்வம் வேத்த ப்ரஹ்மணோ ரூபம் ।
யதஸ்ய த்வம் யதஸ்ய தேவேஷ்வத நு
மீமாம்ஸ்யமேவ தே மன்யே விதிதம் ॥ 1 ॥

பொருள்:

குரு:

ஆத்மாவை நன்றாகத் தெரியும் என்று நீ நினைப்பாயானால், நீ அறிந்தது நிச்சயமாக மிகக் கொஞ்சமே. உன்னிடம் எது இருக்கிறதோ? அதுவே, நீ வழிபடும் தெய்வங்களில் இருக்கிறது என்பதினால், நிச்சயமாக உனக்கு பரமனின் வடிவம் தெரியும். அதனை இன்னும் அறிய வேண்டும்.

**சீடன்:**

'நான் ஆத்மாவை அறிந்துள்ளதாக நினைக்கிறேன்'

அறிந்த மற்றும் அறியாத நிலைகளைக் கடந்தது ஆத்மா. அத்தகைய ஒன்றை '**நான் அறிவேன்**' என்று எப்படி கூற முடியும்? முடியாது. அதேவேளையில் '**நான் அறிவேன்**' என்று சொல்வது முழுத்தவறும் ஆகாது. ஏனெனில் நாம் அறிந்தது ஆத்மாவில் அதாவது நம்மில் ஒரு பகுதியைத்தான்.

நம்மைப் பற்றி அறிகிறோம், முழுமையாக அறியவில்லை, எப்படி?

ஆத்மாவிடம் உள்ள அறிவு ஒளியைக் கொண்டுதான், அதன் பிரகாசத்தில் மனம் தன் நாடகத்தை ஆடிக்கொண்டிருக்கிறது. மனத்துக்கு உண்மையில் ஆத்மாவைத் தெரியாது. ஆனால், ஆத்மா, மனதை தன்னுடைய அறிவு ஒளி வெளிச்சத்தில் நன்கு வழிநடத்துகிறது. அதாவது, தன்னை நோக்கிய பயணத்தின் பாதையை ஆத்மா சரியாக அமைக்கிறது.

அந்தப் பாதையில், கணிசமான தூரம் சென்ற பிறகுதான் மனத்துக்கு தான் ஆத்மாவினால் வழிநடத்தப்படுவதை தன்னுடைய உள்ளுணர்வில் உணர்கின்றது.

மனம் எப்போதும் ஆத்மாவின் ஒளியில்தான் பிரகாசிக்கின்றது என்பது மனத்துக்குப் போகப் போகத்தான் தெரியவருகிறது. அதாவது, ஆத்மா தன் பிரகாசத்தை பல்வேறு வகைகளில் மனம் மற்றும் புலன்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை மனம் அறியாமல் உள்ளது. மேலும் இந்த மனம் அதை தன்னுடைய வைபவம் என்று நம்பிக்கொண்டுள்ளது. அதனால், அதன் அகங்காரம் தனக்கே உரித்தான நிலையில் ஆர்ப்பாட்டமாக உள்ளது. அதனால், மனதிடம் எப்போதும் அவசரம் இருக்கும்.

ஆனால், ஆத்மாவிடம் அவசரம் இருக்காது. அமைதி மட்டுமே இருக்கும். ஏறக்குறைய மௌனத்தில்தான் ஆத்மா மனதிடம் பேசுகிறது. ஆனால், மனம் எழுப்பும் கூச்சலில், அந்த மனதிற்கு ஆத்மாவின் குரல் வெளித்தெரியாமல் இருக்கிறது.

அதனால், இந்த மனம் தன்னுடைய அகங்காரத்தின் வாயிலாக உண்டாக்கிக் கொண்ட பல்வேறு துன்பத்தின் வெப்பம் தாங்காமல் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கத் தொடங்குகிறது. அதன் வாயிலாக மெல்ல மெல்ல ஆத்மாவின் குரல் மனதிற்கு மெதுவாகக் கேட்கத் தொடங்குகிறது.

அந்நிலையில், இந்த மனம் விழித்துக்கொள்ளத் தொடங்குகிறது.

ஆத்மாவின் அறிவுப் பிரகாசம் மனதினால் இப்போது நன்கு உணரப்பட முடிகின்றது. அந்த ஆத்மாவின் வெளிச்சத்தில் மனம் தன்னிடம் உள்ள குறைபாடுகளை எல்லாம் கண்டுபிடிக்கின்றது. ஆத்மா சொல்லும் உண்மைகள் வெளிச்சமாகின்றன. மனம் தன் அங்கலாய்ப்பை விட்டு அமைதியடைகிறது.

ஆத்மாவின் ஆழ்வெளியில் போய் மனம் அடங்குகின்றது. அதாவது, மனம் ஆத்மாவுடன் ஒன்றிணைந்துவிடுகிறது. அந்த நிலையில் மட்டும்தான் ஆத்மாவின் அத்தனை அம்சங்களும் மனதிற்கு புரிய ஆரம்பிக்கின்றது.

அப்போது, மட்டுமே மனதிற்கு எல்லாம் புரிய ஆரம்பிக்கின்றது. அதாவது, ஆத்மாவின் ஒளியில்தான் மனம் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், இதுவரை மனதின் ஒளிப்பிரகாசத்தைக் கொண்டு மட்டுமே எல்லாவறையும் பார்த்து வந்திருக்கிறதே தவிர, அந்த ஆன்ம ஒளியின் பிரகாசத்தால், மனம் இதுவரைப் பார்க்க முயற்சிக்கவில்லை.

இப்போது அதற்கான காலம் வந்துவிட்டது.

மனம் கண்களுக்குப் பின்னால் இருந்து, காண்பது எல்லாவற்றையும், அதற்குக் காட்டிக் கொடுக்கின்ற வெளிச்சம் உண்மையில் ஆத்மாவினுடையது என்பதை ஏற்கின்றது. அந்த ஆன்ம ஒளி வெளிச்சம் சூரிய வெளிச்சத்தைப் போல் இருக்காது. எல்லா நிறங்களும் வெண்மையில் அடக்கம். ஆனால் அந்த வெண்மையே ஆத்மாவில் அடக்கம்.

அதனால் ஆன்ம ஒளியை ஊனக் கண்கொண்டு பார்க்கவே முடியாது. ஆன்ம ஒளி வெளிச்சம் எதன் மீது பட்டாலும், அதன் பிரதிபலிப்பில் எல்லாம் பிரகாசித்து தெரியும்.

இதுவரை, மனம் ஆன்ம ஒளியின் பிரதிபலிப்பை மட்டுமே வெளிப்படுத்திக் கொண்டு இருந்துள்ளது. இப்போது, அந்த ஆன்ம ஒளியை நேரடியாகக் காணப்போகும் காலம் கனிந்து வந்திருக்கிறது.

அந்த ஆன்ம ஒளி கோடி சூரியனின் ஒளியைவிடப் பிரகாசமாக இருந்தாலும், அதன் வாயிலாக அது நம் புலன்களில் ஒன்றாகிய கண்களைச் சற்றும் கூசவைக்காது. அந்த ஆன்ம ஒளியை பிரகாசிக்கும் புலன்கள் மற்றும் மனம் என எதுவுமே, அதை தன்னை விட்டுப் பிறிதான ஒன்றாக பார்க்க முடியாது. அனைத்தும் அந்த ஆன்ம ஒளியின் அம்சம்.

அந்த ஆன்ம ஒளியை மனம் **"நான்"** என்று எப்போது உணருகின்றதோ? அப்போதே மனக் கண்ணின் காட்சியில் விரிந்திருக்கும் இந்த உலகம் அந்த ஆத்மாவின் மூலமாகவே அறியப்படுகின்றது என்பது புரியும்.

அதாவது, மனதிற்கு பின்னாலிருந்துதான் ஆத்மாதான் இந்த உலகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றது. அவ்வாறு பார்க்கப்படுகின்ற இந்த உலகம், உடல்கள் எல்லாம் மனதின் பார்வையால்தான் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதுவே, ஆன்ம ஒளியின் வெளிச்சத்தில் மனம் விழித்துக் கொண்டு பார்க்கும்போது, ஆத்மாவைத் தவிர, அதற்கு வேறாக, வேறு எதுவும், எதையும் பார்க்க முடியாது. கேட்க முடியாது, சுவைக்க முடியாது.

ஆகவே, அனைத்தும் ஆத்ம ஒளியின் வெளிச்சத்தில் பிரகாசிக்கின்றன. எப்போதும் மனதிற்கு பின்னால்தான் ஆத்மா மறைந்து கொண்டிருக்கின்றது. காரணம், அதே

மனதினால் ஆத்மா மறைக்கப்பட்டிருக்கின்றது. இந்த உண்மையைப் புரிந்துக் கொண்டால்தான் அனுபவ வெளியில் ஆத்மாவைத் தேடி வெளியே அலைய வேண்டிய அவசியம் இருக்காது. அப்போது மட்டும்தான் மனம் சோர்ந்து போகது. துன்பப்படாது. விழித்துக்கொள்ளும்.

ஆனால், நாம் நம்மை உடம்பாக, மனமாக அறிகிறோம், ஆத்மாவாக அறியவில்லை. உடம்பை அறிகிறோம், மனத்தை அறிகிறோம். அதாவது, நம்மில் ஒரு பகுதியை அறிகிறோம். அதனால்தான் '**நீ அறிந்தது நிச்சயமாக மிகக் கொஞ்சமே**' என்று கூறப்பட்டது.

எனவே, ஆத்மாவை முழுமையாக அறியுமாறு இந்த மந்திரம் கூறுகிறது. அதற்கு முதற்படியாக நாம் வழிபடும் தெய்வங்களில் இன்னும் ஆழ்ந்து தேட வேண்டும் என்ற வழியும் இங்கே காட்டபடுகிறது.

பொதுவாக உபநிஷதங்கள் குரு தமது சீடர்களுக்கு உபதேசிப்பதாக அமைந்தவை. கேன உபநிஷதம் அந்த முறையைப் பின்பற்றுகிறது. இங்கே, '**இன்னும் ஆழ்ந்து தேட வேண்டும்**' என்று குரு கூறிய போது, தன் அரைகுறை அறிவை முழுமை என்று கருதிய சீடன் ஒருவன், தான் ஆத்மாவை அறிந்துள்ளதாகக் கூறுகிறான்.

அறிந்தும் அறியவில்லை:

ஆத்மாவைப் பற்றி நாம் அறிந்தது கொஞ்சமே. முழுமையாக அறிவதற்கு இன்னும் ஆழ்ந்து தேட வேண்டும். என்று முந்தின மந்திரம் கூறியது. அதனைப் புரிந்து கொள்ளாத சீடனுக்கு மேலும் விளக்குகிறார் குரு.

உலகிலுள்ள பொருட்களை அறிவது போல் ஆத்மாவை அறிய முடியாது என்பதை ஒரு புதிர் போல 2–3 மந்திரங்கள் கூறுகின்றன.

नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च ।
यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च ॥ २॥

நாஹம் மன்யே சுவேதேதி நோ ந வேதேதி வேத ச ।
யோ நஸ்தத்வேத தத்வேத நோ ந வேதேதி வேத ச ॥ 2 ॥

பொருள்:

ஆத்மாவை எனக்கு நன்றாகத் தெரியும் என்றும் நினைக்கவில்லை. எனக்குத் தெரியாது என்றும் நினைக்கவில்லை. ஏனெனில், என்னை எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஆத்மாவைத் தெரியாது. அதே வேளையில், **'தெரியாது என்று சொல்லவும் முடியாது'** என்று நம்மில் யார் நினைக்கிறானோ? அவனே உண்மையில் ஆத்மாவை அறிகிறான்.

இங்கு நம் ஒவ்வொருவருக்கும் மனதில் நடக்க வேண்டிய இரசவாதம் என்னவெனில், **உள்ளுருமாற்றம்**.

அதாவது நமது மனதின் **உள்ளுருமாற்றம்** (Inner Transformation) என்பது **உடல், மனம், உயிராற்றல், அறிவுணர்வு** அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு அருமையான செயல்முறை.

இந்த மாதிரியான விஷயங்களை நேரடியாக வெறும் வாய் வார்த்தைகளான மொழிகளின் மூலம் விளக்குவதில் உள்ள சிக்கல்களினால், நம்முடைய முன்னோர்கள் அதற்கான சில குறியீடுகளின் வழியாகவும், உருவகங்களின் மூலமாகவும் விளக்குவதற்கு முற்பட்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, 63 நாயன்மார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையார் கதையை எடுத்துக்கொள்வோம்.

காரைக்கால் அம்மையார் கதை எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கின்றேன். வணிகர் (செட்டியார்) குடும்பத்தில் பிறந்து **புனிதவதி** என்ற பெயரில் வாழ்ந்தவர் அவர் தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், அவருடைய கணவர் பரமதத்தன் இந்த அம்மையாரைப் பார்த்து, இவர் தெய்வாம்சம் பொருந்தியவர் என்று, அவரை வணங்கத் தொடங்கியபோது, அவர் அதற்காக இறைவனிடம் **பேய் உருவம்** வேண்டிப் பெற்றுக்கொண்டதாக கதை சொல்லப்பட்டிருக்கிறது.

பொதுவாகவே, நம்மிடம் உள்ள இந்த ஆன்மீகக் கதைகள் சொல்லும் முறைகள் திட்டமிட்டு, இவ்வாறு தவறாகப் புகுத்தப்பட்டதா? அல்லது குழந்தைகளுக்காக இவ்வாறு கூறப்பட்ட புரிதலை, கல்வி அறிவு பெறாத பெரியவர்களும் அப்படியே நம்பி விட்டார்களா? என்பது தெரியவில்லை.

பொதுவாக, எல்லா கதைகளுமே அதிகம் புனைக்கப்பட்ட கதைகளாகவே நம்மிடம் நடைமுறையில் உள்ளது. அந்த வகையிலே, இந்த காரைக்கால் அம்மையார் கதையைப்

பற்றிக் குறிப்பிடும்போது, அம்மையார் கணவருக்காக, **பேய் உருவம்** பெற்றுக் கொள்ள முடியுமா? அந்த உருவம் இவர்கள் கதைகளில் சித்தரித்திருப்பதுப் போல, அம்மையார் வெறும் எலும்புக்கூடாக இருக்க முடியுமா?

இதை சற்று நாம் ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். பேய் உருவம் என்றால் என்ன? என்னும் முக்கியமான கேள்வியை நாம் நம்மிடம் கேட்டுக் கொள்வதில்லை. இதுதான் நம்முடைய அறியாமை மற்றும் மனமயக்கம் என்று கூறுகின்றோம்.

இங்கு உண்மையில் பேய் உருவம் என்பது, மனதில் வெளிப்பட்ட மாய உருவங்கள் மறைந்து கரைந்த நிலை. இதுதான் மனமற்ற நிலை. அதாவது, பேய் உருவம் என்பது மன உருவம் மறைந்து கரைந்து இல்லாமல் போவது.

நமக்குள் பொதுவாக நாம் என்று நினைத்துக்கொள்ளும் நம்முடைய சுயம், இந்த சமூகம் சார்ந்த அல்லது மற்றவர்களால் வழி நடத்தப்பட்ட கலாச்சாரச் சக்திகளினால் கட்டமைக்கப்பட்டது.

அந்த நிலையில் நாம் ஒருவருக்கு மகனாக, மகளாக, சகோதரனாக அல்லது சகோதரியாக, கணவனாக, மனைவியாக, தந்தையாக அல்லது தாயாக இப்படித்தான் நாம் வாழ்கிறோம்.

அப்படியே வாழ்ந்திருந்து மறைகிறோம்.

தன்னை ஒரு இனத்துடன், ஒரு மதத்துடன், ஒரு நாட்டுடன், ஒரு மொழியுடன் அடையாளப்படுத்திக்கொண்டு, '**தான் இன்னார்**' என்று கருதிக்கொண்டு, அந்த நபராகவே வாழ்கிறோம். இதுதான் மனவுருவம்.

இந்த மன உருவம் எண்ணங்களால் எழுந்த வெறும் நினைவுகளாலானது.

இவைகள் எல்லாம் மனம் ஏற்றி வைத்துக் கொண்ட காலத்தின் சேகரம்.

உண்மையில் இது நாம் இல்லை.

மனதின் ஆதிக்கத்தினால், மனச்சுயத்தில் (Ego) கவனம் இலயித்து, நம்முடைய உண்மை இயல்பாகிய ஆன்ம உணர்வுடன் நமக்கு இணைப்பு விடுபட்டுப் போகும்போது, நாம் வெறும் மன உருவமாகவே வாழ்கிறோம்.

நம் கவனத்தை நாம் உள் நோக்கித் திருப்பும்போது மட்டுமே, இந்த மன உருவம் மறைந்து அடங்கிப்போகும். அப்போது மட்டும்தான் '**நான்**' என்னும் தன்னுணர்வு மட்டுமே மிஞ்சும்.

இந்தத் தன்னுணர்வுதான் உண்மையில் நம் சுயம். இதுவே நம் அடையாளம்.

இதுதான் ஆத்மா.

நாம் இந்த ஆன்ம உணர்வாகக் கவனத்தில் லயிக்கும்போது மட்டும்தான், நம்முடைய மன உருவம் மறைந்து, கரைந்து இல்லாமல் போய்விடுகிறது.

கண்களுக்குப் புலப்படாத உருவமற்ற '**நான்**' என்னும் ஆன்ம உணர்வாகிய நம் சுயம் மட்டிலுமே எப்போதும் இருந்து நிலைக்கிறது.

இதைத்தான் குறியீடாகப் "**பேய் உரு**" என்று சொல்லிவைத்திருக்கிறார்கள்.

காரைக்கால் அம்மையார் பெற்றோருக்கு அடங்கி வாழ்ந்த மகள், கணவனுக்குப் பணிந்து பணிவிடை செய்யும் மனைவி என்னும் சமூக–கலாச்சார அடையாளங்களைத் துறந்து, மன உருவமிழந்து, வெறும் உணர்வு வெளியாக இருந்தது இந்தச் சுத்த அறிவு நிலையில்தான்.

இவர் இசைத்தமிழால் இறைவனைப் பற்றி முதன்முதலாகப் பாடிய கவிஞராகவும், தமிழுக்கு அந்தாதி எனும் இலக்கண முறையை அறிமுகம் செய்தவராகவும் இருந்தார். இவர் இயற்றிய நூல்களின் வரிசையில் அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை போன்ற நூல்களைத் தந்து சைவத்தமிழுக்கு மிகப் பெரும் தொண்டாற்றியுள்ளார். இவருடைய பதிக முறைகளைப் பின்பற்றியே பிற்காலத்தில் வந்த திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர் ஆகிய இவர்கள் மூவரும் தேவாரப் பதிகங்கள் பாடினர் என்பது வரலாறு.

சமஸ்கிருத மொழியைவிட, அவரவர்களின் தாய்மொழியில் இறைவனிடம் பேசுவது ஒரு அலாதி இன்பம்தான் என்பதினால், 5 மற்றும் 6 ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் இவர்களைப் போன்ற சமயக்குரவர்களின் புகழ் உச்சத்தை எட்டியது என்றும் கூறலாம்.

காரைக்கால் அம்மையார் இறைவனிடம் இந்தப் பேய் உருவை வேண்டியதாகவும், இறைவன் அவருக்கு அதை அருளினார் என்று சொல்லப்பட்டிருந்தாலும், அதில் பொதிந்துள்ள ஆழமான உண்மை என்னவெனில், நமக்குள் ஆழத்தில் உறைந்திருக்கும் இந்த '**நான்**'

என்னும் ஆன்ம ஒளி, பிரபஞ்சத்தின் ஆத்மாவான இறைவனுடன் எப்போதும் இணைந்திருக்கிறது. உண்மையில் நமது உடல் இந்த பிரபஞ்சத்தின் ஒரு அங்கம். நம் மனம் பிரபஞ்சப் பெருமனத்தின் அங்கம்.

அந்த நிலையிலே, இந்த மன உருவம் '**தான்**' இல்லை, அது தன்னுடைய சுய அடையாளம் இல்லை! என்பதை உணர்ந்துகொண்டு, ஆன்ம ஞான வெளிச்சத்தில், ஆன்ம வெளியில் மனம் அடங்கிப்போகும்போது மட்டுமே, நம் பிரக்ஞையில் ஒளிவீசும் ஆன்ம ஒளியாகிய அந்த பரமனின் பவித்ரமான, எல்லையற்ற அறிவு ஒளிப் படலத்தின் ஒரு கதிர் இந்த காரைக்கால் அம்மையார் போன்ற ஞானிகள் என்பதும் நமக்குப் புரியும்.

பொதுவாக, நம்மிடம் தற்போது பயன்பாட்டில் உள்ள கைபேசி அல்லது கணினி போன்ற கருவிகள் போன்று, ஆன்ம ஞான ஒளியில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற ஞானிகளுக்கு அவர்கள் உடலும், மனமும் வெறும் கருவிகள் மட்டும்தான் என்பதும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அவர்களது உடல் இருக்கும் வரையில் இந்த மன அடையாளங்கள் எல்லாம் வெறும் நடைமுறை வசதிக்காக மட்டுமே அவர்களிடம் இயக்கம் கொண்டிருக்கும்.

இதைத்தான் **பகவான் ஸ்ரீரமண மகரிஷி** இத்தகைய மனத்தைச் '**சாம்பல் கயிறு**' என்று சொல்கிறார். அதாவது, அது பார்ப்பதற்குக் கயிறுபோன்ற தோற்றம் கொண்டிருந்தாலும், அதை வைத்து எதையும் கட்ட முடியாது. காரணம், அது கையிறு எரிந்த சாம்பல் மட்டுமே, ஆனால், பார்ப்பதற்கு கயிறு போன்று காணப்படுகின்றது என்கிறார் அவர்.

இவ்வாறு ஆத்மாவை உணர்ந்தவன், இந்த உடல் – மனம் என்பது உயிருணர்வான ஆத்மாவுக்கு ஒரு வாகனமாக மட்டுமே பார்ப்பான். அதாவது, ஈசனுக்கு நந்தி, திருமாலுக்குக் கருடன், முருகனுக்கு மயில் போன்று, விடுதலை அடைந்த உயிருக்கு, உடல் வெறும் வாகனம் மட்டுமே.

அப்போது, இந்த உடலினுள்ளே **நான்** என்று தன்னை நினைத்துக்கொள்ளும் நபர் யாரும் இருக்க மாட்டார்கள். அக உருவம் ஏதுமற்றுக் கட்டற்ற உணர்வு வெளியாக உலகில் உலவிக்கொண்டிருக்கும் நிலைதான் **பேய் உரு** என்பது.

இதுவே, காரைக்கால் அம்மையார் போன்றவர்களின் உண்மையான அகநிலை.

உண்மையில் அவர் ஓர் ஆள் இல்லை. அவர் உணர்வு வெளி அவ்வளவே!

சூரியனின் ஒளி ஒரு ஸ்படிகத்தின்மீது பட்டுத் தெறித்து, ஒளிக்கீற்றுகளாகப் பிரதிபலிப்பதுப்போல, இவர்கள் ஈசனின் ஒளிக்கீற்றுகளாக இருந்து மறைகிறார்கள். ஆனால், அந்த ஒளிக்கீற்றுகளின் தோற்றமான பேரொளியாகிய அருட்பெருஞ்சோதி மட்டும் முடிவற்று, காலமற்று எப்போதும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அதுவே, தூய அறிவு ஒளியாகிய ஆத்மா. பரமன், இறைவன்.

அதைத்தான் இந்த ரிஷி இந்த இரண்டாவது மந்திரத்தின் வாயிலாக, ஆத்மாவை எனக்கு நன்றாகத் தெரியும் என்றும் கூறமுடியாது. தெரியாது என்றும் கூறமுடியாது. ஏனெனில், என்னை எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஆத்மாவைத்தான் தெரியாது. அதே வேளையில், அந்த ஆத்மாவின் இருப்பை தன்னுள் உணரும்போது, '**தெரியாது என்று சொல்லவும் முடியாது**' அத்தகையவனே அந்த தூய அறிவாகிய ஆத்மாவை உண்மையில் உணர்வு வெளியில் உணர்கின்றான் என்று கூறுகின்றார்.

यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।
अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ॥ ३॥

யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ: l
அவிஜ்ஞாதம் விஜானதாம் விஜ்ஞாதம விஜானதாம் ll 3 ll

பொருள்:

யாருக்குத் தெரியாதோ? அவருக்குத் தெரியும், யாருக்குத் தெரியுமோ? அவருக்குத் தெரியாது. பிறரது கருத்தை நன்றாக அறிந்தவர்கள் அறியவில்லை. மற்றொருவரின் கருத்தை நன்றாக அறியாதவர்கள் அறிகிறார்கள்.

'**எதை அறிந்தால் அனைத்தையும் அறிய முடியுமோ**', அந்த அறிவைத்தான் இந்த மந்திரம் சொல்ல வருகின்றது.

அறிவில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று புறத்தைப் பற்றியது. மற்றது அகத்தைப் பற்றியது. அனுபவஅறிவு, விஞ்ஞான அறிவு போன்றவை புறத்தைப் பற்றிய அறிவு. ஆன்ம அறிவு மட்டுமே அகத்தைப் பற்றிய அறிவு.

இதிலே, புற அறிவு மட்டுமே கொண்டவன் நிச்சயமாக அக அறிவை அறிய முடியாது. ஆனால், அக அறிவை அறிந்தவன் அவசியம் புற அறிவையும் அறிந்து வைத்திருப்பான்.

பொதுவாக, நமக்கு வெளியே நாம் பெற்றிருக்கும் அறிவான புறஅறிவினால் மட்டுமே நமது எண்ணங்கள் உருவாக்கப்பட்டிருக்கும். நாமும் இந்த ஏற்றி வைத்துக் கொண்ட புற அறிவினைப் மனதில் கொண்டு **'நமக்கு அதிகமாகத் தெரியும்'** என்ற நினைப்பில் இருப்போம். இதற்குத் தகுந்தவாறு பேசுவோம். நடப்போம்! இல்லையா?

ஆனால், புற அறிவு விசயங்கள் மாறிக் கொண்டே இருக்கும். அவைகள் நிர்ணயிக்கப்பட நிச்சய அறிவு இல்லை. உதாரணமாக, நம்முடைய நடைமுறையில் நாம் காணும் அறிவியல் வளர்ச்சி, அரசியல் மாற்றம் என எத்தனையோ கூறலாம்.

ஆனால், அக அறிவு என்றும் மாறாதது. ஏன்? அது மட்டும் மாறாதது என்றால், அது நம்மை பற்றிய அறிவு. அதாவது, தன்னுடைய சுய அறிவு. அந்த அறிவைக் கொண்டுதான் நாம் அனைத்தையும் அறியவே முடியும்.

ஆனால், புற அறிவை அதிகமாக ஏற்றி வைத்துக் கொண்டவர்களால், இந்த அக அறிவை அறிய முடியாது. அதற்குக் காரணம், அவர்கள் நீர் நிரம்பிய குடம். ஆனால், அக அறிவு என்பது நீர் நிரம்பாத காலிக் குடம்.

நாம் நடைமுறையில் காலிக் குடத்தில்தான் நீரை ஊற்றுவோமே தவிர, நிறைந்த குடத்தில் நீரை ஊற்ற மாட்டோம். அதுப்போல, தூய அறிவாகிய பரமன் தன் சுயத்தை வெளிப்படுத்த வேண்டுமானால், மனம் காலியாக இருக்க வேண்டும். அதுவே, எண்ணங்களால் நிரப்பப்பட்ட மனதிலே அந்த தூய அறிவாகிய பரமன் பிரகாசிப்பது சிரமம் என்பதைத்தான் மேற்கண்ட 2 மற்றும் 3 ஆம் மந்திரங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

உதாரணமாக, நம் நடைமுறையில் உள்ள மனித வாழ்க்கையோடு ஒப்பிட்டு புரிந்துக் கொள்ள முயற்சிக்கலாமே.

ஒரு சிறு குழந்தை வாழ்க்கையை வெறுத்து மனமுடைந்து அல்லது சோகமாக இருப்பதை எப்போதாவது பார்க்க முடியுமா? என்றால், பெரும்பாலும் நடைமுறையில் இல்லை.

ஏன் அப்படி?

ஏனென்றால், குழந்தைகள் உலகம் வேறு. நம் போன்ற பெரியவர்கள் உலகம் வேறு.

அதாவது, இங்கு உலகம் என்று நாம் பார்க்கும் அனைத்தும் அவரவர்கள் மனம் சார்ந்த உலகம்.

குழந்தைகள் உலகம் விளையாட்டு, பொழுதுபோக்கு, சந்தோசம் கொண்ட அக உலகம். அக உலகம் மட்டுமே அவர்களுக்கு உண்மை. ஆனால். பெரியவர்கள் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் அடிப்படையில் வெளிப்பட்ட புற உலகத்தில், அவர்களுக்கான கடமைகள், பொறுப்புகள், குடும்பம், உத்தியோகம் என பலப் பெரிய பட்டியல்களைக் கொண்டதாக உள்ளது.

குழந்தைகள் இத்தகைய வல்லமைமிக்க புற உலகத்திற்கு வருவதில்லை. அதனால், அவர்கள் மனம் துக்கப்படுவதற்கான பாதிப்புகள் ஏதுமில்லை.

ஆகவே, நாம் உண்மையான **"நான்"** எனும் நம்முடைய சுயத்தை உணர வேண்டுமானால், அதற்காக நாம் ஏற்றி வைத்துக் கொண்ட மனச்சுயத்தில் (Ego) இருந்து விடுபட வேண்டும்.

இதற்கான முயற்சியைத்தான் காரைக்கால் அம்மையார் மேற்கொண்டார் என்பதைப் பார்த்தோம். அவர் அதற்காக பேய் உருவம் பெற்றார் என்றும் அறிந்தோம். அவரது வாழ்வின் இறுதியில் அவர் கைலாய மலைக்கு தலையிலேயே நடந்து சென்று, சிவனை தரிசித்தார் என்றெல்லாம் கூறப்பட்ட கதையை நாம் படித்திருப்போம். அதுப்போலவே, மற்றொரு கதை இஸ்லாம் மதத்தில் உள்ளது. அது ஒரு முல்லா கதை.

இந்தக் கதையின் மூலம், நாம் நம்முடைய மனச்சுயத்தை (அகங்காரத்தை) இழக்க என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய முற்படலாம்.

சின்ன வயதிலிருந்தே எப்போதும் இறைச் சிந்தையில் தன் மனத்தை வைத்து வாழ்க்கை நடத்திவந்த பக்திமானான முல்லா என்பவர் இஸ்லாமின் கொள்கைகளுக்கேற்ப வாழ்ந்து, தினமும் ஐந்து வேளை தொழுகை நடத்தி, தன் குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டு, அவர்கள் எல்லாம் நல்ல நிலைக்கு வந்தபின், புனித மெக்காவுக்கு 'ஹஜ்' பயணம் தொடங்குகிறார்.

அப்போதே அவருக்கு 70 வயதாகி விடுகிறது. தள்ளாமையுடன் தன் பயணத்தைத் தொடங்குகிறார். அந்தக் காலத்தில் விமானத்தில் போய் இறங்கும் வசதி இல்லை.

அரேபிய பாலைவனம் முழுவதும் கால்நடையாக நடந்து போய்த்தான் மெக்காவை அடைய முடியும். அந்த பாலைவனத்தில் அங்கங்கு சிறிய சிறிய சுனைகள் மற்றும் நீர் நிலைகள் காணப்படும். அந்த நீரை வெறும் கையில் மொண்டு குடிக்க முடியாதவாறு, கிணறுபோன்ற அமைப்பில்கூட சில நீர் நிலைகள் இருக்கும்.

அதனால், மெக்கா பயணம் செய்பவர்கள் பல நாட்களாக கெட்டுப் போகாத சில தின்பண்டங்களையும், கையில் வெறும் வாளி ஒன்றையும் நான்கு முழக் கயிறு ஒன்றையும் மட்டுமே எடுத்துக் கொண்டு செல்வார்கள்.

முதலில் சில நாட்கள் அங்கங்கே வழியில் தென்படும் பாலைவனச் சோலைகளில் கிடைக்கும் உணவையும், பேரீச்சம்பழங்களையும் உண்டு, அங்கு இருந்த சுனைகளிலிருந்து தண்ணீரைக் குடித்து அந்த முல்லா பயணத்தைத் தொடருகிறார்.

நாட்கள் செல்லச் செல்லப் பாலைவனச் சோலைகள் தென்படுவது அரிதாகிவிடுகிறது. அந்த நிலையில் முல்லாவுக்கு பசியும் தாகமும் வருத்துகின்றன. எப்போதாவது அங்கங்கே நீர்ச்சுனைகள் மட்டும் கண்களில் படுகின்றன. அதுவும் அல்லாவின் கருணை என்று கயிறு கொண்டு வாளியால் வெறும் தண்ணீரை மட்டும் இழுத்துக் குடித்துவிட்டு மேலே பயணத்தை தொடர்கின்றார். போகப் போகத் தண்ணீர்கூடக் கிடைப்பது அரிதாகிவிடுகிறது.

சில நாட்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் பாலைவனத்தின் கடும் வெயிலில் நடந்து களைப்புடன் ஒவ்வொரு அடியாக நடந்து செல்கிறார். பசியிலும் தாகத்திலும் கண்கள் இருட்டிக்கொண்டு வருகின்றன. மெக்காவுக்குப் போய்ச் சேருவோமா என்பதே அவருக்குச் சந்தேகமாகிவிடுகிறது.

கண்களை மூடிப் பிரார்த்திக்கிறார். 'அல்லா, உன் கருணையால், உன் உத்தரவுப்படி என் சமூகக் கடமைகளையெல்லாம் முடித்துவிட்டு உன் தரிசனம் தேடிப் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறேன். உன்னைத் தவிர என் வாழ்க்கையில் எதையும் பெரிதாக நான் எண்ணவில்லை. நான் உன்னை வந்து சேருவதற்குப் போதுமான அளவுக்குச் சக்தி வேண்டும். அவ்வளவுதான். வேறெதையும் நான் உன்னிடம் கேட்கவில்லை'.

உன் அடிமை குடிப்பதற்கு ஒரு வாய்த் தண்ணீர் இருந்தால் போதும். வேறொன்றும் வேண்டாம்,' என்று நெஞ்சுருகப் பிரார்த்தனை செய்கிறார்.

பத்து அடி தூரத்தில் மண்ணிலிருந்து தண்ணீர் ஊற்றாக மேலே எழுகிறது. 'ஆகா, அல்லாவின் கருணையே கருணை. இந்த எளிய பக்தனுக்கும் அருள் புரியும் உன் கருணைக்கு அளவேது, என் இறைவா!' என்று மனமுருகி, அந்த ஊற்றை நோக்கி நகரும் அந்தக் கணத்தில் பாலைவன நாய் ஒன்று அந்த நீரூற்றை நோக்கிப் போகிறது.

இவர் அங்கேயே நின்றுவிடுகிறார். அந்த நாய் தண்ணீர் குடித்துச் செல்லட்டும், பிறகு நாம் குடித்துக்கொள்வோம் என்று காத்திருக்கிறார். நாய் தண்ணீர் குடித்துவிட்டு நகர்கிறது. இவர் ஊற்றருகே செல்கிறார். தண்ணீர் மண்ணுக்குள் போய்விடுகிறது.

முல்லாவுக்கு உலகமே இருண்டு போனதுபோல் ஆகிவிடுகிறது. கண்களில் நீர் வழிய, மனம் நொந்து போய், பாலைவனத்துச் சுடுமணலில் மண்டியிட்டு அமர்ந்து, 'அல்லா, கருணையே வடிவானவனே, உன்னால் ஆகாதது எதுவும் கிடையாது. நீ அறியாதது ஒன்றுமில்லை. நினைவு தெரிந்த நாளிலிருந்து உன்னை நினைத்துத்தானே என் வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறேன்? இப்போது இந்தத் தள்ளாத வயதில் இந்தப் பாலைவனத்து வெயிலையும், குளிரையும் பொருட்படுத்தாமல் நடந்து எங்கே போகிறேன்?

உன் தரிசனத்துக்காகத்தானே?

நாக்கு நனைய ஒரு வாய் தண்ணீர்தானே கேட்டேன்?

இறைவனாகிய நீ இருப்பதைக்கூட அறியாத அந்த அற்ப ஐந்தறிவுள்ள நாய்க்கு நீ காட்டிய கருணையைக்கூட இந்த ஏழை பக்தனுக்குக் கிடையாதா?' என்று புலம்புகிறார்.

அப்போது பாலைவன வெளியில் ஒரு அசரீரி கேட்கிறது.

**'அந்த நாய் என்னை மட்டுமே நம்பி வந்தது. உன்னைப்போல் கயிற்றையும் வாளியையும் தூக்கி வரவில்லை!'**

அவ்வளவுதான்! அசரீரி நின்று விட்டது.

முல்லாவுக்கு அந்த அசரீரி கூறிய வார்த்தை அவரது இறை பக்தியின் ஆழத்தை ஆழமாகச் சுட்டிக் காட்டியது. ஆம் அவர் முழுமையாக இறைவனை நம்பாமல், தன்னுடைய அறிவினால், அனைத்தையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் நீரைக்குடிக்க அந்த கயிற்றையும், வாளியையும் எடுத்துக் கொண்டு வந்தார்.

இப்போது, புரிந்துக் கொண்டார். உடனடியாக அவரது கையிலிருந்து கயிறும், வாளியும் தாமாகக் கீழே விழுகின்றன. '**அல்லா, என்னை மன்னித்துவிடுங்கள்**'. இனி நீங்கள்தான் எனக்குத் துணை. நான் மெக்கா போய்ச் சேருவது இனி உங்கள் தயவில்தான் இருக்கிறது! என்று புதிய தெளிவுடன் மெக்கா போய்ச் சேருகிறார் முல்லா.

இந்தக் கதை இங்கு நமக்கு கூறவரும் கருத்து என்னவென்றால், இறைவனிடம் பரிபூரண நம்பிக்கை வரும்போது மட்டும்தான் இறைவனின் அருள் அளவற்றுப் பொழியும்.

அதைவிடுத்து, '**என்னால் முடியும்**' என்று நினைக்கும் வரையில், இறைவன் எந்த வகையிலும் நம் வாழ்க்கையில் குறுக்கிடுவதில்லை. தன்னால் ஆனதையெல்லாம்

செய்துவிட்டு, அதற்குமேல் முடியவில்லை என்பதையறிந்து, 'இறைவா! நீதான் இனி பார்த்துக் கொள்ள வேண்டும்!' என்று முழுமையாக அவனிடம் சரணடையும்போது மட்டும்தான் நம்மை அந்த இறைவன் வழி நடத்துகின்றான் என்ற பூரண சரணாகதியின் மகத்துவம் நமக்குப் புரிகின்றது.

அதே சமயம், இங்கு நாம் சரணடைய வேண்டியது, நமது மனதுக்கு மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட புறத்தில் காணப்படுகின்ற உருவத்தில் காணப்படும் கடவுளிடம் அல்ல!

ஆகவே, நாம் நம்முடைய அகத்தில் இருக்கின்ற அந்த தூய அறிவிடம் மட்டுமே சரணடைய வேண்டும். அப்போது மட்டுமே அந்த அறிவு நம்மை சரியான வழியில் அழைத்துச் செல்லும். அந்நிலையில் நம்மிடம் இருக்கின்ற, இனி வருகின்ற துயரங்கள் எல்லாம் நம்மைவிட்டு முழுமையாக விலகவும் செய்யும்.

உலகின் பொருட்கள் எதையும் அறிவதற்கு நம்மிடம் நான் எனும் மனச்சுயம் (EGO) அடிப்படையாக இருப்பது அவசியம். நான் **(அறிபவன்) – அறிவு – அறியப்படும் பொருள்** இந்த மூன்றும் சேரும்போதுதான் நாம் எதையும் அறிய முடியும். இந்த மூன்றும் மறைகின்ற இடத்தில் தோன்றுவதே **ஆன்ம அறிவு** அல்லது **ஆன்ம ஞானம்** அல்லது **ஆன்ம அனுபூதி**.

**'நான்–உணர்வு அழிந்த பிறகு, அங்கே புதிதாகத் தோன்றுவதே ஆன்ம உணர்வு'** என்று விளக்குகிறார் ஸ்ரீரமணமகரிஷி. நான்–உணர்வு அழிந்த பிறகு கிடைக்கின்ற இந்த அனுபூதி அனுபவத்திற்கு மட்டுமே உரியது. விளக்கத்துக்கு உரியது அல்ல.

எனவே, உலகப் பொருட்களைத் தெரிவது போல், அதாவது புறப் பொருட்களை மனத்தால் அறிவது போல், ஆத்மாவைத் தெரியாதவன் உண்மையில் அதனைத் தெரிந்திருக்கிறான். உலகப் பொருட்களைத் தெரிவது போல் தெரிந்தவன் உண்மையில் அதனை அறியவில்லை.

### ஆத்மாவை அறிதல் என்றால்? :

தூய அறிவாகிய ஆத்மாவை அறிதல் என்றால் ஒரு பொருளை அறிதல் போல அல்ல! என்பதை இதற்கு முந்தைய இரண்டு மந்திரங்கள் விளக்கின. ஆத்மாவை அறிதல், ஆத்மாவை அடைதல், ஆன்ம அனுபூதி என்றெல்லாம் சொல்வதன் பொருள் என்ன? என்பதை இந்த மந்திரம் விளக்குகிறது.

प्रतिबोधविदितं मतममृतत्वं हि विन्दते ।
आत्मना विन्दते वीर्यं विद्यया विन्दतेऽमृतम् ॥ ४॥

ப்ரதிபோத விதிதம் மதம்(அ)ம்ருதத்வம் ஹி விந்ததே ।
ஆத்மனா விந்ததே வீர்யம் வித்யயா விந்தே(அ)ம்ருதம் ॥ 4 ॥

பொருள்:

உணர்வின் ஒவ்வொரு நிலையிலும் அந்த தூய அறிவாகிய ஆத்மாவை அறிபவனே உண்மையில் அறிகிறான் என்பது கருத்து. ஞானத்தால் அறியப்படும் கருத்து அழிவற்ற தன்மையை அடைகிறது. அப்படி அறிந்தவன் மட்டுமே நிச்சயமாக அழியாமையைப் பெறுகிறான். தன்னுடைய சுய அறிவு (ஆத்மா) விழிக்கப்பெற்றவன் மரணமிலாப் பெரு நிலையை அடைகிறான்.

நாம் ஏற்கனவே பார்த்ததுப் போல, **உடல், மனம், ஆத்மா** என்று இவைகளால் அமைந்த தொகுதிதான் மனிதன். இதில், ஆத்மா மட்டுமே உணர்வுப் பொருள். ஆத்மாவுக்கு வேறாக நாம் அறிகின்ற அனைத்தும் உணர்வற்றவைகள்.

அது எப்படிங்க? ஆத்மாவைத் தவிர, மற்றவைகளுக்கெல்லாம் உணர்வு இல்லை என்று சொல்ல முடியும்? என்ற சந்தேகம் வந்தால், இங்கு படைக்கப்பட்ட அனைத்திலும் அந்த உணர்வு இருக்கும்வரை மட்டுமே அவைகள் உயிர் உள்ளவைகள். அந்த உடல்களால் ஆத்மாவை பிரகாசிக்க முடியாத நிலை உண்டானால், அவைகள் வெறும் ஜடம் மட்டுமே.

உதாரணமாக, நெருப்பில் இடப்பட்ட இரும்புத் துண்டு, அந்த நெருப்பு போலவே ஜொலிக்கிறது. அந்த இரும்புத் துண்டின் ஒளியும், சூடும் உண்மையில் அதற்கு உரியவைகள் அல்ல. நெருப்பின் தொடர்பால், அந்த இரும்புத் துண்டு நெருப்பு போல மாறித் தெரிகின்றது. அதுப்போலவே, ஆத்மா என்ற உணர்வுப் பொருளின் தொடர்பால் இந்த **உடல், மனம்** போன்றவைகள் உணர்வுப் பொருள் போலத் தோன்றுகின்றன.

உயிருள்ள ஒவ்வொரு உடலும் தன்னகத்தே கொண்டுள்ள உணர்வின் ஒவ்வொரு நிலையிலும் அந்த ஆன்ம உணர்வு உணரப்பட வேண்டும் என்கிறது இந்த மந்திரம்.

அதாவது, உடம்பின் ஒவ்வொரு செயல்பாட்டிலும், மனத்தின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் **ஆன்ம உணர்வு** வெளிப்படுவதை உணர வேண்டும். அவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் ஆன்ம உணர்வு வெளிப்படுவதை உணர்பவனே உண்மையில் ஆத்மாவை அறிகிறான்.

இதைப் பற்றி இன்னும் சற்று ஆழமாகப் பார்க்கலாம்.

இப்போது நம்முடைய நடைமுறையிலே பார்க்கும்போது, புறத்திலே அதிகம் ஆர்வம் காட்டும் நமது மனம் அதன் மாயத் தளத்திலிருந்து சற்றே விலகி, உள்ளுருமாற்றம் என்கின்ற எதார்த்த நிலையில் சற்றே உள்ளே திரும்பி எண்ணங்களைப் பார்க்கத் தொடங்கினால் போதும், மனம் தன்னை வழி நடத்தும் சுய அறிவு இருப்பதை உணரத் தொடங்கும்.

ஆனால், இது அவ்வளவு எளிதல்ல! இது எப்படியெனில், மலையடிவாரத்திலிருந்து மலையுச்சிக்கு ஏறிப்போய் அடையும் சாகசம் போன்றது என்பதும் அப்போதுதான் புரியும். அதாவது, அந்த மலை உச்சி நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. நாம்தான் மலையுச்சிக்கு ஏறிப்போக வேண்டும். அந்த மலைச்சிகரம் நமக்காகக் கீழே இறங்கி வர முடியாது.

இந்த அடிப்படை உண்மையை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துக் கொண்டால், நம்முடைய சுய அறிவு ஆகிய தூய பிரக்ஞையின் ஆன்ம ஒளிப் பிரகாசம் எங்கும், எதிலும் பரவிப் பிரகாசிப்பதைப் பார்க்க முடியும். அந்த ஆன்ம ஒளிப் பிரகாசத்தை நம்முள்ளே நாம் குவிக்கும்போது மட்டும்தான், நம்முடைய அத்தனை அறியாமைகளும் அகன்று, அந்த தூய அறிவு நிலைக்கு உயர முடியும்.

அதாவது, தன்னுடைய வளர்ச்சிக்கு தான் மட்டுமே பொறுப்பு.

நான் எனும் மனம் தன் அறியாமையை உணர்ந்து, அதிலிருந்து விடுபட எண்ணி, அதற்கான வளர்ச்சிப் பாதையில், அக அறிவை நோக்கிப் பயணம் மேற்கொள்ளும்போது, அந்த மனதிற்கு உறுதுணையாக அதே தூய அறிவு துணை நிற்பதையும் அறிய முடியும்.

அத்தகைய அந்த தூய அறிவுப் பாதையில் நுழையும் முடிவை நாம் மட்டும்தான் எடுக்க முடியும். நம்மை மற்றவர்கள் யாரும் கட்டாயப்படுத்தி எடுக்க வைக்க முடியாது. அதற்கான அவசியமும் அவர்களிடம் இல்லை. ஆனால், அந்த தூய அறிவுப் பாதையில் நுழையும் முடிவை நாம் மட்டும் எடுத்துவிட்டால், அதன்பின் நம் வாழ்க்கை அந்தக் க்ஷணமே அந்த தூய அறிவின் வசம் வந்துவிடும்.

ஒவ்வொரு க்ஷணத்திலும், ஒவ்வொரு கட்டத்திலும் அந்த தூய அறிவின் பிரகாசத்தினால்தான் மனம் அனைத்தையும் அறிகின்றது. அந்த மனம் தன்னை அந்த தூய அறிவிடம் முழுவதுமாக ஒப்பிவிக்கும்போது, அந்த தூய அறிவு தன்னை வெளிப்படுத்த வேண்டி, ஏதேனும் ஒரு புதிய அணுகு முறையில் நல்லதொரு புத்தகமாக நம்மிடம் வரலாம். அல்லது ஆத்ம ஞானம் அடைந்த நண்பர்கள் போன்று நம்மிடம் வரலாம்.

**எப்படி வேண்டுமானாலும், நாம் எதிர்பாராத தருணத்தில், எதிர்பாராததொரு அனுபவத்தை நமக்குத் தருவதற்காகவே வரும். அதன் வாயிலாக, நம்முடைய வாழ்க்கையில் புதியதொரு வசந்தம் வீசத் தொடங்கும். நம் மனதில் அந்த தூய அறிவு வெளிச்சம் பிரகாசிக்கத் தொடங்கியிருப்பதை மெல்ல மெல்ல நம்மால் உணரவும் முடியும்.**

**மனம் அந்த தூய அறிவின் அதிர்ஷ்டானத்தில்தான் இயங்குகின்றேன் என்று அறியும்போது, அந்த மனதிற்கும், தூய அறிவுக்கும் இடையில் ஒரு நல்லிணக்கம் உண்டாகும்.** எந்நேரமும் அந்த அறிவிடம் தன்னை ஒப்படைத்த மனதிற்கு அதன் மன இருளைப் போக்கும் விதமான பலப் பல புதிய தகவல்கள் வெளிச்சங்களாக கிடைத்துக்கொண்டே இருக்கும்.

இது ஆரம்பத்தில் அந்த மனதிற்கு வெளிப்படையாகத் தெரியாது. ஆனால், போகப் போகத்தான் அந்த மனதிற்கு '**பழையன கழிதலும், புதியன புகுதலும்!**' ஆகிய போகிப் பண்டிகை போன்ற, பழைய எண்ணங்கள் எரிக்கப்பட்டு, புதிய சிந்தனைகளான யோகியின் எண்ணங்கள் என்பதை அந்த தூய அறிவின் வெளிச்சம் மூலம் அறியவும் முடியும்.

அந்த நிலையில், அந்த தூய அறிவு கனவில்கூட மனதிற்கு நிறைய நல்ல விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கும். மனதிற்கும், அந்த தூய அறிவிற்கும் இடையில் நிலைகொண்டுள்ள பரிவர்த்தனை பவித்ரமானது என்று, அந்த மனதிற்கு புரியத் தொடங்கும்போது, பல நேரங்களில் மனதின் வழியாக அறிவுதான் தன்னுடைய மௌன மொழியில் பேசுகின்றது என்ற உண்மையும் விளங்கும்.

அப்போது மட்டும்தான் நம் வாழ்க்கையை அந்த தூய அறிவுதான் வாழ்கின்றது என்பதும் புரியவரும். அந்த நிலையில், அந்த தூய அறிவின் அற்புதத்தினால், **நீயே நானாக!, நானே நீயாக!** என அந்த அறிவும், மனமும் ஒன்றாக உள்ள நிலை நம்மால் உணரப்படும்.

அந்த தூய அறிவு நிலையில் மட்டும்தான் நாம் கண்ணுக்கும், கருத்துக்கும் அப்பாற்பட்ட அனைத்தையும் அறியும் அறிவாக, நான் எங்கும் நிறைந்தவன், என்றென்றும் இருப்பவன், நிலையானவன் என்பதை உணர்கின்றோம். அந்த தூய அறிவு நமக்கு எல்லையற்ற ஆற்றலைத் தருகின்றது. அதுவே, அனைத்துக்கும் மூலாதாரமான, பேச்சும், மூச்சும் கடந்த ஆதி நிலை ஆகும். அந்த நிலையில், அவன் **மரணமிலாப் பெருநிலையை** அடைகிறான்.

இதைத்தான் இந்த மந்திரம் உணர்வின் ஒவ்வொரு நிலையிலும், அவன் தூய அறிவாகிய ஆத்மாவை உண்மையில் உணர்கிறான் என்பதாக கூற வருகின்றது.

## உண்மையான நிறைவும் மாபெரும் இழப்பும்:

इह चेदवेदीदथ सत्यमस्ति
न चेदिहावेदीन्महती विनष्टिः ।
भूतेषु भूतेषु विचित्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥ ५॥

இஹ சேதவேதீ தத சத்யமஸ்தி
ந சேதி ஹாவேதீன் மஹதி வினஷ்ட்டி: l
பூதேஷு பூதேஷு விசித்ய தீரா:
ப்ரேத்யாஸ்மால் லோகாம்ருதா பவந்தி ll 5 ll

பொருள்:

இங்கேயே ஆத்மாவை அறிந்தால் வாழ்க்கையில் உண்மையான நிறைவு ஏற்படுகிறது. ஆத்மாவாகிய சுய அறிவை அறியாவிட்டால் மாபெரும் இழப்பாகும். விழிப்புணர்வு பெற்றவர்கள் எல்லா உயிர்களிலும் தன் சுய அறிவாகிய ஆத்மாவை உணர்கிறார்கள். அத்தகையோர் இந்த உலகிலிருந்து விடுபட்டு மரணமற்றவர்களாக மாறுகின்றார்கள்.

உலகின் செல்வங்கள் அனைத்தும் நம்மிடம் இருந்தாலும், நம் மனம் நிறைவு பெற்றுவிடும் என்பது நிச்சயம் கிடையாது. ஆன்ம அனுபூதி மட்டுமே நமக்கு உண்மையான நிறைவைத் தரும்.

எப்படி?

ஆன்ம உணர்வு பெற்றவன் எதையும் செய்ய வல்லவன் ஆகிறான். அவனால் முடியாதது இந்த உலகில் எதுவும் இல்லை. ஏனெனில், அவன் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை, எதையும் நாட வேண்டியதில்லை, எதையும் இழக்க வேண்டியதில்லை. இந்த உணர்வு அவனை தன்னில் நிலைபெற்றவன் ஆக்குகிறது. அவன் தன்னிலேயே இன்பம் காண்கிறான். தனக்குள்ளேயே நிறைவுபெற்று வாழ்கிறான்.

மாறாக, இந்த உண்மையை உணராமல் வாழ்பவன் நிறைவை வெளியில் தேடுகிறான். இவ்வாறு புறத்தில், தவறான இடத்தில் தேடுவதால், அவனுக்கு அது கிடைப்பதில்லை. அவன் உண்மையில் வாழ்க்கையை இழக்கிறான்.

ஆன்ம அனுபூதியின் மற்றொரு பரிமாணம் இது.

ஆன்ம அனுபூதி பெற்றவன், தன்னில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும், உயிரினங்கள் அனைத்திலும் தன்னையே (ஆத்மாவை) உணர்கிறான். எங்கும் தன்னையே (ஆத்மாவையே) காண்பவன் எங்கே போவான்? எங்கே வருவான்?

மரணம் என்பது அவனைப் பொறுத்தவரை பொருளற்றதாகி விடுகிறது. அவன் மரணத்தை வென்றவன் ஆகிறான், **மரணமிலாப் பெருநிலையை** அடைகிறான்.

(இந்த இடத்தில் நம்மில் பலர் மோட்சம் அல்லது முக்தி என்பது குறித்து தவறாக நினைத்துக் கொண்டிருப்பது பற்றிக் கூற விழைகிறேன். இறக்கும் போது மோட்சத்தை ஒருவன் அடைவதாகவும் அப்போது அவன் சொர்க்கத்துக்கு செல்வதாகவும் பலர் சொல்கின்றனர். நமது ஆன்மீக நூல்கள் பலவும் அதையே சொல்கின்றன. இதனால் பலரும் யோகத்தில் சிறந்து விளங்கி விட வேண்டும், குண்டலினியை மேலேற்ற வேண்டும், ஆக்ஞையில் அதை நிலைநிறுத்த வேண்டும் என்றெல்லாம் படித்து, அவ்வாறே செய்ய முயல்கின்றனர். ஆனால், உண்மை அதுவல்ல!. ஆன்ம அனுபூதியை ஒருவன் பெற்றாலே அது முக்திதான். அவன் ஜீவன் முக்தன்தான்.

எப்படி?

உலகம், சொர்க்கம், நரகம், தான், வேறு மனிதர்கள், மனைவி, மக்கள் இப்படி எவரிடமும் வேறுபாடு பாராத இருமைகள் இல்லாத நிலையை ஒருவன் அடைந்து விட்டால், அப்புறம் அவன் இவ்வுலகில் இருந்தால் என்ன? சொர்க்கத்தில் இருந்தால் என்ன? நரகத்தில் இருந்தால் என்ன? எல்லாமே அவனுக்கு ஒன்றுதானே! அதாவது, பேத/அபேத நிலையை கடந்தவனாக அவன் இருக்கின்றான்.

பேதத்தைக் காண்பவன் மட்டும்தான் மனதால் கஷ்டப்படுகிறான். உடற்துன்பம் கூட மனம் உணர்வதால்தான் உண்டாகின்றன. கோமாவில் இருப்பவனுக்கு உடற்துன்பம் புரியுமா? ஆகவே, பேத நிலையைத் தாண்டி, அபேத நிலையை ஒருவன் அடைந்து விட்டால், அவனுக்கு பிரிவினைகள் தெரியாது. அவ்வாறு, இருமைகள் தெரியாத நிலையை ஒருவன் அடைதலே **முக்தி** எனப்படுகின்றது.)

॥ इति केनोपनिषदि द्वितीयः खण्डः ॥

இதி கேநோபநிஷதி த்விதீய கண்ட: ॥

இத்துடன் கேன உபநிஷதத்தின் இரண்டாம் அத்தியாயம் நிறைவு பெறுகிறது.

# அத்தியாயம் 3

ஆத்மாவே ஆதாரம்:

தண்டவாளமின்றி ரயில் ஓட முடியாது. திரையின்றி திரைப்படம் பார்க்க முடியாது. அவ்வாறு நமது உடல்–மனச் சேர்க்கைக்குப் பின்னால், நமது வாழ்க்கைக்கு ஆதாரமாக அந்த தூய அறிவாகிய ஆத்மா உள்ளது. ஆத்மாவின் காரணமாகத்தான் எல்லாவிதமான உடல் – மனம் இயக்கங்களும் நடைபெறுகின்றன என்பதை ஒரு கதையின் மூலம் இந்த அத்தியாயம் விளக்குகிறது.

ब्रह्म ह देवेभ्यो विजिग्ये तस्य ह ब्रह्मणो
विजये देवा अमहीयन्त त ऐक्षन्तास्माकमेवायं
विजयोऽस्माकमेवायं महिमेति । ॥ १॥

ப்ரஹ்ம ஹ தேவேப்யோ விஜிக்யே தஸ்ய ஹ ப்ரஹ்மணோ
விஜயே தேவா அமஹீயந்த த ஏக்ஷந்தாஸ்மாகமேவா அயம்
விஜயோ(அ)ஸ்மாகமேவ அயம் மஹிமேதி | ‖ 1 ‖

பொருள்:

தேவர்களுக்காக உண்மையில் வெற்றி பெற்றவர் கடவுள். ஆனால் அந்த வெற்றியில் தேவர்கள் களித்தனர். '**இந்த வெற்றி எங்களுடையதே, இந்தப் பெருமை எங்களுடையதே**' என்று அவர்கள் எண்ணினார்கள்.

तद्धैषां विजज्ञौ तेभ्यो ह प्रादुर्बभूव तन्न व्यजानत
किमिदं यक्षमिति ॥ २॥

தத்தைஷாம் விஜஜ்ஞௌ தேப்யோ ஹ ப்ராதுர்பபூவ |
தன்னவ்யஜானத கிமிதம் யக்ஷமிதி ‖ 2 ‖

பொருள்:

தேவர்களின் அந்தத் தவறான எண்ணத்தை அறிந்த கடவுள் அவர்கள் முன் ஒரு யட்சனின் வடிவில் தோன்றினார். அந்த யட்சன் யார்? என்று தெரியாமல் தேவர்கள் குழம்பினார்கள்.

**யட்சன் – யட்சினி**: இரவில் இவர்களுக்கு கண்கள் தெரியும். அதாவது, இதன் பொருள் இவர்களிடம் உள்ள புத்தி தூய அறிவில் எல்லா நிலையிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். மற்றவர்கள் மனதை ஊடுறுவிப் பார்க்கும் பக்குவம் இவர்களுக்கு மட்டுமே உண்டு.

तेऽग्निमब्रुवञ्जातवेद एतद्विजानीहि
किमिदं यक्षमिति तथेति ॥ ३॥

தேஅக்னிமப்ருவன் ஜாதவேத ஏதத்விஜானீஹி
கிமேதத் யக்ஷமிதி ததேதி ॥ 3 ॥

பொருள்:

தேவர்கள் அக்னிதேவனைஅழைத்து, '**அக்கினிதேவனே; இந்த யட்சன் யார் என்பதை அறிந்து வருவாயாக**' என்றனர். அவனும், '**அப்படியே ஆகட்டும்**' என்று கூறி புறப்பட்டான்.

(இந்தக் கதை ஒரு அற்புதமான சம்பவத்தை விளக்கும் கதை. இது தேவர்களுக்குப் பரம புருஷன் பாடம் புகட்டிய கதை! தேவர்களுக்கும் தேவர்களின் தலைவனான இந்திரனுக்கும், இதர பிரஜாபதிகலான அக்கினி, வாயு, வருணன் ஆகியோருக்கும் தோன்றாக் கடவுளான புருஷன் அவர்களின் கர்வத்தை அடக்கிப் பாடம் புகட்டிய சம்பவத்தை இது வர்ணிக்கிறது. இது நம்மைப் போன்ற மனிதர்கள் பலரும் படித்துப் புரிந்துக் கொண்டு எப்போதும் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டிய கதை! தேவர்கள், இந்திரன் போன்ற இவர்கள் பாடே இப்படி என்றால், அற்ப மனிதர்களான நம் போல மனிதர்கள் எம்மாத்திரம்? வாழ்க்கையில் உயரும்போது '**எல்லாம் அவன் செயல்!**' என்று அகந்தையின்றி, பணிவு வரும் போது, அதையும் அவனுக்கே அர்ப்பணித்து வாழும் குணம் நம்மைப் போன்ற மனம் படைத்த மனிதர்களுக்கு வரவேண்டும் என்று இந்தக் கதை கூறவருகின்ற கருத்து.)

நீ யார்? :

तदभ्यद्रवत्तमभ्यवदत्कोऽसीत्यग्निर्वा
अहमस्मीत्यब्रवीज्जातवेदा वा अहमस्मीति ॥ ४॥

ததப்யத்ரவத் தமப்யவதத் கோஅஸீத்யக்னிர் வா
அஹம் அஸ்மீதி அப்ரவீத் ஜாதவேதா வா அஹமஸ்மீதி ॥ 4 ॥

பொருள்:

தேவர்கள் கூறியதைக் கேட்ட அக்கினிதேவன் யட்சனிடம் விரைந்தான். அந்த யட்சன் அக்கினிதேவனிடம், '**நீ யார்?**' என்று கேட்டார். '**நான் அக்கினி** அல்லது **ஜாதவேதன் (அனைத்தையும் அறிபவன்)**' என்று அக்கினிதேவன் பதிலளித்தான்.

तस्मिꣳस्त्वयि किं वीर्यमित्यपीदꣳ सर्वं
दहेयं यदिदं पृथिव्यामिति ॥ ५॥

தஸ்மிம்ஸ்த்வயி கிம் வீர்யமித்யபீதம் ஸர்வம்
தஹேயம் யதிதம் ப்ருதிவ்யாமிதி ॥ 5 ॥

பொருள்:

'**உன்னிடம் என்ன சக்தி உள்ளது?**' என்று யட்சன் கேட்டார். அதற்கு அக்னி தேவன், 'இந்தப் பூமியிலுள்ள அனைத்தையும் என்னால் எரிக்க முடியும்' என்று பதிலளித்தான்.

तस्मै तृणं निदधावेतद्दहेति ।
तदुपप्रेयाय सर्वजवेन तन्न शशाक दग्धुं स तत एव
निववृते नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति ॥ ६॥

தஸ்மை த்ருணம் நிததாவேதத் தஹேதி
ததுபப்ரேயாய ஸர்வஜவேன, தன்ன சசாக தக்தும், ஸ தாதா ஏவ
நிவவ்ருதே நைததசகம் விஜ்ஞாதும் யதேதத் யக்ஷமிதி ॥ 6 ॥

பொருள்:

அந்த யட்சன் அக்கினிதேவனின் முன்னால் ஒரு தர்ப்பைப் புல்லை வைத்து, '**இதனை எரி**' என்றார். அக்கினிதேவனும் விரைவாக அந்தப் புல்லை அணுகினான். ஆனால் அவனால் அதனை எரிக்க முடியவில்லை. எனவே திரும்பிவிட்டான். பிறகு தேவர்களிடம் சென்று, '**அந்த யட்சன் யார் என்பதை என்னால் அறிய இயலவில்லை**' என்று தெரிவித்தான்.

अथ वायुमब्रुवन्वायवेतद्विजानीहि
किमेतद्यक्षमिति तथेति ॥ ७॥

அத வாயும் அப்ருவன் வாயவேதத் விஜானீஹி
கிமேதத் யக்ஷமிதி ததேதி ॥ 7 ॥

பொருள்:

பிறகு தேவர்கள் வாயுதேவனை அணுகி, '**வாயுதேவனே இந்த யட்சன் யார் என்பதை அறிந்து வா**' என்று கூறினர். வாயுதேவனும் '**அப்படியே ஆகட்டும்**' என்று கூறி புறப்பட்டான்.

तदभ्यद्रवत्तमभ्यवदत्कोऽसीति वायुर्वा
अहमस्मीत्यब्रवीन्मातरिश्वा वा अहमस्मीति ॥ ८॥

ததப்யத்ரவத் தமப்யவதத் கோஅஸீதி வாயுர்வா
அஹம் அஸ்மீதி அப்ரவீத் மாதரிச்வா வா அஹமஸ்மீதி ॥ 8 ॥

பொருள்:

தேவர்கள் கூறியதைக் கேட்ட வாயுதேவன் யட்சனிடம் விரைந்தான். அந்த யட்சன் வாயுதேவனிடம், '**நீ யார்?**' என்று கேட்டார். '**நான் வாயுதேவன் அல்லது மாதரிச்வன் (வானவெளியில் சஞ்சரிப்பவன்)**' என்று வாயுதேவன் பதிலளித்தான்.

**அனைத்தையும் தூக்குவேன்:**

तस्मिँस्त्वयि किं वीर्यमित्यपीदँ
सर्वमाददीय यदिदं पृथिव्यामिति ॥ ९॥

தஸ்மின்ஸ்த்வயி கிம் வீர்யமித்யபீதம்
ஸர்வமாததீய யதிதம் ப்ருதிவ்யாமிதி ‖ 9 ‖

பொருள்:

'**உன்னிடம் என்ன சக்தி உள்ளது?**' என்று யட்சன் கேட்டார். அதற்கு வாயுதேவன், '**இந்தப் பூமியிலுள்ள அனைத்தையும் என்னால் தூக்க முடியும்**' என்று பதிலளித்தான்.

तस्मै तृणं निदधावेतदादत्स्वेति
तदुपप्रेयाय सर्वजवेन तन्न शशाकादातुं स तत एव
निववृते नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति ॥ १०॥

தஸ்மை த்ருணம் நிததாவேததாதத்ஸ்வேதி
ததபப்ரேயாய ஸர்வஜவேன, தன்ன சசாகாதும், ஸ தத ஏவ
நிவவ்ருதே நைததசகம் விஜ்ஞாதும் யதேதத் யக்ஷமிதி ‖ 10 ‖

பொருள்:

அந்த யட்சன் வாயுதேவனின் முன்னால் ஒரு புல்லை வைத்து, '**இதனைத் தூக்கு**' என்றார். வாயுதேவனும் மிகவும் விரைவாக அந்தப் புல்லை அணுகினான். ஆனால் அவனால் அதனைத் தூக்க முடியவில்லை. எனவே திரும்பி விட்டான். பிறகு தேவர்களிடம் சென்று '**அந்த யட்சன் யார் என்பதை என்னால் அறிய இயலவில்லை**' என்று தெரிவித்தான்.

अथेन्द्रमब्रुवन्मघवन्नेतद्विजानीहि किमेतद्यक्षमिति तथेति
तदभ्यद्रवत्तस्मात्तिरोदधे ॥ ११॥

அதேந்த்ரம் அப்ருவன் மகவன்னேதத் விஜானீஹி கிமேதத் யக்ஷமிதி ததேதி
ததப்யத்ரவத் தஸ்மாத் திரோததே ‖ 11 ‖

பொருள்:

பிறகு தேவர்கள் இந்திரனை அணுகி, '**இந்திரனே அந்த யட்சன் யார் என்று அறிந்து வா!**' என்று கூறினார். இந்திரனும், '**அப்படியே ஆகட்டும்**' என்று கூறி யட்சனை நோக்கி விரைந்தான். ஆனால், அதற்குள் அந்த யட்சன் அங்கிருந்து மறைந்தான்.

स तस्मिन्नेवाकाशे स्त्रियमाजगाम बहुशोभमानामुमाँ
हैमवतीं ताँहोवाच किमेतद्यक्षमिति ॥ १२॥

ஸ தஸ்மின்னேவாகாசே ஸ்திரியமாஜகாம பஹுசோபமானாமுமாம்
ஹைமவதீம் தாம் ஹோவாச கிமேதத் யக்ஷம் இதி ॥ 12 ॥

பொருள்:

பொன் ஆபரணங்களை அணிந்து மிகுந்த அழகுடன் பொலிந்து தோன்றிய உமாதேவியை அந்த வானிலேயே இந்திரன் கண்டான். அவன் அவளிடம் '**இந்த யட்சன் யார்?**' என்று கேட்டான்.

(இந்த கதை மிக நுண்மையான பல கருத்துக்களைக் கொண்டுள்ளது. நம் போல மனிதர்களின் காரியங்கள் எதுவும் நம்மாலே ஆவதில்லை. ஆனால் நாமோ நான்–உணர்வு (EGO) காரணமாக அனைத்தையும் நாமே செய்வதாக சொல்லிக் கொள்கிறோம். ஆனால் நாம் யாராலோ இயக்கப்படுகிறோம். தம்மை இயக்குவது யாரென்று அறியாமல் கர்வமடைந்த தேவர்களுக்கு பாடம் புகட்டும் அற்புத நிகழ்வாக இது சொல்லப்படுகிறது)

॥ इति केनोपनिषदि तृतीयः खण्डः ॥

இதி கேனோபநிஷதி த்ருதீய கண்ட: ॥

இத்துடன் கேனோபநிஷதம் மூன்றாம் அத்தியாயம் நிறைவு பெறுகிறது.

# அத்தியாயம் 4

<u>கதையும் பாடமும்:</u>

இந்தக் கதையில் வரும் அக்கினி, வாயு முதலான தேவர்கள் புலன்களுக்கும், தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் தலைமைப் புலனான மனத்திற்கும் உருவகமாகக் கூறப்பட்டுள்ளனர்.

அக்கினி எதையும் எரிக்க வல்லவன். வாயு எதையும் சுமக்க வல்லவன். இவ்வாறே தேவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆற்றல் பெற்றவர்கள். ஆனால் இந்த ஆற்றல்கள் எதுவும் யட்சனின் முன் செயல்படவில்லை. அவர்கள் தோல்வியுற்றுத் திரும்ப நேர்ந்தது. இறைவன் தந்த வெற்றியைத் தங்கள் திறமையால் வந்த வெற்றியாக எண்ணியதன் விளைவு இது அவர்களுக்குப் பாடம் புகட்ட விரும்பிய இறைவன் தமது ஆற்றலை அவர்களிடமிருந்து விலக்கிக் கொண்டார். எனவே தேவர்களால் எதையும் செய்ய இயலவில்லை – அக்கினியால் எரிக்க முடியவில்லை. வாயுவால் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை.

தேவர்கள் புலன்களுக்கு உருவகமாகக் கூறப்பட்டுள்ளனர். கண்கள் காண்கின்றன, காதுகள் கேட்கின்றன, கால்கள் நடக்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு புலனும் தங்களுக்கென்று ஒரு ஆற்றலைப் பெற்றுள்ளன. ஆனால் கண்கள் காண்பதற்கும் காதுகள் கேட்பதற்கும் உரிய ஆற்றல் ஆத்மாவிலிருந்து வருகிறது (#1:2). ஆத்மா தனது உணர்வைப் புலன்களிலிருந்து விலக்கிக் கொண்டால், கண்கள் காணவோ, காதுகள் கேட்கவோ இயலாது.

மரணம் இதற்கொரு உதாரணம் ஆகும். மரணத்தில் பிராணன் புலன்களிலிருந்து பிரிக்கப்படுகிறது. அதன் பிறகு கண்கள் காண்பதில்லை; காதுகள் கேட்பதில்லை. பிராணன் மட்டுமல்ல, நமது உடம்பு, மனம் என்று அனைத்தின் இயக்கங்களும் ஆத்மாவின் காரணமாகவே நிகழ்கின்றன. ஆன்ம உணர்வு ஆகாரமாக இல்லையென்றால் புலன்களோ மனமோ எதுவும் இயங்காது.

நமக்குப் பின்னால் நமது உடல்–மனச் சேர்க்கைக்குப் பின்னால் இருப்பது ஆத்மா. எல்லா இயக்கங்களும் நடைபெறுவது ஆத்மாவால். இதுவே கதை தரும் பாடம்.

மனத்தால் தேடு:

தேவர்கள் ஒவ்வொருவரும் சென்று, அந்த யட்சன் யாரென்று அறிய முடியாமல் தோல்வியில் திரும்புகிறார்கள். நம்முடைய புலன்களும் இந்த தேவர்கள் போன்றதே! பொதுவாக, நம்முடைய புலன்களால் இறைவனை அறிய முடியாது!

கடைசியாக, தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் செல்கிறான். இந்திரன் என்பது **மனம்** என்று பார்த்தோம். அவன் சென்றபோது, அந்த யட்சன் மறைந்து விட்டான். ஆனால், அந்த இடத்தில் தேவி தோன்றினாள். உமா தேவியைக் கண்ட இந்திரன் அந்த யட்சன் யார் என்பதை தேவியிடம் கேட்டு உண்மையை உணர்வதாக இனி வருகின்ற நான்காவது அத்தியாயத்தின் முதல் மந்திரம் சொல்கிறது.

பொதுவாக, அனைத்து புலன்களுக்கும் தலைமையாக இருப்பது மனம். அந்த மனத்தால்தான் இறைவனை தேட வேண்டும். ஆனால், மனத்தால் இறைவனை அறிய முடியாது. அதே மனம் தன்னுடைய வேலையாட்களான புலன்களைக் கொண்டும் இறைவனை அறிய முடியாது என்பதை எல்லா உபநிஷதங்களும் ஒரே குரலில் உரக்கக் கூறுகின்றன. அதையே இந்த கேன உபநிஷதத்திலும் காண்கிறோம். ஆணவமாக வந்த இந்திரனைக் கண்டதும் யட்சன் மறைந்ததாக இந்தக் கதை குறிப்பிடுகிறது.

யட்சன் யாரென்று அறிய முடியாமல் தோற்று நின்ற இந்திரன் தேவியிடம் பிரார்த்தனை செய்த போது, யட்சனைப் பற்றிய உண்மையை அவள் தெரிவித்தாள். அதாவது, மனத்தால் இறைவனை, அவரது உண்மை நிலையில் அறிய முடியவில்லை. அதே மனம் தனது ஆற்றலின்மையை உணர்ந்து, அந்த தூய அறிவாகிய பரமனிடம் தன்னைச் சமர்ப்பித்து, சரணாகதி செய்தால், அந்தத் தூய அறிவாகிய பரமனே தன்னை அந்த மனதின் உயர் பரிமாணமான விழித்துக் கொண்ட புத்தியின் வாயிலாக காட்டிக் கொடுப்பான். இந்த அறுதி உண்மையை அறிய வேண்டும் என்றே உபநிஷதங்கள் கூறவருகின்ற கருத்து.

நமது உடலும், மனமும் இயங்குவது யாரால்? என்ற கேள்வியுடன் உபநிஷதம் ஆரம்பித்தது. ஆத்மாவே என்று அடுத்த மந்திரம் அதற்கு பதிலளித்தது. வாழ்க்கையின் ஒவ்வொரு க்ஷணத்திலும், ஒவ்வொரு செயல்பாட்டிலும் அதனை உணர்பவனே உண்மையில் **ஆன்ம அனுபூதி** பெற்றவன் என்பதை இரண்டாவது அத்தியாயத்தில் 4 – வது மந்திரத்தில் கண்டோம். தூய அறிவாகிய பரமனிடம் பக்தி கொண்டு, அவரிடம் மனதை முழுமையாக ஒப்படைக்கும்போது மட்டுமே, ஆன்ம அனுபூதியைப் பெறலாம் என்பதை இதற்கு முந்தைய அத்தியாயத்தில் பார்த்த கதை கூறியதையும் கண்டோம். இனி அதை அடைவதற்கான **அடிப்படை சாதனைகள் என்ன?** என்பதை இனி வரும் மந்திரங்கள் கூற உள்ளன.

அடிப்படை சாதனைகள்:

தேவியிடம் பிரார்த்தனை செய்து இந்திரன் உண்மையை அறிந்தான். அதாவது, ஆன்ம அனுபூதிக்குப் பிரார்த்தனை வேண்டும். பிரார்த்தனையுடன் சில அடிப்படை சாதனைகளும் வேண்டும். அவைகள் பற்றி இந்த அத்தியாயம் கூறுகிறது.

தேவி உணர்த்திய உண்மை

सा ब्रह्मेति होवाच ब्रह्मणो वा एतद्विजये महीयध्वमिति
ततो हैव विदाञ्चकार ब्रह्मेति ॥ १॥

ஸா ப்ரஹ்மேதி ஹோவாச: ப்ரஹ்மணோ வா எதத் விஜயே மஹீயத்வமிதி:
ததோ ஹைவ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ‖ 1 ‖

பொருள்:

<u>தேவி இந்திரனிடம் கூறத் தொடங்கினால்:</u>

'யட்சனாக வந்தது, எல்றையற்ற, எல்லாவற்றையும் அறியும் தூய அறிவாகிய கடவுள். அவரது படைப்புக்கு பின்னால், அவரே எல்லாமாக இருந்துக் கொண்டு எல்லாவற்றையும் வழி நடத்துகின்றார் என்ற அடிப்படை உண்மையை அறியாமல், அவரது வெற்றியை நீங்கள் உங்களது வெற்றியாக எண்ணிக் கொண்டாடி மகிழ்ந்தீர்கள்' இதனை உங்களுக்கு உணர்த்தவே அவர் யட்சனாக வெளிப்பட்டார் என்று தேவி கூறினாள். இவ்வாறு உமா தேவி கூறியதைக் கேட்ட இந்திரன் யட்சனாகத் தோன்றியது கடவுளே என்பதை அப்போதுதான் அறிந்தான்.

அனைத்து பிரஜாபதிகளுக்கும் தலைவன் என்ற ஆணவத்தில் யட்சனைப் பார்த்து வருகின்றேன் என்று ஆர்வமாக வந்த இந்திரன் தன்னால் யட்சனைப் பார்க்க முடியாது என்பதைக் கண்டவுடன், அங்கு வெளிப்பட்ட தேவியைச் சரணடைந்தான். அவள் அவனுக்கு யட்சனின் உண்மையை உணர்த்தினாள். 'இந்திரனே நீ சுதந்திரமானவன் அல்ல! உனக்குப் பின்னால் பவித்ரமான பரமன் இருக்கின்றான் என்பதை என்றுமே மறக்கக் கூடாது என்பதை அவனுக்கு அறிவுறுத்தினாள்.

இந்த சம்பவத்தை நாம் நம்முடைய நடைமுறை வாழ்க்கையோடு ஒப்பிட்டு புரிந்துக் கொள்ள முயற்சிக்கலாம்.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற பெரிய, பெரிய நிறுவனங்களில் முதலீடு போட்டு, அதற்கான அனைத்துவித ஏற்பாடுகளையும் செய்து, அதன் நிர்வாகங்கள் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருப்பவர் அந்த நிறுவனத்திற்காக முதலீடு செய்த முதலாளி.

ஆனால், அவர் ஒருவராகவே எல்லாவற்றையும் கையாள முடியாது என்பதினால், தனக்கு கீழ் உதவிக்காக சில மேனேஜர்கள், சில அதிகாரிகள், நிர்வாகிகள் என தன் நிறுவனத்தை வழி நடத்த வேலையாட்களாக நியமித்திருப்பார். அந்த வேலையாட்களில் தலைமை மேனேஜர் என்ன செய்வார் என்றால், அவருக்கு கீழ் பணிபுரிய இன்னும் சில பணியாட்களை நியமித்துக் கொள்வார். இதுதான் நம் நடைமுறையில் உள்ள தொழில் சார்ந்த வாழ்க்கை.

ஆனால், முதலாளி என்னவோ அமைதியாக நல்லவராகத்தான் இருப்பார். ஆனால், அவரால் நியமிக்கப்பட்ட மேனஜர் மற்றும் அதிகாரிகள் ஆடுகிற ஆட்டம் பார்த்தால், அவர்களே அந்த நிறுவனத்தின் முதலாளிகள் போல நடந்துக் கொள்வார்கள். இதைத்தான் நாம் இன்றளவும் நடைமுறையில் பார்க்கின்றோம்.

இந்த உண்மையை நாம் இப்போது இங்கு பொருத்திப் பார்ப்போம்.

இப்படித்தான், நம்முடைய நிறுவனமான எண்சாண் உடம்புக்கு முதலாளி யார்? என்றால், எல்லாவற்றையும் அறிகின்ற தூய அறிவாகிய **ஆத்மா**. அந்த ஆத்மாவுக்கு கீழ் பணி செய்பவர்கள்தான் இந்த மனமும், புலன்களும்.இதிலே, இந்த மனதினால் உண்டாக்கப்பட்ட இன்னும் சில பணியாட்கள்தான் நம்முடைய எண்ணங்கள் எனும் பல்வேறு உணர்ச்சிகள். இப்படித்தான் நமது உடம்பில் புலன்கள் மற்றும் மன இயக்கம் நடைபெறுகிறது.

ஒரு நிறுவனத்தில் ஏதாவது பிரச்சனைகள் என்றால், அதற்கு சரியான தீர்வு என்பது, அந்த நிறுவனத்தின் முதலாளியால் மட்டுமே தர முடியும். அவருக்கு கீழ் பணி புரிகின்ற மேனேஜர்கள், நிர்வாகிகள் மற்றும் சூப்பர்வைசர்கள் என எவராலும் சரியான தீர்வு தர முடியாது.

அதுப்போல, நமது நிறுவனமான உடல், புல்ன்கள் மற்றும் மனம் போன்றவைகளைக் கொண்டு நாம் வாழும் வாழ்க்கையில் ஏதாவது பிரச்சனை என்றால், நமது முதலாளியாகிய

ஆத்மாவை அணுகினால் மட்டுமே, அவரால் சரியான தீர்வு தர முடியும். ஏனெனில், எல்லாவற்றிற்குமான தீர்வு அவரிடம் மட்டுமே கிடைக்கும்.

ஆனால், ஒரு முதலாளியை எப்படி அணுகுவது? அது அவ்வளவு சுலபம் அல்ல! அதற்கான அதிகாரம் கொண்ட அந்த நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டரைக் கொண்டுதான் முதலாளியை நம்மால் அணுக முடியும்.

அதாவது, ஒரு நிறுவனத்தில் நாம் அணுக வேண்டியது, எல்லாவற்றிற்கும் மேலே இருக்கின்ற தலைமை நிர்வாகியான மேனேஜிங் டைரக்டரை சந்திக்கும்போது மட்டுமே, நமது பிரச்ச்னைகளை முதலாளியிடம் எடுத்துக் கூறி, அதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதுப் போல, நாம் இந்த புலன்களையும், எண்ணங்களை கையாளுகின்ற மனதையும் கொண்டு, இவைகளுடன் போராடுவதினால் பயன் கிடைக்காது. அதாவது, நம்மிடமுள்ள புலன்கள் மற்றும் மனம் இவைகளுக்கு மேலே தலைமைப் பொறுப்பில் இருக்கும் மேனேஜிங் டைரக்டர் எனும், நம் புத்தியிடம் பிரச்சனைகளைக் கொண்டு சென்று, விவேகத்தினால் விடைக்காண முயற்சித்தால் மட்டுமே, அந்த புத்தி, தூய அறிவாகிய ஆத்மாவைக் காட்டிக் கொடுக்கும்.

அப்படியில்லாமல், எண்ணங்கள் என்ற சூப்பர்வைசர்கள், சக பணியாட்கள் என்ற உணர்ச்சிகளுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது, நம்முடைய கதி அதோ கதிதான்! ஆக, இந்த உப நிஷதம் கூறவருகின்ற கருத்து, எல்லாம் யாரால்? என்று பார்த்தால், எல்லாமே அந்த தூய அறிவாகிய ஆத்மாவால் என்று புரியும்.

அதே சமயம், அந்த தூய ஆத்மாவாகிய இறைவனை இந்திரியங்களாலும், மனதினாலும் அடையவோ, அறியவோ முடியவே முடியாது. அதேசமயம், அந்த மனதை மகத்தான புத்தி சக்தியாக பிரகாசிக்க வைக்கும்போது, அந்த விழுப்புற்ற புத்தி ஆத்மாவைக் காட்டிக் கொடுக்கும்.

கதையில் வருவதுப்போல, மனம் என்னும் இந்திரனே தேவர்களின் தலைவன் என்னும் அடிப்படையில் அவனே அனைத்தையும் அறிந்த அகங்காரம் கொண்டவனாகவும், அவனிடம் வேலையாட்களாக உள்ள தேவர்களாகிய புலன்களும்கூட எதையுமே தங்களால் தனித்து அறிய முடியாத நிலையில் கர்வம் கொண்டு காரியமாற்றுகின்றன.

ஆனால், மனமாகிய இந்திரனது சக்திகள் எல்லாம் தூய அறிவாகிய பிரம்மத்தால் வழங்கப்பட்டவைகள் என்பதை தேவி உணர்த்திய பின்புதான் இந்த உண்மை அந்த மனமாகிய இந்திரனுக்குப் புரிந்தது. இங்கு **தேவி** என்ற உருவகம் நம்முடைய **புத்தி** ஆகும்.

## ஆத்மாவை அறிந்தவன் மேலானவன்:

ஆத்மாவை அறிந்தவனே உண்மையான நிறைவு பெறுகிறான் என்பதை #2:5 இல் கண்டோம். இனி தொடரும் இரண்டு மந்திரங்களில் அத்தகையோரின் பெருமை மேலும் பேசப்படுகிறது.

तस्माद्वा एते देवा अतितरामिवान्यान्देवान्यदग्निर्वायुरिन्द्रस्ते
ह्येनन्नेदिष्ठं पस्पर्शुस्ते ह्येनत्प्रथमो विदाञ्चकार ब्रह्मेति ॥ २॥

தஸ்மாத் வா ஏதே தேவா அதிதராமிவான்யான்தேவான் யதக்னிர் வாயுரிந்த்ரஸ்தே
ஹ்யேனன்னேதிஷ்ட்டம் பஸ்பர்கஸ்தே ஹ்யேனத் ப்ரதமோ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ll 2 ll

பொருள்:

அக்கினி, வாயு, இந்திரன் ஆகிய தேவர்கள் மற்ற தேவர்களை விட மேலானவர்கள். ஏனெனில், இவர்கள் கடவுளை நெருங்கித் தொட்டிருக்கிறார்கள். முதன்முதலாக அவரை அறிந்திருக்கிறார்கள்.

तस्माद्वा इन्द्रोऽतितरामिवान्यान्देवान्स
ह्येनन्नेदिष्ठं पस्पर्श स ह्येनत्प्रथमो विदाञ्चकार ब्रह्मेति ॥ ३॥

தஸ்மாத் வா இந்த்ரோ அதிதராமிவான்யான் தேவான்ஸ
ஹ்யேனன்னேதிஷ்ட்டம் பஸ்பர்ச ஸ ஹ்யேனத் ப்ரதமோ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ll 3 ll

பொருள்:

எனவே, இந்திரன் மற்றவர்களை விட மேலானவன். ஏனெனில், அவன் கடவுளை இன்னும் நெருங்கித் தொட்டிருக்கிறான். முதன்முதலாக அவரை அறிந்திருக்கிறான்.

இந்த மேற்கண்ட இரண்டு மந்திரங்களுக்கான பொருள் என்னவெனில், பரமானகிய ஆத்மாவை அந்த புலன்களும், மனமும் புறத்திலிருந்து அறிந்து வைத்துக் கொண்டுள்ளன. ஆனால், அந்த பரமன் அவைகளின் அனுபவத்திற்கு வர முடியவில்லை. அதாவது, நாம் நடைமுறையில், நம்முடைய நிறுவனத்தின் முதலாளி பற்றி தெரிந்து வைத்திருப்போம். ஆனால், நாம் அவரை சந்திக்கின்ற வாய்ப்பு கிடைக்கவே கிடைக்காது.

அவரை சந்திக்க விரும்பி, நாம் நம்முடன் பணிபுரியும் சக தொழிலாளிகளை அணுகினாலோ, அல்லது அவர்களுக்கு மேற்பட்ட மேனேஜரை அணுகினாலோ, அது நடக்காது. அதுவே, நாம் அவர்கள் அத்தனைப் பேருக்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்ட தலைமை நிர்வாகியான மேனேஜிங் டைரக்டரை அணுகினால், எளிதாக அவர் நம்மை முதலாளியிடம் அழைத்துச் செல்வார்.

இதுப்போலத்தான், இங்கு, புலன்கள், மனம் நேரடியாக ஆத்மாவை அனுபவமாக அறிய முடியாது. அதுவே, அந்த மனம் அடைந்த ஆத்ம ஞானத்தினால், பிரகாசிக்கும் புத்தியைக் கொண்டு அணுகினால், பரமனாகிய ஆத்மா அனுபவமாகும் என்பதே இங்கு சாஸ்திரம் கூற வருகின்ற சாரம்.

அதாவது, இதுவரை நாம் பார்த்த மேற்கண்ட மூன்று மந்திரங்கள் கூறவருகின்ற கருத்து என்னவெனில், ஆத்மாவை, புலன்களாலும், மனதினாலும் அறிய முடியாது என்பதைக் கேட்டவுடன் எல்லோரும், இறைவனைப் பார்க்கவே முடியாது என்ற தீர்மானத்திற்க்கு வந்துவிடுகின்றனர்.

நம்முடைய நடைமுறை பேச்சு வழக்கில் **"கேனப்பயல்"** என்ற வார்த்தையை நாம் அனைவரும் கேள்விப்பட்டிருப்போம். அந்த வார்த்தையை யாராவது நம்மைப் பார்த்து சொன்னால், நமக்கு உடனடியாக கோபம் வரும். ஆனால், உண்மையில் அது கெட்ட வார்த்தை கிடையாது. ஏனென்றால், கேன என்றால், 'யாரால்?' என்று ஏற்கனவே பார்த்தோம். இங்கு கேனப் பயல் என்று கூறப்படும் நபர்கள் இதுப்போன்று கேள்விகளை மட்டுமே கேட்டுக் கொண்டிருபார்கள். ஆனால், அவர்கள் அதற்கான பதிலை அறிய விரும்ப மாட்டார்கள். இவர்களுக்கு எத்தகைய வழிமுறைகளைக் கையாண்டு, எளிமையாக இந்த ஆன்மவியல் பாடங்களை எடுத்துக் கூறினாலும் இவர்கள் அதை காது கொடுத்துக் கூட கேட்க மாட்டார்கள். ஆனால், பெரிய அறிவாளி போன்று காட்டிக் கொள்வதற்காக வேறும் கேள்விகளை மட்டுமே கேட்டுக் கொண்டிருப்பார்கள். இவர்களைத்தான் நம் முன்னோர்கள் 'கேனப்பயல்' என்று அழைத்தனர்.

யாரொருவன், இந்த இந்திரியங்களையும், மனதையும் கடந்து அந்த மகத்தான பரமனை எதைக் கொண்டுதான் எளிதாக அனுபவமாக்க முடியும் என்ற கேள்வியை கேட்டு, அதற்கான ஆழமான தேடுதல்களில் உண்மையிலேயே ஈடுபடுகின்றானோ? அவனுக்கு மட்டுமே, அவனது புத்தி விழித்துக் கொள்கின்றது. அவர்களுக்கு மட்டுமே இதுப்போன்ற **ஆன்மவியல்** கல்வி கிடைக்கப் பெறுகின்றது.

அவ்வாறு ஆன்மவியல் கல்வி கிடைக்கப்பெற்றவன் '**இறைவன் என்ற ஒருவன் இருந்தால், அவனைக் காண வேண்டும்! இல்லாவிட்டால் அந்த இறைவன் இல்லாமல்**

**இருப்பதே மேல்!**' என்று எல்லோருக்கு எடுத்துக் கூறவும் முடிந்தது. அவரே, நம் அனைவராலும் போற்றப்படும் **சுவாமி விவேகானந்தர்** என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

## ஆன்ம அனுபூதியின் உயர் பரிமாணம்:

வாழ்க்கையின் ஒவ்வொரு க்ஷணத்திலும் ஒவ்வொரு செயல்பாட்டிலும் ஆன்ம உணர்வை உணர்வதுதான் உண்மையான **ஆன்ம அனுபூதி** என்பதை கடந்த இரண்டாவது அத்தியாயத்தில் 4 – வது மந்திரத்தில் கண்டோம். இந்த அனுபூதியின் மற்றொரு பரிமாணத்தை இனிவரும் மந்திரங்கள் கூறுகின்றன. நமது ஒவ்வொரு செயலிலும் ஆன்ம உணர்வைக் காண்பது போல, இந்த உலகம் முழுவதிலுமே இறை உணர்வைக் காண்பது ஆன்ம அனுபூதியின் உயர் பரிமாணம் ஆகும்.

## எல்லாம் இறைவனின் சக்தி:

இறைவனின் பெருமையை இந்த மந்திரம் கூறுகிறது. இறைவனைப் பணிந்து வாழ வேண்டும். ஏனெனில், அனைத்தும் அவராலேயே நிகழ்கின்றன.

तस्यैष आदेशो यदेतद्विद्युतो व्यद्युतदा३
इतीन् न्यमीमिषदा३ इत्यधिदैवतम् ॥ ४॥

தஸ்யைஷ ஆதேசோ யதேதத் வித்யுதோ வ்யத்யுததா
இதீன் இன்யமீ மிஷதா இத்ய(அ)திதைவதம் ‖ 4 ‖

பொருள்:

கடவுளைப் பற்றிய விளக்கம் இது. ஆகா! மின்னல் மின்னுவது அவரால். இமைகள் தானாகவே இமைப்பதும் அவரால், ஆகா! இது அவரது தெய்வீக மகிமை.

இதைக் கேட்டவுடன், அதெல்லாம் சரி! மின்னல் அவர் மூலமாகவே மின்னட்டும். இடி அவர் மூலமாகவே இடிக்கட்டும். ஆனால், கண் சிமிட்டுவது அவரால் எப்படி? நானல்லவா கண்களை சிமிட்டுகின்றேன் என்பார்கள்.

காரணம், இவர்கள் உடலின் மூலமாக செய்யும் செயல்கள் எல்லாம் தங்களால் நிகழ்கின்றன என்று கருதுகின்றார்கள். அதாவது, புறத்திலே நாம் எதை செய்தாலும், அது

நம்மால் மட்டுமே நடக்கின்றது என்பது இவர்கள் எண்ணம். மேலும் இவர்கள் இந்த உடலை போற்றாமல், இந்த உடலை வருத்தும் பல பயிற்சிகள் எல்லாம் செய்து, தங்கள் அகங்காரத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். ஆனால், உண்மையில், உடலின் உள்ளே, வெளியே என எந்தக் காரியமும் இவர்களாகவே செய்ய முடியாது.

யோசித்துப் பாருங்கள்!

புறத்தில் வாய் வழியாக நாம் உண்ணும் உணவுகள் எதுவாக இருந்தாலும், அது உடலுக்குள்ளே அதே உடலுக்குத் தேவையான இரத்தம், எலும்பு, மஜ்ஜை, நிணநீர் என எப்படி சப்த தாதுக்களாக நம் உடலுக்குள்ளேயே உண்டாகுகின்றது.

அதன் பிறகு, அத்தகைய சத்துக்களின் எஞ்சிய கழிவுகள் நம் உடலுக்குள்ளேயே மலம் மற்றும் சிறுநீராக மாற்றப்பட்டு, அவைகள் வெளியேறும் விந்தை இன்னும் அதிசயம்.

அது எப்போது வெளியேற வேண்டும். எப்படி வெளியேற வேண்டும். அதற்கான தொடக்கம் மற்றும் முடிவு என அதற்கு ஏதாவது வால்வு வைத்துக் கொண்டு நாம் விரும்பும்போது, திறந்து விடவும், நாம் போதுமென்று நினைத்தவுடன் மூடி விடவும் அது ஒன்றும் நாம் உபயோகப்படுத்தும் குடிநீர் பைப் இல்லை.

ஆகவே, இறைவனின் இத்தகைய வைபவத்தை நன்கு உணர்ந்துக் கொண்ட ஞானிகள் எல்லாம் அவன் செயல்! என்கின்றனர். இதற்கான ஒரு கதையைப் பார்ப்போம்.

ஒரு நாட்டு அரசனிடம் அமைச்சர் ஒருவர் பணியாற்றினார். அவரது சுபாவம் நாட்டில் எது நடந்தாலும் '**எல்லாம் நன்மைக்கே – எல்லாம் இறைவன் செயல்!**' என்று சொல்லி, சுருக்கமாகப் பேசி முடித்து விடுவார்.

அவரது வார்த்தையில் அரசனுக்கு அவ்வளவு திருப்தி இல்லை. ஒரு முறை அரசன் பழத்தை நறுக்கும் போது அவரது கை விரலில் காயம் ஏற்பட்டு விட்டது. அரசன் அந்த காயத்தை அமைச்சரிடம் காட்டி என்ன சிகிச்சை செய்யலாம்? என்று கேட்டார். அதற்கு அந்த அமைச்சர் '**எல்லாம் நன்மைக்கே – எல்லாம் இறைவன் செயல் – அவனன்றி ஓர் அணுவும் அசையாது**' என்று எப்போதும் போல பேச ஆரம்பித்தார்.

கையில் உண்டான காயத்தினால் வலியில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அரசனுக்கு வந்ததே கோபம்! யார் அங்கே? இந்த அமைச்சரைக் கொண்டு போய் சிறையில் அடையுங்கள் என்று உத்தவிட்டான்.

அரசனின் கட்டளைப்படி அந்த அமைச்சரும் சிறையில் அடைக்கப்பட்டார். அதன் பிறகு அரசன் வைத்தியரை வரவழைத்து, அவர் தந்த மூலிகைகளைக் கசக்கி சாறு பிழிந்து, அவர் மூலமாகவே கையில் ஒரு கட்டும் போட்டுக் கொண்டார்.

இந்த நிலையில் அந்த நாட்டு மக்கள் அரசரை சந்திக்க வந்தனர். அவர்களிடம் அரசன் என்ன வேண்டும் என்று கேட்டான். அந்த நாட்டு மக்களும், "மன்னர், மன்னவா! எங்கள் கிராமங்களுக்குள் வன விலங்குகள் புகுந்து ஆடு, மாடுகளைக் கொன்று குவிக்கின்றன. தாங்கள் அவைகளை வேட்டையாடி எங்களையும் எங்கள் வளர்ப்பி பிராணிகளையும் காப்பாற்ற வேண்டும்." என்றனர்.

இதைக் கேட்ட மன்னவன் சரி நாளையே செய்துவிடலாம் என்று தீர்மானித்து, காவலர்கள் புடை சூழ, அவனது படைகளுடன் வேட்டைக்குப் புறப்பட்டான். காட்டு விலங்குகளை எல்லாம் வேட்டை ஆடினான். ஆனால், அன்று எப்போதும் போல அரசனுடன் வழக்கமாக வரும் அமைச்சரோ சிறையில் அடைக்கப்பட்டதால், அரசனது பேச்சுத் துணைக்குகூட ஆள் இல்லாமல், அரசன் காவலர்களை எல்லாம் சற்று ஓய்வு எடுங்கள் என்று கூறிவிட்டு, இவர் மட்டும் தனியாக ஓய்வு எடுக்க ஒரு மரத்தடியில் போய்ப் படுத்தார்.

அந்த நேரத்தில் அந்த காட்டுப் பகுதியில் வசிக்கின்ற காட்டுவாசிகள் அரசன் அசந்து தூங்கும் நேரம் பார்த்து, காவலர்களுக்குத் தெரியாமல், அவரது வாயில் சத்தம் போட முடியாதவாறு துணியை திணித்து, கடத்திக் கொண்டு, அவர்கள் வாழும் காட்டுப் பகுதிக்கு கொண்டு சென்று விட்டனர்.

அந்த காட்டு வாசிகள் நரபலி கொடுக்கும் காபாலிகர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அந்த அரசனை அவர்கள் வணங்கும் காளி தேவிக்கு நரபலி கொடுக்கத்தான் கடத்தி இருக்கின்றனர். இந்த நிலையில், அவர்கள் அந்த அரசனைக் குளிப்பாடி காளிக்கு பலியிட விரும்பி, பலி பீடத்திற்கு அரசனைக் கொண்டு வரும்போது, அவனது கையில் காயம் இருப்பதைப் பார்த்து விட்டனர்.

அவர்கள் வழக்கப்படி, காளி தேவிக்கு பலி இடப்படும் மனிதர்களுக்கு உடலில் காயங்கள் எதுவும் இருக்கக் கூடாது. காயங்கள் இருப்பின் அது காளி தேவிக்கு படைப்பதற்கான சுத்தமான பலியாக இருக்காது என்பது அவர்கள் கருத்து.

அதன்படி, அவர்கள் அந்த அரசனின் கையில் காயம் இருப்பதைப் பார்த்தவுடன், அடடா! இவன் நம்முடைய காளி தேவிக்கு ஏற்ற சரியான படையல் இல்லை என்பதினால், அந்த அரசனை அங்கிருந்து துரத்தி விட்டனர்.

அவ்வாறு துரத்தப்பட் டஅரசன் படைவீரர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, மீண்டும் தன் படை சூழ நாட்டுக்குத் திரும்பி வந்தான். இந்த நிலையில், அவன் அந்த அமைச்சரை சந்திக்க விரும்பி, அவரை சிறையிலிருந்து அழைத்து வாருங்கள் என்று கூறினான்.

சிறையிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்ட அமைச்சரிடம் நடந்த சம்பவங்களைக் கூறி, இதற்கு தாங்கள் என்ன சொல்லப் போகின்றீர்கள் என்று கேட்டான். அதற்கு அந்த அமைச்சரும் வழக்கமான தமது பல்லவியை ஆரம்பித்தார். "**எல்லாம் நன்மைக்கே – எல்லாம் இறைவன் செயல்**" என்றார். அரசரே! நீங்கள் காயப்பட்டு இருந்ததால், அந்த காபாலிகள் உங்களை கொல்லாமல் விட்டனர். இல்லையென்றால், உங்களை காளிக்கு பலிம் கொடுத்திருப்பார்கள். ஆக, உங்களை காப்பாற்றியது, அந்த கையில் ஏற்பட்ட காயம்தான் என்று அமைச்சர் விளக்கினார்.

**அரசன் கேட்டான்:** "அது சரி; நான் உங்களை சிறையில் அடைத்தேனே. அதுவும் நன்மைக்கோ!" என்று சொல்லி அமைச்சரைப் பார்த்து சிரித்தான்.

**அமைச்சர் சொன்னார்:** "ஆமாம் அரசரே! அதுவும் நன்மைக்குத்தான். அதுவும் இறைவன் செயல்! என்று கூறிவிட்டு, அரசரே, அன்று நீங்கள் வேட்டைக்குப் போனபோது, நான் உங்கள் பேச்சு துணைக்கு உங்கள் கூட வந்திருந்தால், ஒருசமயம், அந்த காபாலிகள் உங்களை மட்டும் தனியாகக் கடத்தினால், அந்த நேரத்தில் என்னால், மற்ற காவலர்கள் எச்சரிக்கை செய்யப்படுவார்கள் என்பதால், என்னையும் சேர்த்தே கடத்தியிருப்பார்கள்.

அந்த நிலையில், உங்கள் உடலில் இருந்த காயத்தைப் பார்த்து, உங்களை பலி கொடுக்காமல் விட்டு, விட்டு, எந்த காயங்களும் இல்லாத என்னை அல்லவா பலி கொடுத்திருப்பார்கள். இதிலிருந்து, '**எல்லாம் நன்மைக்கே – எல்லாம் இறைவன் செயல்**' என்றார்.

ஆத்மா:

உலகெங்கும் நிறைந்துள்ள இறைவனே நம்மில் ஆத்மாவாக உள்ளார். நமது உடல்–மனச் சேர்க்கைக்குப் பின்னால் உள்ளது அந்த ஆத்மாவே.

अथाध्यात्मं यद्देतद्गच्छतीव च मनोऽनेन
चैतदुपस्मरत्यभीक्ष्णँ सङ्कल्पः ॥ ५॥

அதாத்யாத்மம் யதேதத் கச்சதீவ ச மனோ(அ)னேன
சைததுபஸ்மரதி அபீக்ஷ்ணம் ஸங்கல்ப: ॥ 5 ॥

பொருள்:

இனி ஆத்மா பற்றிப் பார்ப்போம். ஆத்மாவின் காரணமாகவே மனம் புறவுலகை நாடிச் செல்வதும், புறப்பொருட்களை நினைப்பதற்கும், அவைகளைப் பற்றி கற்பனை செய்வதற்கும் ஆத்மாவே காரணம்.

(மேலை நாடுகளின் இறையியலுக்கும் சனாதன தர்மத்தின் ஆன்மவியலுக்கும் உள்ளதொரு முக்கியமான விஷயம் நம்முடைய பண்டைய முனிவர்களின் ஆன்ம தத்துவங்களே ஆகும். மேலை நாடுகளில் SOUL எனப்படும் ஆத்மா என்பது ஆரம்ப காலங்களில் அவர்களால் ஒத்துக் கொள்ளப்படவேயில்லை. அதற்கு பிறகு அவர்கள் ஆத்மா இருப்பதை ஒப்புக் கொண்டாலும், ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆத்மா என்பதாக மட்டுமே ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

ஆனால், நமது பண்டைய சனாதன தர்மத்திலோ மதங்கள் தோன்றாத நிலையில், அதாவது, ஆன்மீக ரீதியாக அணியும் உடைகளில், காவி உடை அணிவதா? அல்லது வெள்ளை உடை அணிவதா? என்ற பாகுபாடுகளையும்கூட பார்க்க முடியாத, உடைகள் உண்டாக்கப்படாத காலத்தில், உடலை மறைக்க வெறும் **மர உரி** தரித்து மட்டுமே வாழ்ந்து வந்த நம்முடைய முன்னோர்கள் ஆத்மாவைப் பற்றி பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே விசாரம் மேற்கொண்டனர் என்பதை பண்டைய நூல்களான **வேதம், உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம்** போன்ற சான்றுகளுடன் அறிய முடிகின்றது.

பொதுவாக, **மனம், புத்தி, ஆத்மா** ஆகியவற்றுக்குள்ள வித்தியாசம் நமது பண்டைய ரிஷிகளால் மிகத் தெளிவாக உபநிஷதங்களின் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது. அதுவே, சனாதன தர்மத்தின் சிறப்பு. மனம் என்பது, அந்த ஆத்மாவாகிய உணர்வின் ஒர் அதிசய சக்தி. இந்த மனத்தைப் பற்றி இன்னும் ஆழமாக அறியக்கூடிய விசயங்கள் நம்முடைய சாஸ்திரங்களில் மட்டுமே உள்ளது.

பொதுவாக, நமது உடலில் உள்ள உறுப்புகளில் கால் எனும் உறுப்பு ஏதோ ஒரு இடத்தில் மோதி அடிபட்டு விடுகிறது என்றால், அந்த நிலையில்கூட நாம் காலிலன் வலியை மனதினால்தான் உணர்கிறோம்.

அதாவது, கால் வலி மனதினால் உணரப்பட்டு, மனம் நம் மூளைக்கு இடப்படுகின்ற கட்டளையே ஆகும். அதாவது, நம் உடலில் நடைப்பெறும் மாற்றங்களை மனம் மட்டுமே உணர்ந்து மூளைக்கு காட்டிக் கொடுக்கும். நாம் ஏற்கனவே கூறியதுப் போல, மனம் எனும் மென்பொருள் (Software) இல்லை என்றால், மூளை எனும் வன்பொருள் (Hardware) செயல்பட முடியாது.

இதிலிருந்து, உடலிலுள்ள புலன்களும், மனதினால் மட்டுமே இயக்கப்படுகின்றன என்பது எளிதாகப் புரியும். அதே சமயம் அந்த மனமும் தனித்து இயங்க முடியாது. அதற்கான அதிர்ஷ்டானமாக ஆத்மா இருக்க வேண்டும் என்பதே இந்த மந்திரம் கூற வருகின்ற கருத்து.

ஆத்மாவை எப்படித் தியானிப்பது? :

ஆத்மாவை நமது உடல்–மனச் சேர்க்கைக்குப் பின்னால் உள்ள அறிவு உணர்வாக, உலகையே இயக்குகின்ற இயல்புணர்வாக உபாசிப்பதே உண்மையான ஆத்ம தியானம்.

तद्ध तद्वनं नाम तद्वनमित्युपासितव्यं स य एतदेवं वेदाभि
हैनꣳ सर्वाणि भूतानि संवाञ्छन्ति ॥ ६॥

தத்த தத்வனம் நாம தத்வனம் இத்யுபாஸிதவ்யம்; ஸ ய ஏததேவம்வேதாபி
ஹைனம் ஸர்வாணி பூதானி ஸம்வாஞ்சந்தி || 6 ||

பொருள்:

அத்யாத்மமாக எங்கும் நிறைந்ததாக அறியப்படுத்துவது ப்ரம்மம். இது வெகு அருகிலேயே இருப்பது ப்ரம்மம். ப்ரம்மம் என்று உணரப்படுவது ஆத்மாவே. அந்த ஆத்மா எல்லா உயிர்களிலும் உணர்வாய் நிறைந்திருக்கிறது. அவ்வாறே ஆத்மா அறியப்படுகின்றது.

எல்லா உயிர்களிலும் நிறைந்ததான உணர்வாக மட்டுமே அதனைத் உபாசிக்க வேண்டும். ஆத்மா எல்லா உயிர்களிலும் நிறைந்திருப்பதை யார் ஒருவன் அறிகிறானோ? அவனே எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த முடியும்.

சரி! **ஆத்மாவை** எவ்வாறு **உபாசிப்பது** அல்லது **தியானிப்பது?**

தியானம் என்பது மனம் எதாவது ஒன்றின்மீது மட்டுமே கவனம் செலுத்துவது என்று பொருள் கொண்டால், அது சரியல்ல. ஏனென்றால், அவ்வாறு ஒன்றின்மீது மட்டுமே கவனம் செலுத்த, ஆத்மா என்பது புலன்களுக்கோ, மனதுக்கோ அறியப்படக்கூடிய ஒரு பொருள் அல்ல.

அதாவது, அதை பார்க்கவோ, கேட்கவோ, தொடவோ, முகரவோ, சுவைக்கவோ முடியாது என்று ஏற்கனவே பார்த்தோம். அவ்வாறே, மனதினாலும் ஆத்மா அறியப்பட முடியாது என்று கண்டோம்.

ஆத்மா என்பது நமக்கு வேறாக இருக்கும் ஒன்றாகவும், நாம் உபாசிக்கின்ற **மூச்சு** அல்லது **சிந்தனை** போன்ற ஒரு புறநிலை யதார்த்தம் போன்று பலரும் நினைக்கின்றனர். ஆனால், உண்மை அப்படி அல்ல.

முதலில், **மனம் – ஆத்மா** இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் அறியப்படவேண்டும்.

மனம் என்பது எண்ணங்களின் தொகுப்பு என்று நாம் கூறினாலும், அதன் ஆற்றல் அத்துடன் முடிந்துவிடுவதில்லை. மனதின் மகத்தான ஆற்றல் என்பது, ஆத்மாவுக்கு நிகராக இருப்பினும், அது ஆத்மாவின் பிரதிபலிப்பு மட்டுமே.

இதற்கு நாம் நடைமுறை உண்மைகளை சில ஒப்பிட்டுப் மனதைப் பற்றி புரிந்துக் கொள்ள முயற்சிக்கலாம். இப்போது, நாம் அனைவரும் ஒரு பெரிய திரையரங்கத்திற்கு சென்று திரைப்படம் பார்த்திருக்கின்றோம். அந்த திரையரங்கில் நாம் சென்று அமர்ந்தவுடன், அங்கே ஒரு மிகப்பெரிய வெள்ளைத்திரை ஒன்று காணப்படும். அந்த திரையில்தான் திரைப்படம் திரையிடப்படும்.

அந்த திரையில் படம் ஓட ஆரம்பித்ததும், முதன் முதலாக நாம் பார்க்கும்போது, அதில் இருக்கின்ற உருவங்கள் எல்லாம் நம்மைவிட பத்து மடங்கு பெரியதாக, பூதாகரமாக பார்ப்பதற்கு 50 அடி உயரம் கொண்டதாகக் காணப்படும்.

அதற்குக் காரணம், நம் மனம் இன்னும் அந்த திரையை தன்னுடன் ஐக்கியப் படுத்தாமல், தள்ளி நின்று பார்க்கின்றது. அதுவே, ஒரு சில நிமிடங்களில் நம் மனம் அந்த திரையில், திரைப்படத்தில் ஒன்றிவிட்டவுடன், நமக்கு அந்த மிகப்பெரிய உருவங்கள் எல்லாம் நம்மைப் போன்றே, நம்முடைய ஏதார்த்தமான உயரத்துக்கு ஏற்றவாறே, நம்முடன் சம்பந்தம் கொண்டு இருப்பதுப் போல, அங்குள்ள காட்சிகள் எல்லாம் தெரியும்.

அதாவது, நாமும், அந்த திரைப்படத்துடன் ஒன்றாக ஒன்றிவிட்டோம். அதனால்தான் நம்மால், அதில் வருகின்ற காட்சிகளைப் பிரித்துப் பார்க்க முடியமல், அது நம்முடன் சம்பந்தப் பட்டு நடப்பதுப்போல பார்ப்பதினால்தான் நாம் அங்கு வருகின்ற காட்சிகளுக்கு ஏற்றவாறு அழுகிறோம், சிரிக்கிறோம்.

இது ஒருபுறம் இருக்கட்டும். இதுப்போலவே, நாம் நம் வீட்டில் உள்ள தொலைகாட்சி பெட்டியில் ஒரு திரைப்படம் பார்க்க அமர்ந்திருக்கின்றோம். அப்போது, நாம் அந்த டிவியில் பார்க்கும் போது, அதில் தெரியும் படங்கள் எல்லாம் வெறும் ஒரு அடி உயரம் மட்டுமே இருக்கும். ஆனால், நாம் அந்த படத்துடன் ஒன்றி விடும்போது, அதில் தெரிகின்ற உருவங்கள்

எல்லாம் நம்முடன் சம்பந்தப்பட்டு, நம்முடைய உயரத்துக்கு ஏற்றவாறே அங்குள்ள காட்சிகளில் நாம் ஒன்றி விடுவோம்.

இப்போது, இந்த இரண்டையும் நாம் ஆராயும்போது, மனதின் மகத்தான விளையாட்டு நமக்கு புரிய வரவேண்டும். ஆனால், யாருமே இதைப் புரிந்துக் கொள்வதில்லை. ஏனெனில், மனம் என்பது ஆத்மாவின் ஒரு மாயப் பிம்பம். அது எப்படி வேண்டுமானாலும் உருமாறும்.

சரி! இவ்வாறே ஆத்மா என்றால் என்ன? அதையும் நாம் புரிந்துக் கொள்ளும்போது மட்டுமே, அதை எவ்வாறு தியானிப்பது என்பதும் நமக்கு புலனாகும்.

ஏற்கனவே, திரைப்படம் மூலம் நம் மனம் அடையும் மாற்றம் எவ்வாறு அதன் மிகப்பெரிய உருவத்தையும் (50 அடி உயரம்), மிகச் சிறிய உருவத்தையும் (1 அடி அல்லது 2 அடி உயரம்), நம்முடைய எதார்த்தமான 6 அடி உருவத்துடன் பொருத்திப் பார்க்கும் நிலைக்கு நம்மை தள்ளுகின்றதோ? அவ்வாறே, நம்மிடம் உள்ள புலன்களைக் கொண்டு, **"ஒளி"** என்ற ஒரு வார்த்தையை கேட்ட மாத்திரத்தில், அல்லது ஒளி என்று ஒரு பலகையில் எழுதி வைத்திருப்பதைப் பார்த்த மாத்திரத்தில், உங்கள் மனம் அந்த வெளிச்சத்தை உடனடியாக உங்களுக்குள் பிரகாசிக்கவும் வைக்கும்.

அதாவது, புலன்களால் வெளியே ஒரு லைட் வெளிச்சத்தைப் பார்த்துவிட்டுத்தான் அதை ஒளி என்று ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை. புறப்புலன்களின் உதவி இல்லாமல், அந்த வெளிச்சத்தை மனமே காட்டும்.

**இது எப்படி சாத்தியமானது?**

ஏற்கனவே, ஒளி என்ற வார்த்தையின் அடிப்படையில், நம் மனம் வெளிச்சமான ஒன்றைக் கண்டு, அது சூரிய ஒளி அல்லது விளக்கு ஒளி என்பதின் அர்த்தத்தில் இதுதான் ஒளி என்று சித்தத்தில் பதிவு செய்து வைத்துக் கொண்டுள்ளது. அதன் காரணமாகவும், அந்த வெளிச்சத்தின் அனுபவம் அந்த மனதிற்கு ஏற்கனவே ஏற்பட்டதின் வாயிலாகவும், அந்த ஒளி என்ற வார்த்தையைக் கேட்டவுடன் மனம் அதனை உடனடியாக சித்தத்தில் இருந்து வெளிக் கொண்டுவந்து, பிரகாசமான வெளிச்சம் போன்று, நம்முடைய மனக் கண்ணால் காட்டி விடுகின்றது.

**இந்த ஆற்றல் மனதிற்கு எப்படி உண்டானது?**

நமது வீட்டில் வைக்கப்பட்ட ஒரு பளிங்குபோன்ற ஒன்றுமற்ற நிலைக் கண்ணாடி முன்பு நின்று நம்மை நாம் பார்த்தால், அந்தக் கண்ணாடி நம்மை நமக்கு பிரதிபலிப்பு

முறையில் காட்டிக் கொடுக்கும். அதிலே, நம் அழகை இரசிக்கிறோம். 'எனது கண்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன', எனது முகம் எப்படி வசீகரமாக இருக்கின்றது என நினைத்துப் பெருமையடைகிறோம்.

இதற்கு அந்தக் கண்ணாடி என்றாவது **ஆமாம்/இல்லை** என்று சொல்கிறதா?

அவ்வாறு சொல்லாது. காரணம், அந்த நிலைக் கண்ணாடியால், தன் முன்னால் இருப்பதை மட்டும் அப்படியே பிரதிபலிக்க முடிகிறது. அவ்வளவே.!

நிலைக் கண்ணாடி எப்படி தன் முன்னால் எது இருந்தாலும், அதனை அப்படியே பிரதிபலிக்குமோ? அதுப்போலத்தான் நமது மனம்.

உண்மையில் இந்த மனம் என்பது, ஆத்மாவின் பிரதிபலிப்பு மட்டும்தான்.

அதாவது, பளிங்குப்போன்ற ஒன்றுமற்ற தூய அறிவாகிய ஆத்மாவிடம் எந்தக் களங்கமும் இல்லை! அதை அப்படியே பிரதிபலிக்கச் செய்ய வேண்டிய மனம் நம்முடைய குழந்தைப் பருவம் முதல் இன்றளவும் என்னவெல்லாம் எண்ணங்களாக ஏற்றிவைத்துக் கொண்டுள்ளதோ? அவைகளை எல்லாம் பிரதிபலித்துக் காட்டும் நிலைக்கு வந்துவிட்டது.

பொதுவாக, நம் வீட்டில் உள்ள நிலைக் கண்ணாடி ஒன்றுமற்ற பளிங்கு போன்று இருப்பதினால், அதன் முன்னால் என்னவெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றதோ? அல்லது அந்த கண்ணாடி வைக்கப்பட்ட அறையில் என்னவெல்லாம் உள்ளதோ? அதையெல்லாம் பிரதிபலித்து காட்டிக் கொண்டிருக்கும்.

இதுவே கண்ணாடியின் இயல்பு.

இதுவே, அந்தக் கண்ணாடியில் எதுவுமே தோன்றாத நிலை உண்டாக்க வேண்டுமானால், நாம் என்ன செய்ய வேண்டும்? அந்த பளிங்கு போன்ற களங்கமில்லாத கண்ணாடி முன்பு, அதைப் போன்றே அதன் எதிரில் இன்னொரு பளிங்கு போன்ற கண்ணாடியை கொண்டு நிறுத்தினால், அங்கே தெரியும் இரண்டு கண்ணாடிகளிலும் ஒன்றுமே தெரியாது. மேலும், அந்த இரண்டும் ஒன்றானது போன்று காணப்படும். அதாவது, அந்தக் கண்ணாடி தன்னைப் போன்றே இன்னொரு கண்ணாடியைத்தான் பார்க்கும்.

அப்போது, அந்த இரண்டு கண்ணாடிகளிலும் ஒன்றுமே தெரியாது. அங்கு ஒரு வெறுமை அல்லது ஒன்றுமற்ற தன்மையை நாம் பார்க்கலாம்.

இதுப்போலத்தான் மனதின் இயல்பு.

அதாவது, ஏராளமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும் மனம், அந்தக் கண்ணாடியைப் போன்று எப்போதும், ஏதாவது எண்ணங்களை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். அங்கு ஒரு வெறுமை அல்லது வெற்றிடம் உண்டாகாது.

இதற்கு என்ன செய்ய வேண்டும்?

அதற்கு, அந்த மனதில் எதுவுமே தோன்றாத நிலை உண்டாக்க வேண்டுமானால், அந்த பளிங்கு போன்ற களங்கமற்ற தூய அறிவாகிய ஆத்மாவை அந்த மனதிற்கு முன்னால் கொண்டு நிறுத்த வேண்டும். அது எப்படி நிறுத்த முடியும் என்றால், நாம் ஏற்கனவே கூறியதுப்போல, அந்த ஆன்மவியல் பாடங்களின் வாயிலாக அறிந்துக் கொண்ட ஆத்மாவின் உண்மை நிலையை மனதிற்கு உணர்த்த வேண்டும். அதுவே, மனதின் முன்னால் ஆத்மாவை நிறுத்துவது என்று பொருள்.

இந்த நிலையில், மனதின் முன்னால், நிறுத்தப்பட்ட தூய அறிவாகிய ஆத்மாவின் மகோன்னதமான, சுயம்பிரகாச ஒளியில், மனம் ஆத்மாவைக் கண்டதும், அங்கே மனமும், ஆத்மாவும் ஒன்றாகிவிடும்.

அதாவது, இரண்டு கண்ணாடிகளும் ஒன்றை ஒன்று சந்திக்கும்போது, அங்கே ஒன்றுமற்ற தன்மை உண்டாவதுப்போல, இங்கு மனமும், ஆத்மாவும் ஒன்றையொன்று சந்திக்கும்போது, அங்கே மனதில் ஒன்றுமற்ற தூய அறிவுத் தன்மை மட்டுமே பிரகாசிக்கும்.

கண்ணாடி எப்படி நாம் அழகாக இருக்கிறோமா அல்லது இல்லையா? என்று கேட்டால் எதுவும் சொல்லாதோ? அப்படியே இங்கு மனமும் ஆத்மாவின் தூய அறிவுத் தன்மையை சொல்ல முடியாது.

அதுவே, **மனமற்ற நிலை**. அதுவே **ஆத்ம நிலை**.

இந்த **ஆத்ம அனுபூதி** நிலை என்பது, எப்படி இருக்குமென்றால், எப்படி நாம் வெளிப்படுத்தும் **அன்பு, இரக்கம், கருணை** போன்றவற்றை யாரும் புலன்களால் பார்க்க முடியாது. ஆனால், அதை அனுபவமாக உணரலாம். அப்படித்தான் இந்த ஆத்ம அனுபவமும் நம்மால் உணரப்படும்.

இந்த அனுபவம் – யாருடைய முன்னிலையில் நடைபெறுகின்றன. அது நம்முடைய உணர்வு வெளியில் உள்ள **விழிப்புணர்வு, தன்னுணர்வு, நான்** என்ற **சத்** ஆகிய இருப்பு

என்று கூறப்படுகின்ற நம்முடைய தன்னிருப்பு நிலையினால் மட்டும்தான் அந்த தூய அறிவாகிய **சித்** எனும் உணர்வு **அறிவு ஒளியாக** அனுபவமாகின்றது.

அந்த நிலையில், இந்த **சத், சித்** ஆகிய இரண்டும் சேர்ந்ததின் விளைவாக அங்கு **ஆனந்தம்** அடையப்படுகின்றது. இதுவே, **சச்சிதானந்தம்** அல்லது **ஆத்மா** என்று அழைக்கப்படுகின்றது.

இது ஆரம்பமும், முடிவுமற்றது. அது உருவமற்றது, குண நலப்பண்புகள் ஏதும் இல்லாதது, எல்லையற்றது. அது மட்டும்தான் "**நான்**" என்ற நம்முடைய சுயம். அந்த சுயத்தில் நாம் எப்போதும் இருக்கும் நிலைக்குத்தான் **ஆத்ம அனுபவம், ஆத்ம அனுபூதி** என்றெல்லாம் கூறப்படுகின்றது.

அதை புலன்களால் காண முடியாது. ஆனால், அந்த ஆத்மா தன்னில் தானாய், தன்மயமாய் ஒவ்வொன்றிலும் உணர்வு வெளியாகப் பரவியுள்ளது. இதை உணர வேண்டும், இதை உணர்ந்து அனுபவிக்க வேண்டியது. ஆக, ஆத்மா என்பது ஓர் அனுபவம்.

ஆகவே, இருக்கின்ற ஒன்றேயான ஆத்மாவை அதற்கு வேறாக யார் தியானிப்பது? உண்மையில், அந்த ஆத்மாவாகிய தன்னுணர்வில் நாம் எப்போதும் இணைந்திருக்கின்ற நிலையில், அந்த ஆத்மாவே **தியானம்** எனப்படுகின்றது. அதுவே நம் இயல்பு. அது நமக்கு வேறாக ஒரு புறப்பொருள் போன்று தியானிக்கக் கூடிய ஒன்றல்ல. மேலும், அது தியானிக்கக் கூடிய நிலையில், உருவத்தில் இருக்கின்ற பௌதீகப் பொருளும் அல்ல.

ஆக, எவன் ஒருவன் இந்த நிலையிலே, 'தன்னில் தானாய் இருக்கின்ற ஆத்மாவாகிய தன்னையே எல்லா உயிரினங்களிலும் காண்கிறானோ? அவன் யாரையும் வெறுப்பதில்லை' என்கிறது ஈசாவாஸ்ய உபநிஷதம்.

யஸ்து சர்வாணி பூதானி ஆத்மனி ஏவ அனுபச்யதி |
ஸர்வபூதேஷு சா(ஆ)த்மானம் ததோ ந விஜுகுப்ஸதே || – (ஈசாவாஸ்ய உபநிஷதம்)

எதையும் வெறுக்காத ஒருவனிடம் அன்பு மட்டுமே நிறைகிறது. அவனை மட்டுமே அனைத்து உயிரினங்களும் உண்மையில் நேசிக்கின்றன.

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்!** என்றும் கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை. உலகிலேயே மிக அதிகமானவர்கள் ஏங்குவது பகட்டுக்காகவோ, பணத்துக்காகவோ, பொருளுக்காகவோ அல்ல! அவர்களது ஏக்கம் அன்புக்காகத்தான்.

சந்தேகமிருந்தால் முதியோர் இல்லங்களுக்குப் போனால் புரிந்து கொள்ளலாம். சரி உலகிலுள்ள எல்லா உயிரினங்களின் மீதும் அன்பு வைப்பது சாத்தியமா என்று நமக்கும் ஒரு சந்தேகம் வரக் கூடும். ஆனால், அவ்வாறு அன்பு வைப்பது சாத்தியமே என்று பல செல்லப் பிராணிகளின் வளர்ப்பாளர்கள் நிரூபிக்கின்றனர். அவ்வளவு ஏன் சாதாரண பூனை, நாய்க்குட்டியைப் போல திபெத்திய லாமாக்கள் புலிகளையும், சிங்கங்களையும் கூட செல்லப் பிராணிகளைப் போல, அன்புடன் வளர்ப்பதை நாம் கண்டிருப்போம்.

ஆனால், எக்காலத்திலும் இந்த அன்பு எனும் வரையறைக்குள் முழுவதும் கொண்டு வர இயலாத ஒரே உயிரினம் மனிதன் மட்டுமே. ஏனென்றால், எத்தனைதான் மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் அன்பு செலுத்திப் பழகினாலும் கூட, அவர்களின் உள்ளுக்குள் ஓர் சந்தேகம் எனும் எண்ணம் வந்துவிட்டால், அடுத்த க்ஷணம் அன்பு என்பது, அவர்களுக்குள் கோபம், பகைமை, பொறாமை எனும் ஆயிரமாயிரம் கேடுகளை விளைவிக்கும் மனிதர்களை நாம் அனுபவத்தில் காண்கிறோம்.

ஆயினும், அதையெல்லாம் தாண்டி, எந்தவிதமான பிரதிபலனும் எதிர்ப்பார்க்காமல், நம்மிடம் அன்பு மட்டுமே செலுத்துவது என்பது எத்தனைப் பேரால் சாத்தியம் என்றால், அது ஆன்மவியல் பாடங்களைப் படித்த ஒரு சிலரே ஆகும்.

நம்மிடம் எப்படி வேண்டுமானாலும் மற்றவர்கள் நடந்து கொள்ளட்டும். ஆனால், நாம் அவர்களிடம் அன்பை மட்டுமே செலுத்தி வாழ்வோம் என்று நினைப்பது எத்தனை உன்னதமான விஷயமாக இருக்க முடியும்? அதைத்தான் உபநிஷதம் வலியுறுத்துகிறது.

உண்மையான அன்பு என்றால், என்னவென்று வெகுசிலரே அறியும் அளவிற்கு அன்பு தவறாகப் பயன்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. நுண்ணிய எள்ளுக்குள் ஒவ்வொரு பகுதியிலும் எண்ணை இருப்பதைப் போல, படைப்பின் ஒவ்வொரு பகுதியிலும் அன்பு ஊடுருவி இருக்கின்றது. ஓர் ஆரஞ்சுப் பழத்தின் சுவையை சொற்களால் விளக்க முடியாது. அதை உண்ணும்போதுதான் அதன் சுவை தெரியும். அதுப்போல, அன்பை வார்த்தைகளால் விளக்க முடியாது. அதுப்போலத்தான் ஆத்மாவையும் வார்த்தைகளால் விளக்க முடியாது. ஏனெனில் இரண்டும் ஒன்றே. ஆகவே, அதை அனுபவிக்கும் போது மட்டுமே புரியும்.

**அடிப்படை சாதனைகள்:**

ஆன்ம அனுபூதியைப் பெறுவதற்கான அடிப்படை சாதனைகள் பற்றி இந்த மூன்று மந்திரங்களும் கூறுகின்றன.

उपनिषदं भो ब्रूहीत्युक्ता त उपनिषद्ब्राह्मीं वाव त
उपनिषदमब्रूमेति ॥ ७॥

உபநிஷதம் போ ப்ருஹீத்யுக்தா த உபநிஷத் ப்ராஹ்மீம் வாவ த
உபநிஷதம் அப்ருமேதி ॥ 7 ॥

பொருள்:

**சீடன்:** 'குருநாதா ரகசிய அறிவை எனக்கு உபதேசியுங்கள்.'

குரு: 'இதுவரை ரகசிய அறிவையே உனக்கு சொன்னேன். ஆத்மாவை எப்படித் தியானிப்பது என்பது பற்றியே உனக்குச் சொன்னோம்.'

உபநிஷதங்கள் ரிஷிகளின் அனுபூதியிலிருந்து பிறந்தவைகள். அவைகள் அனைத்தும் அனுபூதி பெற்ற முனிவர்களின் அனுபவ வார்த்தைகள். எனவே வெறும் சம்ஸ்கிருத அறிவாலோ, பாடல்களைப் பாடும் புலமையாலோ அவற்றைப் புரிந்து கொள்ள முடியாது. அதனால்தான், சாதனைகள் என்பது, சாஸ்திரம் கூறவருகின்ற ஆன்மவியல் பாடங்களைக் கற்றுணர்ந்தவன், அவனே, இறைவனில் நிலைபெற்றவன், சாஸ்திரத்தின் மீதும், சத்குருவின் மீதும் சிரத்தை உள்ளவன், தன்னையே ஆஹுதியாக அளித்து வாழ்பவன். இத்தகையோருக்கு மட்டுமே ஆன்ம ஞானத்தை அளிக்க வேண்டும் என்று உபநிஷதங்கள் உறுதிபடக் கூறுகின்றன.

எனவே, இதுவரை குரு உபதேசித்த உபநிஷத உண்மையை அறிவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சீடன் கேட்கிறான்.

(பெரும்பாலும் நம்மில் பலர் ஆன்ம அனுபூதி பெறுவது, மோட்சம் பெறுவது போன்றவைகள் எல்லாம் துறவு நிலையுடன் சம்பந்தப்படுத்தியே நினைத்துக் கொள்கிறோம். ஆனால், துறவறத்தில் இரண்டு நிலைகள் உள்ளன.

அவைகள், 1. **வித்வத் சந்நியாஸம். 2. விவிதிஷா சந்நியாஸம்.**

வித்வத் சந்நியாஸம்:

ஆன்மவியல் பாடங்களைக் கேட்டு நன்கு புரிந்துக் கொண்டு, மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்தல், எப்போதும், ஆத்ம நிஷ்டையில் நிற்றல் போன்ற சுய–உணர்வு விழிக்கப் பெற்றவர்கள் தங்களது திருமண வாழ்வில் குடும்பக் கடமைகளை எல்லாம் சரியாகச் செய்து முடித்துவிட்டு, இனி இந்த சமுதாயத்திற்காக வாழ்வது என்ற தியாக மனப்பான்மையில் மேற்கொள்கின்ற சந்நியாஸம் "**வித்வத் சந்நியாசம்**" என்று அழைக்கப்படுகிறது.

யாக்ஞவல்கிய முனிவர் இதற்கு உதாரணம். ஏற்கனவே உயர்ந்த உண்மையை உணர்ந்த அவர், தனது மனைவி மைத்ரேயிக்கு உலகைத் துறக்கும் எண்ணத்தை அறிவித்தார். பின்னர் அவர் சந்நியாசி ஆனார்.

இத்தகைய வித்வத் சந்நியாசிகள் வாழ்க்கை எப்படி இருக்கும் என்றால், 'இறைவனைத் தேடி' சுயத்தை உணரும் ஆர்வத்தில், இவர்களை நாடி வருகின்றவர்களுக்கு, அவர்களை வேதங்களைப் படிக்க வைப்பதிலும், அதைப் பற்றி சிந்திக்க வைப்பதிலும், அவர்களை சுயத்தை உணரும் தியானத்தில் ஈடுபடுத்துவதிலுமே காலத்தைக் கழிப்பார்கள்.

இவர்கள் யாருமே, கர்மகாண்டத்தை ஆதரிக்க மாட்டார்கள், அதற்கான பூசைகள், ஜப, தபங்கள், மூச்சுப் பயிற்சி, யோகாசனம் போன்றவைகளை போதிக்கவும் மாட்டார்கள். வெறும் ஆன்மவியல் கல்வியை மட்டுமே அறிவுறுத்துவார்கள்.

இதுப்போன்று, கர்ம காண்டத்தை கைவிடுகின்ற இவர்களைப் பற்றி ஜாபால உபநிடதத்தில், பிராமணரால் புனித நூலைக் கைவிடுவது அனுமதிக்கப்படாது என்று அத்ரி ஆட்சேபிக்கும்போது, பரமஹம்ச சன்னியாசிக்கு **சுய அறிவே உண்மையான புனித நூல்** என்று யாக்ஞவல்கியர் பதிலளிக்கிறார் (ஜபாலா.உப்.5).

எனவே, வெளிப்புற புனித நூல்களையும் கைவிடும் சந்நியாசி பரமஹம்ச ச ந் நியாஸ வகையைச் சேர்ந்தவர்கள் என்று சாஸ்திரம் கூறுகின்றது. மேலும், இந்த உபநிஷத்தில் வித்வத் சந்நியாசிகள் உடைகள், உத்திராட்ச மாலைகள் போன்ற வெளிப்புற அடையாளங்கள் ஏதுமில்லாமல், எல்லோரையும்போல, மிகச் சாதாரணமாக மட்டுமே வாழ்வார்கள். ஆனால், அவர்கள் பார்ப்பவர்களுக்கு பைத்தியக்காரர்கள் போன்று மதிக்கப்பட்டாலும், அவர்களைப் பொருத்தவரை எல்லாம் அறிந்த அறிவாக பிரகாசித்துக் கொண்டிருப்பார்கள்.

பொதுவாக, வித்வத் சந்நியாசியாசிகளை பரமஹம்சர் என்பதாகப் பார்ப்பதினால், இவர்கள் புதிதாகப் பிறந்த குழந்தையைப் போன்று இருப்பார்கள். அதற்குக்காரணம், அவர்கள் மனதை துறந்தவர்கள். மனதிலே ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களாக உள்ள இந்த உலகத்தை இவர்கள் துறக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், அவர்களைப் பொருத்தவரை, புறத்திலுள்ள இந்த உலகம் ஒரு பொழுது போக்கிற்கான திரையரங்கம் போன்றது. இந்த உலகம் என்ற திரையரங்கில் பலவாறான திரைப்படங்கள் திரையிடப்படும். அதில் நடக்கின்ற காட்சிகள் எல்லாம் திரைப்படம் போல கற்பனையானவைகள். அவரவர்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு இந்த உலகம் விரிகின்றது என்பதினால், இவர்களைப் பொருத்தவரை இந்த உலகம் உண்மையில்லை. அதனால், இவர்கள் உலக விவகாரங்களினால் வருகின்ற சுக, துக்கங்களினால் பாதிக்கப்பட மாட்டார்கள். இந்த உலகம் என்பது இவர்களைப் பொருத்தவரை வெள்ளைத் திரையில் ஓடுகின்ற திரைப்படம் போன்றது அவ்வளவே! அவைகளை வெறும் **சாக்ஷி** மாத்திரமாக பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

## விவிதிஷா சந்நியாஸம்:

இந்தப் பிறவியிலோ அல்லது முற்பிறவியிலோ வேதங்களைப் பயின்று, வேதங்கள் விதித்த சடங்குகளை நிறைவேற்றுவதன் விளைவாக ஒருவனுக்கு ஆத்ம உணர்வின்மீது ஆசை எழுகிறது. அத்தகைய ஆசையின் விளைவாக, ஆன்மவியல் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற '**ஆன்மாவை அறியும் ஆசை**' காரணமாக, குடும்பத்தில் இருந்துக் கொண்டே மனதளவில் பற்று வைக்காமல் வாழ்வது எப்படி என்ற தேடுதலின் காரணமாக, இவர்களது தனிப்பட்ட தேவைகளை மட்டுமே விட்டுவிடுவது அல்லது தன்னுடைய சுயத்தை அறிவதற்காக இந்த உலகியல் வாழ்க்கையில் இருந்து ஒதுங்கி வாழ்வதுதான் "**விவிதிஷா சந்நியாசம்**" எனப்படுகின்றது.

(விவிதிஷா என்றால் '**ஆன்மாவை அறியும் ஆசை**'). இந்த சந்நியாசம் மூலம்தான் பரமனை அறிய முடியும் என்பதினால், இதற்காக, ஆன்மவியல் கல்வியைக் கற்றுக் கொடுக்கும் வித்வத் சந்நியாஸிகளாக இருக்கின்ற சத்குருவைக் கண்டு, அவரிடம் தங்களை முழுமையாக ஒப்படைத்து சரணடைவது.)

ஸ்தோத்திரன் ப்ரஹ்ம நிஷ்டனாக இருக்கும் வித்வத் சந்நியாசிகளாகிய சத்குருவை சரணடைந்து, விவிதிஷா சந்நியாஸ வாழ்க்கையை வாழ விரும்பும் சாதகர்கள், அவர்கள் மூலமாக கற்றுக் கொண்ட **ஆன்மவியல்** கல்வியினால், அவர்களது அறியாமைகள் எல்லாம் அகற்றப்பட்டு, அதன் வாயிலாக பிரகாசித்த ஆத்ம ஞானத்தினால், இவர்களும் மனதளவில்

எதன்மீதும் பற்று வைக்காமல், எல்லாம் ஈஸ்வரக் காரியம், இதில் '**என் செயலாவது ஒன்றுமில்லை!**' என்ற புரிதலில், கொடுக்கப்பட்ட வாழ்க்கையில் வருகின்ற சுக, துக்கங்களை ஈஸ்வரப் பிரசாதமாக ஏற்றுக் கொண்டு, "**உன் இஷ்டம்! என் இஷ்டம்!**" என்ற அர்பணிப்பு மனப்பான்மையுடன் இல்லற தர்மத்திலேயே இருந்துக்கொண்டு, அவர்கள் வாழ்க்கையை வாழ்வதுதான் '**விவிதிஷா சந்நியாஸம்**' ஆகும்.

இதிலே, ஒருசிலர் மனைவி/கணவர் இறந்துவிட்டவுடன், இல்லற தர்மத்திலிருந்து, முழுவதுமாக தன்னை விடுவித்துக் கொண்டு, உடைகளை மாற்றுகின்ற துறவறம் என்ற காவி உடை தரித்த சந்நி யாஸிகளாகவும் மாறிவிடுகின்றார்கள். இவர்களுக்கு இன்னும் தனிமை தேவை என்பதினால், இத்தகைய உடைமாற்றும் முடிவுக்கு வருகின்றனர்.

அதற்குக் காரணம், விவிதிஷா சந்நியாசத்தைப் பற்றி, **பிருஹஸ்பதி ஸ்மிருதி** கூறும்போது, உலக வாழ்க்கையை பொருளற்றதாகக் கருதுபவர்கள் திருமணத்திற்கு முன்பே சந்நியாசிகளின் வரிசையில் நுழைகிறார்கள் என்கின்றது. இவர்களைப் பற்றி மகாபாரதம் (14.43.39) கூறும்போது, இவர்கள் இல்லற தர்மத்தை மேற்கொள்ளாமலேயே சுயஅறிவை அடைவதை நோக்கமாகக் கொண்டு இத்தகைய சந்நியாஸ வாழ்க்கையை ஏற்கின்றார்கள் என்கின்றது.

ஆனால், இல்லற தர்மத்தைக் கடைப்பிடிக்கக் கூடிய ஒரு மனிதன் ஆன்ம அனுபூதியைப் பெறுவது இயலாத காரியம் என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். ஆனாலும், அவர்களுக்கும் கூட, அவர்களது மனதளவில் ஆன்மாவை அறியும் ஆசை உண்டானால் போதும், அவர்களுக்கான பாதை திறக்கப்பட்டு, ஆன்மவியல் கல்வி கிடைக்கப்பெற்று, எல்லாவற்றிலும் தன்னையே காண்கின்ற உயரிய பேருணர்வுத் தன்மையில் நுழைகின்ற நுட்பமான புத்தி விழிப்புற்று, அதன் வாயிலாக, அவர்களது அறியாமைகள் அகன்று, அவர்களும் **ஆன்ம அனுபூதி** அடையமுடியும் என்பதை, நம்முடைய சனாதன தர்மத்தில் உள்ள சாஸ்திரங்கள் பலப்பல கதைகள் மூலம் நமக்கு விளக்கியும் இருக்கின்றது. ஆனால், அத்தகைய கதைகளை வெறும் கதைகளாக மட்டுமே பார்க்காமல், அதன் உள்ளார்ந்த உட்பொருளை உணரக்கூடிய விவேகத்தையும் அடைந்தவனே பகுத்தறிவுப் பரிமாணத்தில் உயர்ந்த மனிதன் என்று பார்க்க வேண்டும்.)

ரகசிய அறிவிற்கு அடிப்படை:

तस्यै तपो दमः कर्मेति प्रतिष्ठा वेदाः सर्वाङ्गानि
सत्यमायतनम् ॥ ८॥

தஸ்யை தபோ தம: தர்மேதி ப்ரதிஷ்ட்டா வேதா: ஸர்வாங்கானி
ஸத்யமாயதனம் ॥ 8 ॥

பொருள்:

அந்த ரகசிய அறிவிற்கு, தவம், புலக்கட்டுப்பாடு போன்ற சாதனைகள் அடிப்படையாக உள்ளன. வேதங்கள் அதன் அங்கங்களாக உள்ளன. உண்மையே அதன் உறைவிடமாக உள்ளது.

உபநிஷத உண்மையை உணர்ந்து, ஆன்ம அனுபூதி பெற மூன்றுவிதமான சாதனைகளை இந்த மந்திரம் கூறுகிறது.

1. தவம், புலக்கட்டுப்பாடு போன்ற சாதனைகள்.
2. வேத பாராயணம், உயர் உண்மைகளைக் கூறுகின்ற நூல்களைப் படித்தல்.
3. உண்மையைக் கடைப்படித்தல், விளைவுகளைக் கருத்தில் கொள்ளாமல் பிடிவாதமாக உண்மை பேசுவது என்ற பொருளில் இதைக் காணக் கூடாது.

வாய்மை எனப்படுவது யாதெனின்
யாதொன்றும் தீமை இலாத சொலல். – திருக்குறள்.

அதாவது, பிறர் மனத்தை நோகச் செய்யாத நிலையில், அவர்களைப் புண்படுத்தாத நிலையில் உண்மையைப் பேச வேண்டும்.

அத்தகைய பேச்சை வாக்கினால் செய்கின்ற தவம் என்று வகைப்படுத்துகிறது கீதை.

'உண்மை பேச வேண்டும், இனிமையாகப் பேச வேண்டும். இனியதல்லாதவறைப் பேசக் கூடாது. இதுவே, சான்றோர்கள் காலம்காலமாகக் கடைப்பிடிக்கின்ற **தர்மம்** என்று மனுவும் கோருகிறார்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. – திருக்குறள்.

1. அனுத்வேககரம் வாக்யம் ஸத்யாம் ப்ரியஹிதம் ச யத் ।
வாங்மயம் தப உச்யதே ॥ – (கீதை 17.15)

2. ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யாம் அப்ரியம் ।
ப்ரியம் ச நான்ருதம் ப்ரூயாத் ஏஷ தர்ம: ஸனாதன: ॥ – (மனு 4.138)

ஆக, ஆன்ம அனுபூதியைப் பெற முக்கியப் படிக்கட்டாக **சாதன சதுஷ்டயம்** என்ற பண்பு நலன்களை மனிதன் கடைப்பிடிக்க வேண்டும்.

**உறுதியாக அறிபவன்:**

यो वा एतामेवं वेदापहत्य पाप्मानमनन्ते स्वर्गे
लोके ज्येये प्रतितिष्ठति प्रतितिष्ठति ॥ ९॥

யோ வா எதாமேவம் வேதாபஹத்ய பாப்மானமனந்தே ஸ்வர்கே
லோகே ஜ்யேயே ப்ரதிஷ்ட்டதி ப்ரதிஷ்ட்டதி ‖ 9 ‖

யார் இத்தகைய வேத உபநிஷதங்களை உறுதியாக அறிகிறானோ? அவனது அறியாமைகள் அகன்ற நிலையில், அடைந்த ஆத்மஞான அறிவுப் பிரகாசத்தினால், அவனது பாவங்கள் அகன்று, புண்ணிய லோகமாகக் கருதப்படும், சுகமான வாழ்க்கையாகிய ஸ்வர்க லோக வாழ்க்கையை இங்கேயே வாழுகின்ற வாய்ப்பு அவனிடத்தில் நிலைப்பெற்றுள்ள ஆன்ம உணர்வில் திளைத்திருப்பதினால் உண்டாகின்றது.

அவனே, எல்லாவற்றையும் அர்பணிப்பு மனப்பான்மையுடன் அணுகி, அனைத்திலும் தன்னைக் கண்டு வாழ்கின்றான். அவனே ஆன்ம அனுபூதி பெற்றவனாகிறான் என்பதாக இந்த கேன உபநிஷதம் நிறைவு பெறுகிறது.

॥ इति केनोपनिषदि चतुर्थः खण्डः ॥
இதி கேனோபநிஷதி சதுரத்த: கண்ட: ‖

॥ इति केनोपनिषत् ॥
இத்துடன் கேன உபநிஷதத் தத்துவங்கள் நிறைவு பெறுகிறது.

ஓம் தத் ஸத்!

# கேன உபநிஷதம்



ப்ரக்ருன்